www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

2012 மார்ச்
சுற்று 18
சுழற்சி 141
விலை 30/=

புதிய பூமி PUTIYA BOOMI

## வடக்கில் 38,000 பெண்கள் விதவைகளாக!

வடக்கு மாகாணத்தில் 38,126 பெண்கள் தமது கணவன்மாரை இழந்து "விதவைகளாக" இருந்து வருகின்றனர். இத்தொகையானது வடக்கின் பெண்கள் சனத்தொகையில் 10 சதவீதமாகும். அதேவேளை மனைவிமாரை இழந்த கணவன்மாரின் எண்ணிக்கை 8,783 பேராவர். இது வடக்கின் மொத்த ஆண்களின் சனத்தொகையில் 2.5 வீதமாகும். மேலும் வடக்கில் 15-34 வயதுடையோரில் 2.025 பேர் விதவைகளாக உள்ளனர். இது மொத்த வடக்கு விதவைகளின் எண்ணிக்கையில் 5.3 வீதமாகும். அதேவேளை 35-54 வயதுக் கிடைப்பட்ட விதவைகளின் சதவீதம் 41.2மும் 70 வயதுக்கு மேற்பட்ட விதவைகளின் சதவீதம் 28.3மும் ஆகும். மேற்படி புள்ளிவிபரத்தை அரசாங்கபுள்ளிவிபரத்திணைக்களம் வெளியிட் டுள்ளது. இப்புள்ளிவிபரம் யுத்தத்தால் விதவைகளானவர்களின் தொகை குறிப்பிட்டுக் கூறப்படவில்லையாயினும் யுத்தத்தால் விதவைகளான பெண்களின் தொகையே அதிகம் என்பதில் மட்டுமன்றி மேற்படி தொகை புள்ளி விபரத்துக்கும் அப்பால் கூடுதலாக இருக்கும் என்பதே உண்மையாகும்.

# ஜெனிவாத் தீர்மானம்!

## வென்றாலும் தோற்றாலும் கதை ஒன்றுதான்




அமெரிக்கா ஜெனிவாவில் இலங்கைக்கெதிராக கொண்டுவந்துள்ள தீர்மானம் ஏற்கனவே பலராலும் எதிர்பார்க்கப்பட்டது போன்று போர்க்குற்ற-மனித உரிமை மீறல்கள்களுக்கு நீதி கேட்கும் ஒன்றாக அமையவில்லை. அது அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தை கண்டிக்கவோ தண்டிக்கவோ முனையும் தீர்மானமல்ல. அந்தத் தீர்மானம் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் வரம்பிட்கு உட்டதாகவே உள்ளது. அப்படியிருக்க, அதை ஒரு பெரிய சாதனையாகப் புலம்பெயர் தமிழ்த் தேசிய பிரமுகர்களும் உள்ளூரில் தமிழீழக் கனவுகளுக்கு உயிர் கொடுக்கிறவர்களும் காட்ட முயல்கின்றார்கள். அவர்களைப் பன்மடங்கு மிஞ்சி, ஏதோ இலங்கை அரசாங்கத்தை ஒரு பேரழிவு எதிர்நோக்குவது போலவும் அதிலிருந்து அரசாங்கத்தையும் நாட்டையும் காப்பாற்றுவதற்காக அரசாங்கமும் அதன் பிரமுகர்களும் கடுமையாக முயன்று வருவது போலவும் ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. அதை முன்னிறுத்திக் கொழும்பிற் பெரிய ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. இவை மேலும் தொடரப்படலாம்.

போரின் போது பல கடும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றால் பொதுமக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கக் கணக்கெடுப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மேற்கொண்ட குழறுபடியான கணக்கெடுப்பு குடிமக்கள் எண்ணாயிரம் பேர் அளவிலேயே போரில் இறந்துள்ளனர் என்று கண்டுபிடித்துள்ளது. யாருமே இறக்கவில்லை என்ற அறிவிப்பிலிருந்து இது ஒரு பெரும் முன்னோக்கிய பாய்ச்சல்தான். எனினும் இப் புள்ளிவிபரங்கள் உண்மைகளை எட்டுவதற்கு இன்னும் பல இலக்கங்கள் முன்னேற வேண்டும் என்பதே உண்மை.

கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவை நியமித்த நோக்கமே சர்வதேச விசாரணைகளைத் தவிர்ப்பதுதான். அதை நியமிப்பதற்கான ஆலோசனையும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகிற சில வட்டாரங்களில் இருந்தே வந்திருக்கவுங்கூடும். அமெரிக்காவும் மேற்குலகும் இலங்கை மீதான பிரேரணையைப் பற்றிப் பேசுகையில் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் அறிக்கையான டாருஸ்மன் அறிக்கையைப் பற்றிய ஒரு சொல்லேனும் பேசவில்லை. அதைவிடவும் செனல்-4 உண்மையானது எண்பதையும் ஐ.நா அறியும். அவற்றைப் பற்றியெல்லாம் இலங்கை மீதான தீர்மானத்தில் எவ்விதமான கணிப்பும் இல்லை.

கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழு அறிக்கை எப்படிச் சர்வதேச நாடுகட்குக் காண்பிப்பதற்கான ஒரு கண்துடைப்போ அப்படியே ஐ.நா. மனித உரிமைகள் கழகத்தின் 19ம் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ள தீர்மான

தொடர்ச்சி 2ம் பக்கம்

## குடிசன வீட்டு வசதிகள் கணக்கெடுப்பில் மலையக மக்கள்

# மலையகத் தமிழரா? இந்தியத் தமிழரா? இலங்கைத் தமிழரா?

சு. விஜயகுமார்

கலாநிதி எ.எஸ். சந்திரபோஸ் அவர்கள் 26.02.2012 அன்று வீரகேசரி நாளிதழுக்கு "இந்தியத் தமிழர் என்று எப்படிச் சொல்வது?" என்ற தலைப்பிலான கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அக் கட்டுரை தற்போது இடம்பெற்றுவரும் குடிசன, வீட்டு வசதிகள் கணக்கெடுப்பில் மலையகத்தில் வாழும் மக்கள் தங்களை இந்தியத் தமிழர் என்று பதிதல் வேண்டும் என்ற வாதத்தை அடிப்படையாக கொண்டிருந்ததுடன் மலையக மக்களுக்கு இந்தியத் தமிழர் என்ற அடையாளமே ஏற்புடையது என்ற அடிப்படையில் முடிக்கப்பட்டிருந்தது. கலாநிதி அவர்கள் மலையகத்தில் இந்திய வம்சாவழி மக்கள் தங்களை இந்தியத் தமிழர்கள் என்றே தமது அடையாளத்தை குடிசன மதிப்பீட்டின் போது குறிப்பிட வேண்டும் என்று 'தர்க்க ரீதியாக' வாதித்திருந்தார்.

மலையக மக்களில் ஒரு பகுதியினர் வலிந்து தம்மை இலங்கைத் தமிழர் என்று அடையாளப்படுத்தி பெருமிதம் கொள்ளும் போக்கும், இன்னொரு பகுதியினர் நாம் எப்படி இந்தியத் தமிழராக முடியும், நாம் இலங்கைக்கு உரியவர் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழர் என்ற அடையாளப்படுத்தும் நிலையில் இன அடையாளம் வலிந்து ஒருவரால் மாற்றப்பட முடியாது என அக் கட்டுரையில் வலியுறுத்தப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத் தக்கது. எனினும் அவர் இந்தியத் தமிழர் என்ற அடையாளத்தை மலையக மக்கள் ஏற்க வேண்டும் என்று கூறுவதில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகளை நாம் விட்டுச்செல்ல முடியாது.

மலையக மக்கள் தங்களின் இன அடையாளத்தை வெளிப்படுத்துவதற்குக் குடிசன, வீட்டு வசதிகள் கணக்கெடுப்பில் தங்களை இந்தியத் தமிழர்கள் என்று குறிப்பிட வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. மலையக மக்கள் தங்களை இலங்கைத் தமிழர் என குறிப்பிடுவதன் மூலம் மலையக மக்கள் என்ற தேசிய இனத்தின் இருப்பு சட்டரீதியான கேள்விக்கு உட்படுவதனால், மலையக மக்கள் குடிசனக் கணக்கெடுப்பில் தங்களை இந்தியத் தமிழர்கள் என அடையாளப்படுத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடுமாகும். ஆனால் மலையகத் தமிழ் மக்களை இந்தியத் தமிழர்கள் என அழைப்பதே நியாயமானது என்ற வாதம் இன்றைய சூழ்நிலையில் வலிதற்றதாகவே காணப்படுகிறது.


மலையக மக்கள் ஒரு சிறுபான்மைச் சமூகம், தேசிய சிறுபான்மை இனம் என்ற வளர்ச்சியின் அடுத்த கட்டமாக இன்று ஒரு தேசிய இனமாக வளரச்சி பெற்றுள்ளனர். அதற்கு ஆதரமாக மலையக மக்களின் தனித்துவமான அடையாளமும் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக போக்குகளும் இருந்து வந்துள்ளன. கால அடிப்படையில், மலையக மக்கள் இலங்கைக்கு வந்து ஏறத்தாள நூற்றெண்பது வருடங்கள் கடந்துள்ளன. முன்னர்அவர்களை அடையாளப்படுத்த இந்தியத் தமிழர் என்ற பெயர் பயன்பட்டது. 1911 குடிசனக் கணக்கெடுப்பில் பிரித்தானியர் இந்தியத் தமிழர் என்ற பெயரைப் பயன்படுத்தினர். பெருந்தோட்டங்களில் வேலை செய்ய வந்த தொழிலாளர்ளும் வியாபார நோக்கத்திற்காக வந்த வியாபாரிகளும் தங்களை இந்தியத் தமிழர்கள் என்றே தொடர்ந்து வந்த குடிசனக் கணக்கெடுப்புகளில் அடையாளப்படுத்தி வந்தனர். எனவே 'இந்திய' எனும் அடைமொழி ஆங்கிலேயேர் அன்று பயன்படுத்திய ஒன்றாகும். அத்தோடு அன்று (1970 வரை) மலையக மக்கள்இலங்கையைத் தமது தாய் நாடாகக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. எனவே அந்த அடையாளப்படுத்தல் பிரச்சினைக்குரியதாய் அமைய வாய்ப்பிருக்கவில்லை.

எனினும் வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் இன்று நிலைமைகள் பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன. மலையகத் தமிழ் மக்கள் பொதுப் போக்கில் தம்மை இந்தியத் தமிழர்கள் என

தொடர்ச்சி 2ம் பக்கம்

உள்ளே ...

• நாடு நகர சட்டமூலமும் பேரினவாத உள்நோக்கமும்-பக். 04
• மக்களை தாக்கி நிற்கும் விலை உயர்வுகள்-பக். 05
• நாட்டில் பெருகிவரும் கொலைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் -பக். 05
• கொத்துரொட்டியும் தொழிலாளர் சட்டமும் -பக். 07
• உலக மக்களை மேலாதிகத்திற்கு உட்படுத்தும் கருவியாக பண்பாடு-பக். 09
• போரும் பொய்க் காரணங்களும்- ஈரான் அமெரிக்க முறுகல் -பக். 12



நன்றி-இணையம்

www.padippakam.com





# ஐந்து வருடங்கள் கழிந்த பின்பும் தோழர் சுகேசனன் மீது வழக்கும் இல்லை, விடுதலையும் இல்லை!

புதிய-ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் முன்னிலைத் தோழர் எஸ். சுகேசனன் இன்று வரை விடுவிக்கப்படவில்லை. அவர் மீது வழக்கும் தொடுக்கப்படவில்லை. கடந்த 14.02.2007ல் கட்சியின் ஐந்து தோழர்கள் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இரண்டரை-மூன்று வருடங்களின் பின் நான்கு தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஐந்து வருடங்களும் ஒரு மாதமும் கடந்த நிலையில் தோழர் சுகேசனன் விடுவிக்கப்படவில்லை. இது பற்றி ஜனாதிபதிக்கு கட்சி 13.01.2012ல் எழுதியக் கடிதத்திற்கு மேற்படி கடிதம் கிடைத்தமைப் பற்றி இணைப்புச் செயலாளர் அறியத்தந்துள்ளார். எனினும் தோழர் சுகேசனனை விடுதலை செய்யும் படி எமது கட்சி மீள வலியுறுத்துகின்றது. தோழர் சுகெசனன் தெடர்ச்சியாக உடல் நலக் குறைப்பாட்டால் தொடர்ந்தும் அவதியுற்று வரும் அதே வேலை அவருக்கு உரிய சிகிச்சையும் வழங்கப்படாமலேயே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஜெனிவாத் தீர்மானம்... 1ம் பக்கத் தொடர்ச்சி

மும் ஒரு கண்துடைப்பே. அது அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது. ஏனெனில், ஒருபுறம் இரண்டு வருடங்கட்கு முன்பு கொண்டுவர முற்பட்ட தீர்மானம் இலங்கையால் தந்திரமாக முறியடிக்கப்பட்ட அவமானத்திலிருந்து மீளுவது அதற்கு தேவைப்படுகிறது. இன்னொருபுறம் இலங்கையைத் தன்னுடைய மனித உரிமைகள் பொறியில் விழுத்துவதற்கான ஒரு நகர்வு தேவைப்படுகிறது. இலங்கையயைப் பற்றிய கடுமையான தீர்மானம் எதுவும் தோற்கடிக்கப்படலாம். அப்படியாயின் இலங்கையர் பற்றிய ஐ.நா. அமைப்பின் எவ்விதமான விவாதத்தையும் முன்னெடுப்பது இயலாமற் போகலாம். எனவே, இது இலங்கை மீதான மேற்குலக ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவற்கான ஒரு காய்நகர்த்தல் என்பதில் ஐயம் வேண்டாம். அது இலங்கை அரசாங்கத்திற்கும் தெரிந்த விடயம். ஆனாலும் வெளியிற் பேசப்பட இயலாத விடயம்.

“நான் அடிப்பது போல அடிப்பேன் நீ அழுவது போல் அழு” என்ற விதமான நாடகமாகக் கூட இந்தத் தீர்மானம் போய் முடியலாம். ஆனாலும் இலங்கை அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை ஒரு தேசியப் பிரச்சினையாக்கி நாட்டின் அவசரமான பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கு முயலுகிறது. அதன் பயனாக இந்தத் தீர்மானம், வெறுமனே கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்ற மட்டும் கோருகிற போதும் அவற்றைக்கூட நிறைவேற்றத் தடையாக இருக்கக் கூடிய பேரினவாதிகளின் கைகளை அரசாங்கம் விரும்பியோ விரும்பாமலோ வலுப்படுத்தி வருகிறது. ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறும் பட்சத்தில் இது இலங்கை அரசின் மீது கடும் நெருக்கவாரங்கள் பலவற்றையும் கொண்டுவரப்படுவதற்கு வசதியாக்கிவிடும். அதன் மூலம் அமெரிக்கா படிப்படியாக இலங்கையைத் தனது நோக்கங்களுக்கு அடிப்பணிய வைக்கும்.

தீர்மானம் நிறைவேற்றப்படாது போவதால் அமெரிக்க சோர்ந்துவிடப்போவதில்லை. இலங்கையைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர அமெரிக்கா இந்தியாவை முழமையாக நம்பியிருக்க இயலாது. இலங்கையிலும் நேபாளத்திலும் இந்தியாவிலும் ஒப்பிடத்தக்களவு செல்வாக்கைக் கொண்டிருக்கவே அமெரிக்கா வேண்டுகிறது. 1977 முதல் இலங்கையில் உயர்ந்து வந்த தனது ஆதிக்கம் 1987க்குப் பின்பு இந்தியாவிடம் பறிபோனதை அமெரிக்கா விரும்பவில்லை. எனினும் 1990களில் இருந்து இந்திய-அமெரிக்க ஒத்துழைப்பு வலுப்பட்ட சூழலில் இந்திய–அமெரிக்கப் போட்டி தலைமறைவாகவே இருந்து வந்துள்ளது. இப்போது இலங்கையில் இந்தியத் தலையீடுகள் நெருக்கடிகளை நோக்குகின்ற நிலையில் அமெரிக்கா தனது வாய்ப்பைப் பயன்படுத்த அவசரப்படுகிறது.

தனது ஆணைக்குழுவின் குறைபாடான பரிந்துரைகளை நிறைவேற்றக் காலம் தாழ்த்தி வந்த மகிந்த அரசாங்கம் அதற்கு முந்திய திஸ்ஸ விதாரண குழுவின் பரிந்துரைகளை அறவே புறக்கணித்ததும் பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கூட்டம் என்ற பேரில் இழுத்தடிப்பதும் இந்திய நிர்ப்பந்தத்தின் கீழ் தன்னுடன் பேச உடன்பட்ட த.தே.கூட்டமைப்புடனான பேச்சுக்களைப் பயனின்றிச் செய்வதும் பற்றி நாம் அறிவோம். எனவே எந்தப் பயனுள்ள பரிந்துரையும் நடைமுறைப்படும் என்பது எமது எதிர்ப்பார்ப்பாக இருக்க இயலாது.

அரசாங்கம் தனது அலட்சியப் போக்கினால் இந்த நாட்டை மேற்குலகு விரித்துள்ள ஒரு பொறியில் சிக்கவைக்கவே வழிசெய்கிறது. நாட்டின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் மட்டுமன்றி ஐ.தே.கவும் ஜே.வி.பியும் ஆயத்தமில்லை என்பதே நாட்டில் தொடரும் அவலத்திற்கான காரணமாகும். கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வற்புறுத்த, ஜாதிக ஹெல உருமய தவிர்ந்த எக்கட்சியும் தயங்குவதற்கு நியாயமில்லை. குறைந்தது அதையாவது செய்து அதற்கு மக்களின் ஆதரவைத் திரட்டுவார்களா? ஆனால் அது அவர்களால் ஒருபோதும் முடியாதது. பேரினவாதத் திரையின் பின்னால் இருந்து வரும் மகிந்த சிந்தனையும் அதன் ஆளும் அதிகார வர்க்கமும் ஒரு போதும் இணங்கமாட்டாது என்பதே உண்மையானதாகும்.

மலையக மக்கள்..... 1ம் பக்கத் தொடர்ச்சி

அடையளப்படுத்தாது மலையக மக்கள் என அடையாளப்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளது. சிங்கள மக்களும் ஊடகங்களும் மலையக மக்கள் என இன்று அழைப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த அடையாளம், ஆரம்பத்தில், மலையகப் பிரதேசவாதம் என்ற குறுகிய அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டாலும் அது முற்போக்காக வளர்க்கப்பட்டு வருகின்றது. இன்று அது மேலும் முற்போக்கான திசைவழியில் பயணிக்கும் ஒன்றாகக் காணப்படுகிறது. இந்தியத் தமிழர் என்ற அடைமொழி தங்களை இந்த நாட்டிற்கு உரித்தானவர்கள் அல்ல என்பதை காட்டுவதாக மக்கள் நினைப்பதானது பொதுப் போக்காக உள்ளது. அப்படி இருக்க தம்மை இந்தியத் தமிழர் என்று கூற வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. இந்தியாவில் தான் எமது வேர்கள். எனவே எம்மை அடையாளப்படுத்த இந்தியத் தமிழர்கள் என்ற அடைமொழியே ஏற்புடையது என்போமாயின், இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களுங் கூட, 'இந்திய' என்ற அடைமொழியை விலக்க அருகதையற்றவர்களே. எனவே, இன்று இந்தியத் தமிழர் என குறிப்பிடப்படுவதானது தவிர்க்கப்பட்டு, மலையகத் தமிழர் என்னும் தனித்துவத்தை நிலைநாட்டி அவர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பது உறுதியாக நிலைநாட்டப்பட வேண்டும். அதன் மூலமே மலையக மக்களுக்கு எதிரான பேரினவாதச் சூழ்ச்சிகளை முறியடித்து முன்செல்ல முடியும்.

ஒரு இனம் தனது வளரச்சிப்படியில் தன்னை எவ்வாறு அழைக்க வேண்டும் என்பது தொடர்பான பிரச்சினைக்கு வந்தே தீரும். அந்த நெருக்கடிக்கான தீர்வு மக்களின் பாவிப்பினூடாகவே தீர்க்கப்படும். தீர்க்கப்படவும் வேண்டும். அதற்கான அரசியல் வழிகாட்டல் எங்கிருந்து வந்தாலும் ஒரு தேசிய இனத்தின் எதிர்கால இருப்பு, அதன் திசைமார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கும். எல்லா அரசியல் வழிகாட்டல்களும் சாதகாமானவையாக இருக்கும் என்ற முடிவிற்கு வர முடியாது. எனினும் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். எந்த அரசியல் வழிகாட்டல் ஒரு தேசிய இனத்தின் சுய கௌரவத்தையும் சுய இருப்பையும் அடிப்படையாகக் கொண்டு ஏனைய தேசிய இனங்களுடனான சமத்துவ உறவை ஏற்படுத்தி வாழும் நிலையைத் தூரநோக்கில் உருவாக்க முற்படுகிறதோ அதுவே ஏற்புடையதாகும்.

**சு.விஜயகுமார்.**

**புதிய பூமி**

**2012 சந்தா சேருங்கள்– நிதி தாருங்கள்**

தனிப்பிரதி ரூபா.30.00

உள்நாடு

ஒரு வருடம் 600 ரூபா

6 மாதம் 300 ரூபா

(தபால் செலவு உட்பட)

வெளிநாடுகள் 30 அ.டொலர்

(ஒரு வருடம் தபால் செலவு உட்பட)

**புதிய பூமி**

571/15, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு–06.

வங்கி கணக்கிலக்கம்– 15 700 18 335

கொமர்ஷல் வங்கி, கிராண்ட் பாஸ் கிளை

# நாளும் நடக்கும் உலகிலே...

**நற்குணன்**

## யாரிடம் கேட்பது

தமிழர் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவாவுக்கு போய் புதிதாக சொல்வதற்கு அதனிடம் எதுவும் இல்லை. என்பதனால்தான் ஜெனீவாவில் கடந்த ஐ.நா. மனித உரிமைக் கழக கூட்டத்தில் பங்குபற்ற அவர்கள் போகவில்லையா? மனித உரிமை மீறல்கள் பற்றியும் போர் குற்றங்களை பற்றியும் அவர்கள் புதிதாக சொல்ல எதுவுமே இல்லை என்பது ஏற்கத்தக்கது. ஏனெனில் அமெரிக்க வேண்டுகின்ற தகவல்களை வெளிநாட்டு ஊடகங்களும் ஐ.நா. தலைவர் நியமித்த டாருஸ்மன் குழுவும் வழங்கியுள்ளன. எனவே அமெரிக்கா வேண்டுகின்ற விதமாக விசாரணையை வழியுறுத்தவும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு தேவையில்லை என்றாலும் கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு என்று வலியுறுத்துகிற ஒரு போக்கு இருக்கிறது. அது ஆபத்தானது. அதை சுட்டிக்காட்டவும் இலங்கைக்குள்ளே சுதந்திரமானதும் நம்பகமானதுமான ஒரு விசாரணை தேவை என சொல்லவும் ஒவ்வொரு தமிழ்த் தலைமைக்கும் பொறுப்பு இருக்கிறது. அதை ஏன் தட்டிக்கழித்தீர்கள் என்று கேட்டால் நொண்டிச்சாட்டினைச் சொல்லி நழுவிவிடுகிறார்கள். அப்படியானால் உண்மையான காரணம் என்ன? இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக உள்ளவர்களின் செயல்கட்கும் செயல் இன்மைக்குமான காரணிகளை இந்தியாவிடம் அல்லவா கேட்க வேண்டும்?

## அமெரிக்க அக்கறை

இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்களும் போர்க் குற்றங்களும் சார்ந்து அமெரிக்க நெருக்குவாரங்கட்கு உட்படக் காரணம் அக்குற்றங்கள் அல்ல. உண்மையான குற்றம் இலங்கையில் சீனாவின் செல்வாக்கை வலுப்படுத்துகின்ற விதமான நடத்தைதான். அதை மாற்றுவதானால் இலங்கை அரசாங்கத்தின் மீது பண்முகப்பட்ட நெருக்குவாரங்களை கொண்டுவர வேண்டும். அதற்கான வசதியை இலங்கை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இது அரசாங்கத்திற்கும் தெரியும். எதிர்க் கட்சிகளுக்கும் தெரியும். தமிழ்த் தேசிய தலைமைகட்கும் தெரியும். ஆனால் யாருமே அதைப்பற்றி பேச விரும்புவதில்லை. இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா எப்படியாவது தன்வழிக்கு கொண்டுவந்து விட்டால் அதன் பிறகு எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிடும். மியன்மார் (பர்மா) அரசு சீனாவின் செல்வாக்கை குறைக்கிறது போன்ற சில சாடைகளை காட்டியுள்ளதால் இப்போது மியன்மார் மீதான வணிகத் தடைகள் அகற்றப்படும் முன்னரே மைக்ரோ சொப்ட் உட்பட அமெரிக்க பெருவணிக நிறுவனங்களும் மியன்மாருக்கு படையெடுக்க தொடங்கிவிட்டன. அமெரிக்காவுக்கு தேவையானது மனித உரிமைகளை காப்பதும் போர்க் குற்றங்களை தடுப்பதும் அல்ல. எனவே தமிழ் முஸ்லிம் மலையக தமிழ் மக்களும் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுகின்ற ஊடகவியலாளர்கள் முதலான அனைவரும் தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்படுகின்ற தொழிலாளர்களும் பொலிஸ் இராணுவ கெடுபிடிகளினால் அவதியுறும் அனைவரும் தங்கள் உரிமைகளை வெல்ல அமெரிக்காவின் அதிகாரத்தையோ ஐ.நா. சபையையோ நம்பியிருக்க முடியாது.

## கணக்கு கோளாறு

2008, 2009 காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமான நடவடிக்கையின் பயனாக சாதாரண மக்கள் எவருமே கொல்லப்படவில்லை என்று சொல்லிவந்த அரசாங்கம் இப்போது ஒன்பதாயிரம் பேர்வரையில் இறந்துள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் பிற மதிப்பீடுகள் 30 ஆயிரத்திற்கும் 40 ஆயிரத்திற்கும் இடையில் என்றே உள்ளன. இறந்தோரின் தொகை என்றோ தெரிய வரும் போது கணக்கு காட்ட இயலாதோர் விடுதலைப் புலிகள் என்றோ நோய்வாய்ப்டோ வேறு விபத்துக்களிலோ இறந்தனர் என்று கணக்கு காட்ட இயலுமாயிருக்கும்! போரால் பாதிக்கப்பட்ட பகுதியில் 2007இல் இருந்தோரில் எத்தனை பேர் இப்போது உயிருடன் இல்லை என்ற உண்மையைச் சொல்லுவதற்கு ஏன் அரசாங்கத்துக்கு இயலாதுள்ளது?

## நாய் வேடம் போட்டால்

சமசமாஜக் கட்சி மரவில் வந்த இடதுசாரிகள் எல்லாருமே ஏதோ வகையில் சீரழிந்த முதலாளியக் கட்சிகளுடன் சமரசம் செய்துள்ளனர். அல்லது பெருமுதலாளிய நோக்கங்கட்கு உதவியுள்ளனர். இருந்தாலும் தனிப்பட்ட முறையில் நேர்மையானவர்கள் சிலர் இருந்திருக்கிறார்கள்.கீழ்த்தரமான காரியங்களைச் செய்ய மறுத்திருக்கிறார்கள்.

அந்த வகையில் வாசுதேவ நாணாயக்கார 2009இல் ராஜபக்ஷஅரசாங்த்தில் பங்கேற்கும் வரை மதிப்பிற்குரிய ஒருவராக இருந்து வந்தார். சில சமயங்களில் அரசாங்கம் எடுத்த தவறான முடிவுகளைத் திருத்தவும் தவறென்று பேசவும் துணிந்துள்ளார். இப்போதும் அவர் அப்படி வாய் திறந்தாலும் செயலில் அவரால் எதையுமே நிறைவேற்ற இயலாதுள்ளது. அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்க அவருக்கு இயலாதுள்ளது. அரசாங்கத்தை ஏகாதிபத்தியத்திடமிருந்த காப்பாற்றுகின்றதாக நினைத்துக் கொண்டு அரசாங்கத்தின் போர்க்குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் மறுக்கிற விதமாகப் பேசி வருவதன் மூலம் அவருக்கு எஞ்சியுள்ள நற்பெயரும் இல்லாமல் போய்விடும் அபாயம் உள்ளது. நாட்டை அழிவுப் பாதையில் கொண்டு செல்லுகிற ஆட்சியுடன் அவர் இன்னும் எவ்வளவு காலம் தான் ஒட்டிக் கொண்டிருக்க இயலும். அவருக்கும் திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர போன்றோருக்கும் ஒரு வேறுபாடும் இல்லாமற் போகும் வரை அவர் தன்மைச் சீரழித்துக் கொள்ளப் போகிறாரா என்பதை அவர் யோசிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. நாய் வேடம் போட்டால் குரைக்கத்தான் வேண்டும் என்பார்கள். வேடம் போட்டவருக்கு உள்ள ஒரே தெரிவு நாய் வேடத்தைக் கலைப்பது தான். அல்லது அவர் நாயாகவே என்றென்றும் கணிக்கப்படும் அபாயம் உள்ளது.

## மூவர் உலா

அண்மையில் கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் நவசமசமாஜக் கட்சியின் ஆயட் காலத் தலைவரும் தேர்தலுக்குத் தேர்தல் கட்சியின் பேரை மாற்றி வருகிற கொழும்பு வாழ் தமிழ்த் தலைவரும் தன் கட்சிக்குள் எழுந்துள்ள பூசலைத் தணிக்க அரசாங்கத்தின் உதவியை நம்பியிருக்கும் பிரதான எதிர்க்கட்சித் தலைவரும் அருகருகே நின்ற காட்சியை நாங்கள் பலரும் எப்போதோ எதிர்பார்த்த காட்சி தான். பின்னைய இருவரும் முதலாளிய நலன்களை வேண்டுவோர். மற்றவருக்கு அவர்களுடன் என்ன வேலை? ஜனநாயகத்தைக் காக்க யூ.என்.பி கூட்டுச் சேருவதே சந்தேகமானதாக இருக்கும் போது யூ.என்.பியின் தலைமையிலான கூட்டத்தில் தன் தலையையும் காண்பிக்கும் நிர்ப்பந்தம் தான் என்ன?

www.padippakam.com



# நாடு நகர சட்டமூலமும் பேரினவாத உள்நோக்கமும்

**நமன்**

**நாடு நகர சட்டமூலமானது தற்போது மாகாண சபைகளின் கீழுள்ள காணிகளை தொல்பொருள் ஆய்வு, புனித இடங்களைக் கண்டறிதல், புனிதப் பிரதேசங்களை உருவாக்குதல் போன்றவற்றுக்காகப் பொறுப்பேற்று பௌத்த சாசன அமைச்சிடம் ஒப்படைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.**

ஒரு சட்டமூலத்தை கொண்டு வந்து நிறைவேற்றும போது அரசாங்கம் ஒன்றிற்கு வெளிப்படையான தன்மைகளைவிட உள்நோக்கங்கள் நிறையவே இருக்கும். இலங்கையைப் பொருத்தவரை அரசியல் சாசனம் முதற்கொண்டு சாதாரண சட்டங்கள் வரை பேரினவாத அல்லது பௌத்த சிங்கள அடிப்படைவாத உள்நோக்கங்கள் இருந்து வருவதை அவதானிக்க முடியும். அவற்றின் பட்டியல் நீண்டதாகும்.

அந்த வகையிலேயே நாடு நகர சட்ட மூலத்தை அரசாங்கம் கொண்டுவந்து நிறைவேற்றக் கடும் முயற்சி செய்து நிற்கிறது. அத்தகைய சட்டமூலமானது தற்போது மாகாண சபைகளின் கீழுள்ள இடங்களைத் தொல்பொருள் ஆய்வு, புனித இடங்களைக் கண்டறிதல், புனிதப் பிரதேசங் களை உருவாக்குதல் போன்றவற்றுக்காகப் பொறுப்பேற்று பௌத்த சாசன அமைச்சிடம் ஒப்படைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேற்படி சட்டமூலத்தை கொண்டு வருவதில் அரசாங்கத்திற்கு ஒரு சிறு தடங்கள் ஏற்பட்டுள் ளது. அதனை அகற்றிக் கொண்டால் எளிதாகவே சட்ட மூலத்தை நிறைவேற்றலாம் என்ற நிலையிலேயே இருந் தும் வருகிறது. சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அரசிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக் கரங்கள் உண்டு. ஆனால் அவ்வாறு பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்பு எல்லா மாகாண சபைகளிலும் அதற்கு ஆதரவு தெரிவித்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே தடங்கலாகும். எல்லா மாகாண சபைகளும் அரசின் கட்டுப்பாட்டில்தான் என்பதால் அரசிற்கு அது சிரமம் கிடையாது. ஆனால் இச்சட்ட மூலம் கிழக்கு மாகாண சபையிலேயே பிரச்சினைக்கு உள்ளாகி நிற்கிறது. ஆரம்பத்தில் இச்சட்டமூலத்திற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மறுப்பும், தயக்கமும் காட்டியபோதும் அரசாங்க மேல்மட்ட அழுத்தங்களால் இறங்கி நிற்க வேண்டியதாயிற்று.

அதேவேளை அரசில் அங்கம் வகிக்கும் சிறீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையில் இச்சட்டமூலத்தை எதிர்த்து நிற்பது ஒரு முட்டுக்கட்டையாக உள்ளது. அதனால் ஏற்கனவே இதனை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்ட திகதியில் அரசின் நோக்கம் நிறைவேறவில்லை. இப்போது இழுபறி நிலையில் அச்சட்டமூலம் கிழக்கு மாகாண சபையில் இருந்து வருகிறது. இச்சட்ட மூலம் பாராளுமன்றம் வந்து நிறைவேற்றப்பட்டால் பேரினவாதிகளினதும் பௌத்த அடிப்படைவாதிகளினதும் நோக்கங்கள் மிக இலகுவாகவே நிறைவேற்றப்படும் என்பதில் ஐயமில்லை. ஜாதிக ஹெல உருமயவும் பௌத்த சிங்கள மேலாதிக்க நிறுவனங்களும் குறிப்பிடும் காணிகள் எல்லாம் தமிழ் முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் பறிக்கப்பட்டு விகாரைகளும் பௌத்த மடாலயங்களும் தோற்றுவிக்கப்படும். அதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் தனித்துவங்களும் தன்னடையாளங்களும் படிப்படியாக இழக்கப்படும் அபாயங்களே உருவாகும். இதனால் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே இனப்பகை அரசியல் மென்மேலும் வளரும். நாடு நாசமடைவதைத் தவிர வேறு வழி இருக்கமுடியாது.

# யாழ்ப்பாணத்தில் சிறுவர் துஸ்ப்பிரயோகம்

பாலியல் ரீதியில் சிறுவர்கள் மீதான துஸ்பிரயோகம் யாழப்பணத்தில் அதிகரித்து வருகின்றது எனப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. கடந்த வருடம் தெரிய வந்த துஸ்பிரயோகங்கள் 179 என சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் திரு ரி. விஸ்வரூபன் தெரிவித்துள்ளார். தெரிய வராதவைகள் பல என்பது ஊகிக்கத்தக்கதே. இதற்கு காரணம் பெற்றோரின் கவனயீனமும் வயது, உறவுமுறை பேதமின்றி சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதும், கட்டுபாடற்ற சினிமா, சின்னத்திரை உணவுப் பழக்க வழக்கங்களும், பரீட்சையை மையப்படுத்திய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும், வாழ்க்கைப் பற்றிய சிந்தனையின்மையும் கடந்த காலம் எதிர்காலம் பற்றிய அறிவின்மை போன்ற பல பிரச்சினைகள் சிறுவர் துஸ்பிரயோகங்களுடன் தொடர்புடையனவாகும். எனினும் அரசியல்வாதிகளின் பின்னணியும் இதில் காணப்பட்டுள்ளது. அண்மையில் யாழ் பெண்கள் இந்துக் கல்லூரி மாணவியை கல்வி அதிகாரியொருவர் பாலியல் துஸ்பியோகத்திற்கு உட்படுத்த முயற்சித்த சம்பவம் மீது அவர் யாழ்பாணத்தின் முக்கிய கீழ் நிலை அரசியல் வாதியினதும் அமைச்சர் ஒருவரினதும் கையாள் என்பதால் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ் பாடசாலைகள் பகிஸ்கரிப்பை மேற்கொண்ட வேளை பின்னர் குறிப்பிட்ட மேல்நிலை மாணவியை அழைத்து உயர் மட்டத்தில் கடுமையாக விசாரிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டமை வெளிவந்த செய்தியாகும். நெடுந்தீவில் 13 வயது சிறுமி ஒருவர் கோரமான வன்புணர்ச்சியின் பின் கொடூரமாக கொல்லப்பட்டார். இது அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுக்கும் கட்சி ஒன்றின் உறுப்பினர் ஒருவரின் செயல் என மக்கள் இனங்கண்டு கொண்டனர். பின்னர் மக்கள் இணைந்து அவரை தாக்க முற்பட்ட வேளை அரச இயந்திரங்கள் அவரைக் காப்பாற்றி நீதி மன்ற விசாரனைக்கு உட்படுத்தியது.

உரும்பிராயில் 5 வயது சிறுமியை பாலியல் துஸ்பிரயோகம் செய்ய முற்பட்டதாக கோப்பாய் காவல் நிலையம் ஊடாக யாழ் நீதி மன்றத்தில் இளைஞர் ஒருவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோவில் பகுதியில் 7 வயது சிறுமியை கடத்தி வன்புணர்ச்சிக்கு முயன்ற வேளை சிறுமியின் உறவினர் அப்பக்கம் வரவே அவ்விளைஞன் தப்பியோடி விட்டான். அந்த இளைஞனை பொலிஸ் தேடுகிறது. சிறார்களைக் கடத்தி ஐரோப்பிய நாட்டிற்கு கடத்திய குழு மாட்டிக் கொண்டதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. அதுமட்டுமன்றி இந்தியாவில் அகதியாக தஞ்சம் கொண்ட தமிழகம் வாழவந்தான் கோட்டை இலங்கை அகதி முகாமை சேர்ந்த செல்வி இராஜேந்திரன் என்ற 17 வயதுடைய பெண்ணை அமர்நாத்(19) என்பவர் கடத்தியுள்ளார் என்றும் கடத்தலோடு தொடர்புடைய கார் மற்றும் உதவியாளர்கள் அனைவரையும் தமிழகப் பொலிஸார் கைது செய்து திருச்சி நீதி மன்றத்தில் முன் நிறுத்தியுள்ளனர் என்பது இன்னுமொரு செய்தி.

இவ்வாறு துஸ்பிரயோகங்கள் ‘‘வடக்கு அபிவிருத்தியின்’’ ஒரு பகுதியாக இடம்பெறுவதாக மக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது. இது மட்டுமல்லாமல் தென் பகுதியினர் வடக்கு அபிவிருத்தி வேலைக்கு வட பிரதேசங்களுக்கு வந்தமையாலும் துஸ்பிரயோகங்களும் காதலித்து ஏமாற்றுதல்களும் தாராளமாக நடைபெறுவதாக ஊர்வாசிகள் பேசிக்கொள்கின்றனர். இதில் சிறுவர்களின் முதல் காவலர்களாக பெற்றோர்களே இருக்க வேண்டும். விழிப்புடன் சமூக நடத்தைகளை அவதானத்திற்கு உட்படுத்துவதும் மிக முக்கியமானதாகும். அதேவேளை இவ்வாறான துஸ்பிரயோக செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனைகள் வழங்கப்படல் வேண்டும்.

# ஆரம்ப வகுப்பு மாணவர்கள் சிங்கள ஆசிரியர்களிடம் தமிழ் கற்கும் அவலம்

அனைவருக்கும் கல்வி, தாய்மொழி கல்வி என்றெல்லாம் ஏட்டில் இருக்க நடைமுறையில் அவைகள் அர்த்தமற்றவைகளாகவே காணப்படுகின்றன. காவத்தை பிரதேசத்தில் உள்ள இ/எம்/ஓபாத இல. 02 பாடசாலை அதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகள் கற்கும் இந்த ஆரம்பகல்வி பாடசாலையில், 2ஆம் வகுப்பிற்கு சிங்கள ஆசிரியரே தமிழ் மொழி உட்பட ஏனைய பாடங்களையும் கற்பித்து வருகிறார். சிறுவர்களின் கல்வி உரிமையை மீறும் இவ்விடயம் தொடர்பாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இப்பாடசாலையின் ஆங்கில ஆசிரியர் தனது கட்டாய சேவைகாலத்தை பூர்த்தி செய்யும் முன்னர் நகர பாடசாலை ஒன்றிற்கு அரசியல்வாதிகளின் அனுசரனையுடன் இடமாற்றம் பெற்றுள்ளார். குறித்த நகர பாடசாலையில் தேவைக்கு அதிகமாகவே ஆங்கில ஆசிரியர் இருக்கின்றமை கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். இடமாற்றம் தொடர்பாக பாடசாலையில் அதிபர், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கல்வி அதிகாரிகளிடம் நேரடியாக முறையிட்ட பின்னர், அந்த ஆசிரியர் வாராத்தில் 3 நாட்கள் நகர பாடசாலையிலும் 2 நாட்கள் குறித்த ஆரம்ப கல்வி பாடசாலையிலும் சேவை புரிய அதிகாரியினால் பணிக்கப்பட்டுள்ளார். இந்த தீர்வை ஏற்க மறுக்கும் மக்கள் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பாக அறிவித்து தீர்வுக்காக காத்திருக்கின்றனர்.

தமது வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த அரசியல்வாதிகள் இவ்வாறு தமது பிள்ளைகளின் கல்வி உரிமையை பறிப்பதும் அவர்களுக்கு கல்வி அதிகாரிகள் ஒத்தாசை புரிவதனையும் தொடர அனுமதிப்பதனை மக்கள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படாவிட்டால் இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்கனவே மூடப்பட்டுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளின் பட்டியலில் இ/எம்/ஓபாத இல. 02 பாடசாலையும் இடம்பெறும் அபாயம் உள்ளது.

# யாழ் நெற்செய்கையாளர்களும் பிரச்சினைகளும் சவால்களும்

யாழ்மாவட்ட நெற் செய்கையாளர்கள் அறுவடையின் பின்னர் சந்தைப்படுத்தலில் பல பிரச்சினைகளை எதிர் கொள்வது கண்கூடு. இந்த வருடம் சுமாரான விளைச்சல் கிடைத்தமையாலும், அரிசி விலை குறைந்த காரணத்தாலும் சந்தைப்படுத்தல் ஆமை வேகத்திலேயே காணப்படுகிறது.

அரச நெல் கொள்வனவு உச்சவரம்பு விலை கிலோவிற்கு ரூ. 28-30 வரை நிர்ணயித்தும் அரசி ஆலை உரிமையாளர்கள் 70 கிலோ மூடைக்கு ரூ. 1500-1600 என்ற அடிமாட்டு விலைக்கே கொள்வனவு செய்கின்றனர். அத்தோடு விவசாயிகளே நெல் மூடைகளை வாகனங்களுக்கு ஏற்றவும் வேண்டும். மேலும் ஒரு மூடைக்கு 2 கிலோ முதல் 5 கிலோ வரை கழித்துக்கொள்ளவும் செய்கின்றனர். அதாவது அவர்கள் நிர்ணயிக்கும் எடை பெயரளவில் 70 கிலோ, ஆனால் அது 72 அல்லது 75 ஆகவேக் காணப்படுகின்றது. அத்துடன் கொள்முதலுக்குறிய பணம் இரண்டு கிழமைகளின் பின்னர் அவர்கள் விரும்பும் திகதியில்தான் வழங்கப்படுகின்றது. அரசு ஏனைய மாவட்டங்களில் போன்று கொள்முதல்செய்தால் விசாயிகள் துன்பப்படும் நிலை குறையும் என்பது விவசாயிகளின் பொதுக்கருத்தாகும்.
மேலும் அறுவடைக்கு தொழிலாளர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவும், அவர்களது நாட்கூலியாக பெண்கள் 600 – 800 வரையும் ஆண்கள் 1000 – 1200 ரூபாவாக இருப்பதும் மேலும் ஒரு பிச்சினையாகும். அதாவது உற்பத்தி செலவு அதிகமாகிச் செல்கின்றது. மேலும் நெற் சந்தைப்படுத்தலில் கிரயம் கூட முழமையாக கிடைப்பதில்லை.

இதனால் அடுத்த போகம் விவசாயம் செய்வதில்லை என்று நெற்செய்கையாளர்கள் முனுமுனுப்பதை கேட்க முடிகிறது. எனினும் இம்முறை நெல் அறுவடை இயந்திரம் வன்னி, மட்டக்களப்பு, புத்தளம் போன்ற இடங்களில் இருந்து வரழைக்கப்பட்டு அறுவடை செய்தமையால் மிக குறுகிய காலப்பகுதியில் அறுவடை முடிவுக்கு வந்தது. சில ஆலை உரிமையாளர்கள் அறுவடை இயந்திரத்தால் அறுவடை செய்த நெல்லை கொள்முதல் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. இது விலையை பேரம் பேசுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது செய்கையாளர்கள் எதிர் கொள்ளும் வேறொரு பிரச்சினையாகும். அத்துடன் கால்நடைகளுக்கான வைக்கோலுக்கும்



பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது. ஒரு பரப்பு வைக்கோல் 350 – 500 ரூபா வரையில் விற்கப்படுகிறது.

ஏனெனில் இயந்திரத்தால் அறுவடை செய்யும் போது வைக்கோல் சிறுத் துண்டுகளாகவும் தூசாகவும் வருவதால் இவை தீவனத்திற்கு உபயோகமாகாது. அவற்றை வயலிலேயே எறிவூட்ட வேண்டியதுதான். மொத்தத்தில் இது போன்ற பிரச்சினைகளை கையாள்வது யார்? என்பது முக்கிய கேள்வியாக உள்ளது. கமக்கார சேவை நிலையங்களின் (APC) நிலை என்ன? கூட்டுறவு சங்கங்கள் கை கொடுக்க கூடாதா? அரச அனுசரனையுடன் நெற் சந்தைப்படுத்தல் இல்லையா? நாடு முழுவதிலும் விவசாயிகள் நெல் உற்பத்தியில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். இந்நிலைப்பற்றி நெல் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் ஆழ்ந்து சிந்திக்க முன்வரல் வேண்டும். கேள்விகள் எழுப்பி அமைப்பாக அணித்திரள முன்வர வேண்டும்.

**சோதி**

# பகைவர் யார்? நண்பர் யார்?

மலையக எம்.பி. ஒருத்தர் இப்போதெல்லாம் ஒழுக்கம், தன்மானம் பற்றி மிக அதிகமாக எம்பிக்குதித்துக் கொண்டிருக்கிறார். இன்னொரு தொலைக்காட்சி எம்.பி. இவரையும் இணைத்துக் கொண்டு ''நிகழ்ச்சி'' செய்கிறார். இதற்கெல்லாம் காரணம், இருவரினதும் அரசியல் வியாபார பொது எதிரியும் அவர்கள் அங்கம்வகிக்கும் அரசாங்கத்தின் அமைச்சராய் இருப்பவருமான பெருந் தலைவர் அயல்நாட்டு விருந்தகமொன்றில் நிறைபோதையில் அங்கு பணியாற்றிய இளம் பெண்களிடம் சேட்டைவிட்ட செய்தியைத் தொலைக்காட்சிகாரர் ஒருத்தர் ஒளிபரப்பி மானத்தை வாங்கிவிட்டாராம்.

இச் செய்தியால் உச்சி குளிர்ந்து உதிரமும் குளிர்ந்து போனவர்கள் தமது குதூகலத்தை கோபமாய் வெளிக்காட்டுகிறார்களாம். ''மலையகத்தின் தமிழ் அமைச்சர் இப்படி நடந்து விட்டார் எங்கள் மானமும் போகிறது. எல்லோருக்கும் அவமானம். ஊடகவியலாளர் சந்திப்பு வைத்து இதனை தெளிவுப்படுத்த வேண்டும்'' என்று குதிக்கிறார் ஒருவர். அவரின் கோபத்திற்கு நியாயம் இல்லாமல் இல்லை. வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததும் இல்லாமல் தன் கூட்டத்தையும் பகைவனின் பாசறைக்கு அழைத்து சென்று விட்டது என்பது தான் அந்நியாயம்.

நடந்த விடயம் உண்மையில் அமைச்சரின் புதிய வேலையல்ல. இம் முறை அகப்பட்டுக் கொண்டார். அவ்வளவு தான். மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய காலஞ்சென்ற அமைச்சர் ஒருவர் தனது இறுதி நாட்களை உல்லாசமாகவே கழித்தார் என்பதுடன், மலையக மாண்பின் கிரீடமெனக் கர்சிக்கும் எம்.பி. ஆடம்பர வாழ்விற்கும் நட்சத்திர ஹோட்டல் இன்பங்களுக்குப் புதியவர் அல்ல. இவர் போன்றவர்கள் இத்தகைய மாலை நேர பூலோக சொர்க்கங்களில் பூரித்து இருப்பவர்கள் தான். சில வேளை அமைச்சரின் மானம் போன அந்த விருந்தகம் எந்த மருந்தகம் என இவர்கள் திடீர் விஜயம் மேற்கொண்டாலும் வியப்பில்லை. மக்களின் பணத்தில் உல்லாச வாழ்க்கை வாழும் அமைச்சர் மட்டுமே மக்களின் எதிரி என்றவாறான தோற்றம் காட்டப்படுகிறது. உண்மையில் அவர் மட்டும் அல்ல, எல்லா எம்.பிக்களும் அவர்கள் கட்டிக் காத்துவரும் ஆளும் வர்க்கமே தான் என்பதை மக்களே உணர வேண்டும்.

> **மலையக மாண்பின் கிரீடமெனக் கர்சிக்கும் எம்.பி. ஆடம்பர வாழ்விற்கும் நட்சத்திர ஹோட்டல் இன்பங்களுக்குப் புதியவர் அல்ல. இவர் போன்றவர்கள் இத்தகைய மாலை நேர பூலோக சொர்க்கங்களில் பூரித்து இருப்பவர்கள் தான்.**

# மோட்டார் சைக்கிள் டையரி

### 15.02.2012

*அண்மையில் சைக்கிள் தோழர்களுக்கு ராகலைப் பகுதிக்குச் செல்லச் சந்தர்ப்பம் கிடைத்தது. பல நண்பர்களை சந்தித்தோம். குறித்தவொருவரைச் சந்திக்க சென் லியனாட்ஸ் (நடுக் கணக்கு) தோட்டத்திற்கு போகும்போது சைக்கிள் தோழர்களுக்கு ஆச்சரியம். எமது மக்களின் குடியிருப்புக்கள் பல அவர்களுக்குரிய தோட்டங்களில் கட்டப்பட்டு மாடி வீடுகளாகக் காட்சி தந்தன. நான் அவ்வூர்த் தொழிலாளியிடம் ''நமக்குத்தான் நிலம் சொந்தமில்லையே! ஒப்பனையும் (உறுதி) இல்லையே பிறகு எப்படி இவ்வாறு வீடுகள் அமைக்க இடம் கொடுத்தார்கள்? அவர்கள் நமக்கு காணி வழங்க மாட்டார்களே!'' என்றேன்.*

*தொழிலாளி ''சரியா சொன்னீங்க போங்க.... அவுங்க அவுங்க ரொம்ப கஷ்டப்பட்டு பல பிரச்சினையை எதிர்கொண்டு பல எதிர்ப்பின் மூலம் தான் இந்த வேலய செய்யக்கூடியதா இருந்திச்சி'' என்றார். எமதன்புத் தொழிலாளர்களே! நாம் சொல்வது இதுதான். மயிலே மயிலே என்றால் இறகு போடாது. அறிவு பெற வேண்டும், பின் தெளிவு பெற வேண்டும், பிறகு எழுச்சியுற வேண்டும். இது ஒட்டுமொத்த தொழிலாளர்களுக்குமுரிய பிரச்சினை. இது பொதுப் பிரச்சினை. இது அனைவராலும் பேசப்பட வேண்டும். நாம் வாழும் இடம் எமக்குச் சொந்தமில்லை இருக்க மட்டும் இருக்கலாம். உறுதியில்லை நாலு துண்டு இடம் கூட இல்லை எமக்கு!*

*தெளிவுபட்டால் ஒன்றுபட்டால் போராடலாம். இவ்வாறான இறுக்கமான சூழ்நிலைகளிலும் சில இடங்களில் எமது மக்களின் குடியிருப்புக்கள் அவர்களது முயற்சியால் வீடுகளாக மாற்றப்படுகின்றன. ஏனைய பகுதிகளிலும் மக்கள் முயன்றால் முடியாதது எதுவுமில்லை!*

### 27.02.2012

*அறிவுபூர்வமாக நடந்து கொள்ளும் நண்பர்கள் சிலர் எனக்கும் இருக்கிறார்கள். அதில் விஷேசமான ஒரு நண்பனைச் சந்தித்தேன். ''மச்சான் சொல்லுடா'' என்றேன். கல்வி, அரசியல், சொந்தக் கதை என ஒரு ரவுண்டு வந்துட்டான். சம்பாஷணை சிறப்பாக போய்க்கொண்டு இருந்தபோது, அவன் சொன்னான். ''கேள்விப்பட்டியா இந்த கூத்த? போன மாதத்துல 16இ 18 நாள் தான் வேல. சில இடங்களில் அதுவும் இல்ல. நிலமை இப்படியிருக்க சில தோட்டங்களில் குறைந்த கூலி பெறும் எமது மக்களின் பணத்தைச் சுரண்டி தோட்டத்திற்கு மருந்து அடித்தல் காடு வெட்டல் மலைகள் துப்பரவு பண்ண சிரமதானம் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகுதடா'' என்றான். ''நம்ம தோட்டத்த நாம தானே பாதுகாக்கனும், நண்பா'' என்றேன்! ''போடா இவனே! ஆமா, இங்க நம்மள கவனிக்கிறாங்க பாரு. சும்மா போடா! நம்மள திட்டமிட்டு இவங்க ஏமாத்துறாங்க. அது கம்பனி செய்ய வேண்டிய வேலை. தங்களுடைய பணத்தை செலவுபண்ணாது, கொடுக்கிற குறைந்த கூலியிலேயே வசூல் செயற்பாடுகள் நடந்தேறுகிறது. நமது மக்களும் தமது சொந்தப் பணத்தை கொடுக்கிறார்கள். இது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டியது! நிர்வாகத்திற்கு அவ்வளவு அக்கறை என்றால் ஸ்டாப் ஊழியர்களிடமிருந்தும் வசூல் பண்ணலாமே மாதம் 7000 ரூபா ஊதியம் பெறும் தொழிலாளிகளை நம்பி நிர்வாகிகள்......!''என்றான்.*

*இதுதான் சிந்தனை ஜனநாயகர்கள் முன்மொழியும் அபிவிருத்தித் திட்டங்கள் போலும்.*

# ''கொழுந்துப்'' போராட்டம் எட்டப்பன்களாக தொழிற்சங்கங்கள்

இறுதியாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்ட சம்பள உயர்விற்குப் பின், தேயிலைக்கான விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்ற போர்வையில், பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் வேலைப் பளுவினை அதிகரிக்கின்றன. குறிப்பாக ஒரு நாள் வேதனத்திற்கு வழமையாகப் பறிக்கும் கொழுந்தின் அளவை இரண்டு கிலோவால் அதிகரிக்க முயல்கின்றனர். பெருந்தோட்டங்கள் அபரிமிதமான இலாபத்தினை ஈட்டியபோது அதைத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கவில்லை. எனவே, இலாபத்தில் சிறிய சரிவு ஏற்பட்டவுடன் அதைத் தொழிலாளர்கள் மீது சுமத்துவதில் நியாயமில்லை. இதனால், கடந்த இரண்டு மாதங்கட்கும் மேலாகப் பல தோட்டங்களில் போராட்டங்கள் நடந்து வருகின்றன. ஒரு நாள் வேதனத்திற்குச் செய்யவேண்டிய வேலைப்பளுவின் அளவில் தோட்டத்திற்கு தோட்டம் வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக, ஒரு நாள் வேதனத்திற்கு 13 முதல் 18 கிலோ வரை கொழுந்து பறிக்கின்றனர். பெருந்தோட்டக் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையே 2003ம் ஆண்டு, வேதனம் தவிர்ந்த ஏனை நியதிகள் நிபந்தனைகள் தொடர்பாகச் செய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் 9வது சரத்தின் இரண்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டதற்கிணங்கத், தொழிலாளர்களின் வேலைப் பளுவைத் தோட்ட நிர்வாகம் அதிகரிப்பதானால், தோட்ட மட்டத்தில் தொழிற்சங்கக் குழுவிடம் கலந்தாலோசித்து அவர்களின் அனுமதியுடனேயே அதிகரிக்கமுடியும். அவ்வாறு வேலைப்பளுவில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதைக் கூட்ட அறிக்கையில் பதிவதுடன் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தவும் வேண்டும். இணக்கப்பாடு ஏற்படாவிட்டால், வழமையான நடைமுறையே பின்பற்றபடும்.

> **ஒரு நாள் வேதனத்திகு வழமையாகப் பறிக்கும் கொழுந்தின் அளவை இரண்டு கிலோவால் அதிகரிக்க முயல்கின்றனர். இதந்கு எதிராக கடந்த இரண்டு மாதங்கட்கும் மேலாகப் பல தோட்டங்களில் போராட்டங்கள் நடந்து வருகின்றன.**

ஆனால் தோட்ட நிர்வாகம், தோட்டத் தொழிலாளர்கள் மீது பலவந்தமாக வேலைப் பளுவைத் திணிக்க முயல்கிறது அல்லது எப்படியாவது தோட்டத் தொழிலாளர்களை இணங்கச் செய்கிறது. எனவே, தோட்ட நிர்வாகம் நிர்ப்பந்திப்பது போன்று இரண்டு கிலோ கொழுந்து மேலதிகமாக எடுக்க முடியாது என்ற அப்படையில், பொகவந்தலாவ, நோர்வூட் பிரதேசங்களை சேர்ந்த பொகவந்தலாவ பெருந்தோட்டக் கம்பனிகளைச் சேர்ந்த தோட்டங்களில் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். தோட்ட நிர்வாகம் தொடர்ந்து தொழிலாளர்களின் கோரிக்கைக்கு இணங்க மறுக்கவே, கடந்த இரண்டு வாரங்களாக 'ஒரு கொழுந்துப்' போராட்டத்தினை, அதாவது ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு ஒரு கொழுந்து அல்லது 1~3 கொழுந்துகள் மாத்திரமே பறிப்பதை, முன்னெடுத்து வருகின்றனர்.. தொழிலாளர்களை வழிநடத்தவேண்டிய தொழிற்சங்கங்களோ, தொழிலாளர்களை ஏவி விட்டுத் தங்கள் நழுவல் போக்கினைக் கையாள்கின்றனர். தொழிலாளர்கள், சங்க வேறுபாடின்றிப் இன்றி போராடினாலும் தொழிற்சங்கங்கள் பத்திரிகைகளில் ஒருவிதமாக அறிக்கைவிடுவதுடன் செயற்பாட்டில் முன்னுக்குப் பின் முரணாக நடக்கின்றனர்.

> **தொழிலாளர்கள் தொழிந்சங்க வேறுபாடின்றிப் போராடினாலும் தொழிந்சங்கங்கள் பத்திரிகைகளில் ஒருவிதமாக அறிக்கை விடுவதுடன் செயந்பாட்டில் முன்னுக்குப் பின் முரணாக தொழிலாளர்களுக்கு துரோகமான முறையில் நடக்கின்றனர்**

தொழிற்சங்கங்கள் மீது நம்பிக்கையிழந்த மக்கள் இறுதியில் விரக்தி கொண்டு செய்வதறியாது தடுமாறுகின்றனர். மறுபுறம், தோட்டக் கம்பனிகள், ஒரு நாள் பேருக்கான இரண்டு கிலோ கொழுந்தினை கூட்டுவதிலும், 'ஒரு கொழுந்துப்' போராட்டம் நடந்த நாட்களுக்கான வேதனத்தை கொடுப்பதில்லை என்பதிலும் உறுதியாக இருக்கின்றன. தொழில் ஆணையாளரும் கம்பனிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்ற நிலையே காணப்படுகின்றது. குறிப்பாகத் தோட்டக் கம்பனிகள் கூட்டு ஒப்பந்தத்தை மீறுகிறபோது உரிய நீதியை அமுல்படுத்துவது ஆணையாளரின் கடமை. ஆனால் அதனை செய்யத் தவறுகின்றார்.

அண்மைக் காலமாகப் பெருந்தோட்டப் பகுதிகளில் நிரந்தரத் தொழிலாளர்களைக் குறைப்பது, தற்காலிகத் தொழிலாளர்களை அதிகரிப்பது, தொழில் உரிமைகளை மறுப்பது, தோட்டங்களைப் பராமரிப்பின்றிக் கைவிடுவது, தோட்டங்களை மூடுவது போன்ற நடைமுறைகள் அதிகரித்து வருகின்றன. பொதுவாக அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதப் போக்கினை வெளிப்படையாக காணக்கூடிதாக இருக்கின்றது. இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் போராட்டத்தில் ஈடுபட்ட இரண்டு தொழிலாளர்கள் பொலிசாரால் அண்மைய மாதங்களில் சுடப்பட்டுள்ளனர். ஆனால், இச் சந்தர்ப்பங்களில், அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கின்ற மலையகத்தின் மிக முக்கிய தொழிற்சங்கமும் அரசியற் கட்சியுமான இ.தொ.கா., தொழிலாளர்களை 'ஒரு கொழுந்துப்' போராட்டத்தில் ஏவிவிட்டு இறுதியில் கைகழுவும் சந்தர்ப்பவாதமும், தொழிலாளர் வர்க்கத்தையும் தொழிற்றுறையையும் பலமிழக்க செய்யும் நடவடிக்கையோ என்ற சந்தேகம் எழுகின்றது. காரணம், கொட்டியாக்கலை தோட்டம் உட்பட பொகவந்தலாவ பகுதித் தொழிலாளர்கள் போராட்டங்களை முன்னெடுப்பதில் இதுவரை ஐக்கியப்பாடு காணப்பட்டது. எனவே, அதனைச் சிதைக்கும் சதியோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது

**குறிஞ்சிக் குமாரன்**

## நாட்டில் பெருகி வரும்... 5ம் பக்கத் தொடர்ச்சி

ஒழிக்கப்படுமென ஊடகங்களில் பரப்புரை செய்யப்படுகின்றது. இன்று சமய, சமூகத் தலைவர்களே பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபடும் போது எவ்வாறு மதப் போதனைகளாலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களாலும் அவற்றை முறியடிக்க முடியும் என நம்புவது முட்டாள்தனமானது.

எனவே இன்று நடைமுறையில் இருந்து வரும் நவகொலனித்துவ பொருளாதாரத்தின் கீழான சமூகப் பண்பாட்டுச் சீரழிவே மேற்படியானவற்றிற்கு ஊற்று மூலங்களாக இருந்து வருவது அறிவு பூர்வமாக விளங்க வைக்கப்படல் வேண்டும். இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதலையும் அதன் கீழான தனியார் தாராளமயத்தையும் விளங்கிக் கொண்ட ஒருவரால்தான் கொலைகளுக்கான, பாலியல் வன்புணர்ச்சிக்கான, சிறுவர் துஸ்பிரயோகத்துக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டுகொள்ள இயலும். அதன் மூலம் மற்று அரசியல் சமூகப் பண்பாட்டுச் சிந்தனைகளைப் பரப்புரை செய்து மக்கள் மத்தியில் கொண்டு செல்லமுடியும். உண்மையில் அதற்கான மக்கள் சார்ந்த, மக்களிடம் சென்றடையக்கூடிய மாற்று நிகழ்ச்சிகளும் திட்டமிட்ட பரப்புரைகளும் அவசியமாகின்றன. இவற்றை வெறுமனே விடயம் தெரிந்தவர்கள் மட்டத்தில் மட்டுமல்லாது மக்கள் மத்திக்கு உரிய வழிமுறைகள் ஊடாக முன்னெடுக்கப்படல் வேண்டும்.

www.padippakam.com



புதிய பூமி
புதிய பூமி (Sinhala) Puthiya Poomi
சுற்று 19 ஜனவரி-பெப்ரவரி 2011, பக்கம் 16, விலை 30/= சுழற்சி 141
மேல்மாடி இல 06, 571/15 காலி வீதி, கொழும்பு 06.
இலங்கை. தொ.பே. 060 2136530, தொலை நகல்: 011- 2473757
E-mail : puthiyapoomi@gmail.com Wed : www.ndpsl.org

# மக்களை தாக்கி நிற்கும் விலை உயர்வுகள்

கடந்த மாதத்தின் இரண்டாம் வாரத்தில் அரசாங்கம் பெற்றோல் டீசல் மண்ணெண்னை என்பனவற்றின் விலைகளை முறையே 25,23,35 ரூபாய்களால் அதிகரித்துக் கொண்டது. அதன் மூலம் லீற்றர் ஒன்றுக்கு பெற றோல் 150 ரூபா, டீசல் 90 ரூபா மண்ணெண்னை 110 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது. இதனைத் தொடர்ந்து தனியார் போக்குவரத்து துறையினர் ஒரு நாள் சேவைப் புறக்கணிப்புச் செய்து கொண்டதால் அரசாங்கம் அவர்களுக்கு 20 சத வீத கட்டண அதிகரிப்புக்கு இணங்கிக் கொண்டது. இதற்கு அப்பால் ஓட்டோ மற்றும் வாடகை வாகனங்களும் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கும் பார ஊர்திகளும் தத்தமது கட்டணங்களை அதிகரித்துக் கொண்டன. அவற்றினால் பொருட்களின் விலையும் அதிகரித்தன. இன்று எல்லா அத்தியாவசிய உணவுப் பொருட்களுமே விலை அதிகரிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இதனால் மக்களின் அன்றாட அத்தியாவசிய உணவுப் பொருட்களைத் தமது தேவைக்கேற்றவாறு வாங்க முடியாத கஷ்ட நிலைக்கு உள்ளாகியுள்ளனர். அதேவேளை மின்சாரக் கட்டண உயர்வும் மக்களை பாதித்துள்ளது. மண்ணெண்னை விலை அதிகரிப்பானது விவசாயிகள், மீனவர்கள், தோட்டத் தொழிலாளர்கள் கிராமப்புற மின்சாரம் அற்ற மக்கள் என்போரைக் கடுமையாகப் பாதித்துள்ளன. எரிபொருட்களின் விலையுயர்வை எதிர்த்து நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. சிலாபத்தில் மீனவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் அந்தனி பெர்ணான்டோ என்ற நடுத்தர வயதுடைய குடம்பஸ்தர் உயிர் இழந்தார். கடந்த வருடம் கட்டுநாயக்காவில் 22 வயது இளம் ஊழியர். இவ்வருடம் ஒரு மீனவர். அடுத்தது யார்?

மண்ணெண்னை விலை உயர்வால் விவசாயிகள் தமது உற்பத்தியை உரியவாறு மேற்கொள்ளவோ சந்தைப்படுத்தவோ முடியாதுள்ளனர். அவ்வாறே மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்களும் மீனை விற்பனை செய்து தாம் செலவிட்டதையும் தமது உழைப்பிற்குரிய பயனையும் பெறமுடியாதுள்ளனர். தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் மண்ணெண்னையை நம்பியே உள்ளனர். ஏற்கனவே அரிசி, சீனி, மா விலை அதிகரிப்பால் அவதியுறும் தோட்டத் தொழிலாளர்கள் மண்ணெண்னை விலை ஏற்றத்தால் மேலும் கடும் பாதிப்பை அடைந்துள்ளனர். அதேபோன்று வடக்கு கிழக்கில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு இவ் எரிபொருள் விலை ஏற்றமானது தாங்கமுடியாத சுமைகளை எற்படுத்தியுள்ளது. விவசாய முயற்சிகளுக்கும் வீட்டு விளக்கேற்றலுக்கும் மண்ணெண்னையை நம்பியிருக்கும் கிராமப்புற மக்கள் இவ்விலையேற்றத்தால் தாக்கப்பட் டுள்ளனர்.

நாட்டின் பொருளாதாரமானது மக்களுக்கு உரிய பொருளாதாரமாக இல்லாத நிலை மென்மேலும் வளர்ச்சி கண்டே வருகிறது. எட்டு வீத பொருளாதார வளர்ச்சி என்பது வெறும் புள்ளிவிபரம் மட்டுமே. 3 வீத ரூபாய் மதிப்பிறக்கம் சகல பொருட்களின் விலை உயர்விலும் தாக்கம் செலுத்தியுள்ளது. டொலருக்காக இலங்கை ரூபாய் வீழ்ச்சி கண்டுள்ளது. நாணயத்தாள் அச்சிட்டதன் மூலமாக பண வீக்கம் அதிகரித்துள்ளது. இவற்றை விட நூறு வரையான அமைச்சர்களின் அதிகரித்த செலவுகளும் அரசாங்கத்தின், “தேசத்திற்கு மகுடம்” போன்ற ஆடம்பரக்கண்காட்சி செலவுகளும் ஊழல் மூலமான மேல்மட்ட சுருட்டல்களும் நாட்டு மக்களின் தலைகளிலேயே கட்டப்படுகின்றன. இதனோடு அந்நிய கடன் சுமையையும் மக்களே சுமக்கின்ற னர். உற்பத்திப் பொருளாதாரத்தை மையப்படுத்தி நிற்கும் தேசிய பொருளாதாரம் நாட்டில் இல்லை. நாடு அந்நிய சக்திகளின் சந்தையாக மட்டுமே மாற்றப்பட்டடுள்ளது. ஏற்றுமதிகள் என்பன தேயிலை, ரப்பர் மற்றும் தைத்த ஆடைகள் போன்றவற்றிலேயே தங்கியுள்ளன. சீனா, இந்தியா, யப்பான், பாக்கிஸ்தான் மற்றும் அமெரிக்க மேற்குலக நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களே நமது மக்களின் முன்பாகக் கடை விரித்துள்ளன. அவற்றில் வாகனங்களும், கணனிகளும், கைத்தொலைபேசிகளும், தொலைகாட்சிப் பெட்டிக ளும் ஏனைய இலத்திரனியல் ஆடம்பரப் பொருட்க ளுமே நிரம்பியுள்ளன.

அதேவேளை இன்னும் எமது நாட்டிற்கு தேவையான அரிசி எம்மால் உற்பத்தி செய்யப்படுவதில்லை. சுயதேவையைப் பூர்த்தி செய்வோம் என்று அமைச்சர்கள் கூறிவருகின்ற போதும் அரிசி இறக்குமதி தொடர்கிறது. நெல் உற்பத்தியில் விவசாயிகளை உற்சாகப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களை ஓரம்கட்டும் செயல்களே இடம்பெற்று வருகின்றன. நெல்லின் உத்தரவாத விலையாக கிலோவிற்கு 40 ரூபாவினை நிர்ணயிக்கும் படி விவசாயிகள் போராடுகின்றார்கள். ஆனால் அரசாங்கம் 30 அல்லது 32 ரூபாய்களைக் கூடக் கொடுக்க தாயாராக இல்லை. அதேவேளை தனியார் ஆலை முதலாளிகள் கிலோ 20 ரூபா என்ற அடிமாட்டு விலைக்கு விவசாயிகளிடம் கொள்வளவு செய்து கொள்ளை லாபம் சமபாதிக்கின்றார்கள்.

இந்நிலையில் ஒரு விவசாய நாடான இலங்கை எவ்வாறு தன்னிறைவுப் பொருளாதாரத்தை நிலைநாட்ட முடியும்? நமது பாரம்பரிய உற்பத்திகளான குரக்கன், கௌபி, உழுந்து, பயறு போன்ற தானிய வகைகளும் வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றனவும் தொடர்ந்து இறக்குமதிப் பொருட்களாகவே இருந்து வருகின்றன. பெயரளவில் உள்ளூர் உற்பத்தி, நடைமுறையில் அந்நிய இறக்குமதி என நவதாராள பொருளாதாரத்தின் நாசம் தொடர்கிறது. இதுதான் மஹிந்த சிந்தனையின் மகிமை. நுகர்வுப் பொருளாதாரத்தை எதிர்க்கவும் நமக்கான சுய தேவைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் மக்களே ஒன்றுப்பட்டு போராட வேண்டும்.

**ஆசிரியர் குழு**

# நாட்டில் பெருகி வரும் கொலைகளும் பாலியல் வன்புணர்ச்சிக் கொடுமைகள்

**வெகுஜனன்**

உலகிலேயே பௌத்த மதத்தை அரச மதமாகப் பிரகடனம் செய்து அதனை அரசமைப்பிலும் உறுதிசெய்துள்ள நாடு இலங்கை. அதனை சிரமேற்கொண்டு பௌத்த தர்மத்தின் கீழ் மகிந்த சிந்தனை என்ற கொள்கை நிகழ்ச்சி நிரலும் முன்னெடுத்து வரப்படுகிறது. இவற்றின் முதன்மைப் பிரதிநிதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்கள் இருந்து வருகிறார். அன்பு, கருணை, மனித நேயம் போன்றவற்றை வற்புறுத்தி மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பனவற்றை நிராகரித்து நிற்பது பௌத்த தர்மம். இவை அத்தனைக்கும் மாறாகவே இன்று நாட்டில் கொலைகளும் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்ச்சிகளும் ஏனைய வன்முறைகளும் தாராளமாக இடம்பெற்று வருகின்றன. இவை தற்செயலானவையல்ல. பெரும்பாலான கொலைகளும் பெண்கள், சிறுவர்கள் மீதான வன்புணர்ச்சிகளும் வன்முறைகளும் திட்டமிட்டே செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் பெண்கள் தினத்தன்று கொழும்பில் நடைபெற்ற ஒரு கருத்துக் களத்தில் உரையாற்றிய தற்போதைய சட்டமா அதிபர் (பெண்), தற்போது மேல் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளிள் நாற்பது வீதமானவை பெண்கள், சிறுவர்கள் மீதான வன்புணர்ச்சிகள் மற்றும் வன்முறைகளாக இருந்து வருவதை சுட்டிக்காட்டியிருந்தார். இதற்கான சட்டமா அதிபரின் ஆலோசனையாக, மேலதிக வலுவுள்ள சட்டங்கள் கொண்டு வரப்படல் வேண்டும் என்று பரிந்துரைத்தார். அந்தளவிற்கு நாடு முழுவதும் கொலைகளும் பாலியல் வன்புணர்ச்சி வன்முறைகளும் பரவி வந்துள்ளதுடன் அவை வளர்ச்சி பெற்று மோசமான கட்டத்தை நோக்கியும் சென்றுகொண்டிருக்கின்றன. ஒரு காலத்தில் பிணக்குகள், பிரச்சினைகளின் போது ஏற்படுகின்ற கைமோசக் கொலைகளாக இடம்பெற்று வந்த சூழல் மாறி இன்று திட்டமிட்ட கொலைகள் பெருகி நிற்பதைக் காணமுடியும்.

நீதித்துறை உள்ளிட்ட சட்டவாட்சி நடாத்தப்போவதாக கூறிக்கொண்டு அதிகாரத்திற்கு வந்த ஒவ்வொரு ஆட்சியின் கீழும் திட்டமிட்ட கொலைகள் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன. பாதாள உலகக் கோஸ்டிகள் என அழைக்கப்படும் குண்டர் படையினர் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் மற்றும் பணபலம் கொண்டவர்களின் அனுசரனை, வழிகாட்டல்களின் கீழ் கொலைகளை ஒரு தொழிலாக நடாத்தி, அவற்றின் மூலம் கோடீஸ்வரர்களாகி நிற்கின்றனர் இத்தகையோர் சட்டத்தின் பிடியிலிருந்தும் நீதித்துறை தண்டனைகளில் இருந்தும் இலகுவாகவே தப்பித்துவிடும் வகையில் நமது சட்டங்களும் நீதிநிர்வாகமும் சட்ட அமுலாக்கமும் இருந்து வருகின்றது. இதற்குக் காரணம் இத்தொழில் சார்ந்த கொலையாளிகளுக்கு அதிகாரத்தில் இருக்கும் அரசியல்வாதிகள் பாதுகாப்பாக இருந்து வருவதுதான். ஆட்சி அதிகாரத்தின் உச்ச மட்டத்தில் செல்வாக்குடன் இருக்கும் அரசியல்வாதி தொடக்கம் உள்ளூர் மட்டத்தில் அதிகாரம் செலுத்தும் அரசியல்வாதி வரை கொலையாளிக்கு புகலிடம் வழங்கிவரும் நடைமுறை பெருகி நிற்கின்றது. அரசாங்கமே உத்தியோகப்பற்றற்ற வழிகளில் வெள்ளை வேன் கடத்தல்கள், காணாமல் போதல், கொலைகளில் ஈடுபடும்போது தொழில்சார் கொலையாளிகளான பாதாள உலகத்தவர்கள் சும்மா இருப்பார்களா? வெள்ளை வேன் கடத்தல்களும் காணாமல் போதல்களும் கொல்லப்படுவதும் இன்று வரை நாடு பூராகவும் குறிப்பாக வடக்குக் கிழக்கிலும் நடைபெற்ற வண்ணமே உள்ளன. கடந்த ஒரு வருடத்தில் சுமார் ஐநூறு பேர் வரை கடத்தப்பட்டுக் காணாமல் போயுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அதேபோன்று மர்மக் கொலைகளும் நடந்துகொண்டே இருக்கின்றன. தென்னிலங்கையில் பரவாலாக இவ்வாறான கொலைகள் இடம்பெற்று வருகின்றன. இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெண்கள் மர்மான முறையில் கொல்லப்பட்டு வந்துள்ளனர். அதில் ஒன்பது பெண்கள் கொலையுண்டனர். அண்மையில் 52 வயதுடைய பெண் ஒருவரும் அவரது 19 வயது மகளும் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். இதில் மூவர் சம்பந்தப்பட்டனர். அதில் ஒருவர் தற்போதைய அமைச்சர் ஒருவரின் பிரத்தியேகச் செயலாளரின் தம்பியாவார். இப்படுகொலையானது போதைப்பொருள் பரிமாற்றத்துடன் தொடர்புப்பட்டதாகவே கூறப்படுகிறது. பொதுவாகவே காவத்தைப் பிரதேசத்தில் கசிப்பு, போதைப் பொருட்கள் போன்றவற்றை மையமாக வைத்து வன்முறைகள் குறிப்பாக இன வன்முறைகள் கொலைகள் இடம்பெறுவது வழக்கமாக இருந்து வருகின்றது.

இதுபோன்று நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இத்தகைய வன்முறைகளும் கொலைகளும் இடம்பெறுகின்றன. இவற்றைச் சட்டத்தின் பாதுகாவலர்கள் என்போர் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. அதற்குக் காரணம் இலஞ்சம், ஊழல் ஒருபுறம் எனில் மறுபுறம் அதிகாரம் படைத்த அரசியல்வாதிகளின் தலையீடு இருந்து வருவதாகும். இத்தகைய சட்ட ஆட்சியில் அரசாங்கத்தின் அலட்சியத்தினாலேயே பல இடங்களில் மக்கள் வீதிக்கு இறங்கி பொலிஸ் நிலையங்கள் வரை சென்று நீதி, நியாயம் கேட்கின்றனர். ஆத்திர மிகுதியால் மக்கள் வன்முறைகளிலும் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இதனை ஆட்சியில் இருக்கும் சட்டத்தின் பாதுகாவலர்கள் கண்டித்து அம் மக்களின் மீது தமது அடக்குமுறைப் பலத்தை பிரயோகிக்கின்றனர். சட்டத்தை மக்கள் தமது கரங்களுக்கு எடுக்கக் கூடாதென கூக்குரல் வைக்கின்றனர். ஆனால் மக்களை அவ்வாறு செய்யத் தூண்டிய தமது பொறுப்பை மறக்கின்றனர். இதனால் பல நிலைப்பட்ட கொலை புரிவோரும் எவ்வித பயம், கூச்சமின்றி மனிதப் படுகொலைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறே பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் மீதான வன்புணர்ச்சிகளும் அதன் விளைவான கொலைகளும் இடம்பெற்று வருகின்றன. மனிதர்கள் காட்டுமிராண்டி நிலை கடந்து நாகரிகமடைந்தவர்களாகி இன்று நவநாகரிக உலகில் வாழ்கின்றார்கள். ஆனால் மிகுந்த காட்டுமிராண்டித் தனத்துடன் சிறுமிகளான பெண் பிள்ளைகள் மீது தமது காமவெறியை பிசாசுகள் போன்று தீர்த்துக் கொள்கிறார்கள். பெற்ற பிள்ளைகள் மீதும், கூட பிறந்த சகோதரிகள் மீதும் பாலியல் வன்புணர்சி பலாத்காரத்தில் ஈடுபடுவோரை எவ்வாறு மனிதர்கள் என்ற வரையறைக்குள் வைக்க முடியும்? அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நெடுந்தீவு பிரதேசத்தில் பண்ணிரண்டு வயது சிறுமி ஒரு காமவெறி பிடித்த மிருகத்தால் பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட கொடுமை நடந்தேறியது. இதனை ஒரு சாதரண அறிவு குறைந்த ஒருவன் செய்யவில்லை. அங்கு ஆட்சி அதிகாரத்திற்கு முட்டுக் கொடுத்து அதில் சுகங்கண்டு வரும் ஒரு கட்சியின் (முன்னாள்) உறுப்பினர் என்றே ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இச்சம்பவம் எப்படியோ வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. இது போன்ற பல சம்பவங்கள் வட-கிழக்கெங்கும் நடந்தேறியுள்ளன. எனினும் அவை வெளிச்சத்துக்கு வருவது அரிது. இதுபற்றி யாழ்ப்பாண போதான பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ். சிவரூபன் தெரிவித்த தகவல் அதிர்ச்சியானதாகும். கடந்த இரு மாதங்களில் 32 பாலியல் துஸ்பிரயோகங்கள் நடந்துள்ளன. அவற்றில் ஒன்பது சம்பவங்கள் மிக மோசமானவையாகும். கொடூரத் தனமான வன்புணர்ச்சிகளாக அவை காணப்பட்டன. வைத்தியர்கள் கடுமையாக முயற்சி செய்தே அச்சிறுமிகளைக் காப்பாற்றியுள்ளனர். இக்கொடுமைகளை எங்கே சென்று முறையிடுவது என்று மக்கள் அஞ்சி நடுங்குகின்றனர். இதுபோன்ற கொடூரச் சம்பவங்கள் 2010ல் 102 ஆகப் பதிவில் உள்ளன. இந்த எண்ணிக்கை 2011ம் ஆண்டில் 182 ஆக அதிகரித்திருந்தன. இந்த ஆண்டில் முதல் இரண்டு மாதங்களில் 32 சிறுமிகள் மீதான வன்புணர்ச்சி கொடூரம் என்றால் மிகுதி மாதங்களில் இவ்வாண்டு முடிவின் போது எத்தனையாக இருக்குமென்றே அஞ்சவேண்டி இருக்கின்றது. இத்தனைக்கும் வடக்கில் ரானுவ நிர்வாக வழிகாட்டலிலேயே சிவில் நிர்வாகம்(?) நடைபெறுகின்றது. அங்கு ரானுவத்தின் எண்ணிக்கை பாரியதாகும். அது பாதுகாப்புக்காக இருந்து வருவதாகவே நியாயப்படுத்தப்படுகின்றது.

சிறுவர்கள் மீது மட்டுமின்றி வளர்ந்தோரான குடும்ப பிள்ளைகளென இருந்து வரும் பெண்கள் மீதான வன்முறைப் புணர்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சில மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிள்ளைகளின் தாய் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு குதறப்பட்டார். இவ்வாறான கொடுமையான சம்பவங்கள் சிலவே வெளிவருகின்றன. பல சம்பவங்களை தங்கள் அளவில் மறைத்துக் கொள்ளவேண்டிய தேவை சமூக நிர்ப்பந்தங்களால் ஏற்படுகின்றன. சிலர் துணிந்து தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக முன்னிற்கின்றனர். பலர் மானம், மரியாதை, குடும்ப கௌரவம், அந்தஸ்து மற்றும் பிள்ளைகளின் எதிர்காலம் போன்றவற்றுக்குள் தங்களை முடங்கச் செய்துகொள்கின்றனர்.

இவ்வாறு நாட்டின் வடக்குக் கிழக்கு உட்பட்ட பல்வேறு பிரதேசங்களிலும் பெருகி வரும் கொலைகளையும் பாலியல் வன்புணர்ச்சிகளையும் கொடுமைகளையும் நோக்கும்போது வெறுமனே “சமூகச் சீரழிவு” என்று கூறி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறப்படுவதையும் கேட்கமுடிகிறது. இவ்வாறு கூறுவது ஒரு வகையான மேலெழுந்த பார்வையாக மட்டுமே இருக்க முடியும். சமய ரீதியான போதனைகளும் நற்சிந்தனைகளும் பரப்பப்பட்டால் அவை கட்டுப்படுத்தப்படும் அல்லது

தொடர்ச்சி 4ம் பக்கம்

www.padippakam.com



# முப்பரிமாணம்

காதல் என்று வந்து விட்டால், காதல் தோல்வி என்பது ஐஸ்கிரீம் சாப்பிடுவது போல் சாதாரண விடயம். மாத்தளை ராமு வேணியிடம் தோல்வியுற்றுக், காதல் காச்சலில் தவிக்கிறான். ஒழுங்காகச் சாப்பிடுவதும் இல்லை, தூங்குவதும் இல்லை. கொஞ்சமாவது மனதை தேற்றிக் கொள்வதற்கு வீட்டின் பொது அறையில் உள்ள டேப் ரெக்கோடரில்

"... பெண்ணைப் படைக்காதே பிரம்மனே
பாவம் ஆண்களே பரிதாபம் நாங்களே
எந்த மடையனோ சொன்னான் சொர்க்கமாம்... '

என்ற பாடல் வரிகளை திரும்ப திரும்ப ரீவைன் செய்து செய்து கேட்டுக் கொண்டிருக்கிறான்.

சம்மாந்துறை சஹீலும் அவன் பங்கிற்குத் தோல்வியை கண்டுவிட்டுதான் இருக்கிறான். அவனை காதலித்த ரிஸ்னா நேற்றுடன் தன்னை மறந்து விடும்படி சொல்லிவிட்டாள். சஹீல் தனது அறையின் கதவைப் பூட்டிக் கொண்டு தனது சீடி பிளேயரின் அண்மையில் இருந்து அவன் கேட்கும் ஒரே பாடல்

"யம்மா யம்மா காதல் பொண்ணம்மா
அட என்ன விட்டு போனதென்னம்மா....
அட ஆணோட காதல் கை ரேக போல...."

ஷாலிக்காவிடம் தோற்ற கல்கிஸ்ஸ ரொஷான் பைத்தியக்காரனைப் போல் இருக்கின்றான். ரொஷான் யாரிடமும் போசுவதில்லை. ஐபொட்டை (I Pod) காதில் போட்டவாறு, யானியின் இசையை அவன் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறான். தனிமையுடன் ஏற்படும் குளிரை மேலும் அதிகரித்துக்கொள்ள காரில் ஏசியை நடுங்கும் அளவிற்கு கூட்டி வைத்து கொண்டுள்ளான்.

இன்று எது அழகு என்று சொல்லித்தருவது யார் என்று உங்களுக்கு தெரியும். பெண்களுக்கும் சரி ஆண்களுக்கும் சரி எவை எல்லாம் அழகிற்குக் கேடானவை என்பதை பட்டியலிட்டு நமது ஊடகங்கள் நாளும் பொழுதும் சொல்லித்தருகின்றன.

அதன் விளைவாகத், தற்கால இளம் பெண்களுக்குத் தொப்பை இருத்தல் அவ்வளவு விருப்பமான விடயமல்ல. உடற் கட்டமைப்பைப் பராமரிக்கத் தொப்பை இல்லாமல் இருத்தல் வேண்டும். எம்பிலிப்பிட்டிய நயனாவிற்கும் செவ்வந்திக்கும் தொப்பை வைத்தல் பெரும் பிரச்சினையாக ஆகிவிட்டது. தொப்பையைக் குறைக்க அவர்கள் முடிவு எடுத்தனர். எனவே ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் அவர்கள், வேலை விட்டுப் போகையில் சற்றுத் தூரமான பாதையினூடாக வீட்டுக்கு நடந்து செல்லத் தீர்மானித்தார்கள். நாள் முழுக்க ஆடைத் தொழிற்சாலையில் உழைத்துச் செத்து வரும் அவர்களுக்கு வழமையை விட ஒரு கிலோமிட்டர் தூரம் நடந்து செல்லுதல் கஷ்டமாகத் தோன்றவில்லை, தொப்பையைக் குறைப்பதற்காக அந்த வேதனையைத் தாங்கிக் கொண்டு தொடர்ந்து நடக்க ஆரம்பித்து விட்டார்கள்.



கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த ரீமா தொப்பையைக் குறைப்பதற்குக் கண்டியில் உள்ள ஜிம் ஒன்றில் 1500 ரூபா மாதக் கட்டணத்திற்கு உடற்பயிற்சி செய்வதற்குச் சேர்ந்தாள். என்றாலும் ரீமாவுக்கு தொழில் காரணமாக ஜிம்முக்கு போக முடியாமலுள்ளது. தொழிலை முடித்து விட்டு ஜிம்முக்கு செல்வதற்கு ரீமா ஒவ்வாரு நாளும் பெரும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஏனைய எல்லாருக்கும் போலவே லக்சிகாவுக்கும் இந்த பிரச்சினை இருக்கிறது. என்றாலும் கஷ்டப்பட்டு தொப்பையைக் குறைப்பதற்கு அவளுக்கு இஷ்டம் இல்லை. எனவே அவள் கஷ்டமின்றி வயிற்றைக் குறைப்பது தொடர்பாக யோசித்தாள். அவளின் நண்பி மெக்டொனல்டில் வைத்து அன்றொரு நாள் "பெட் பேர்ன்ட்" என்ற புதிய சிகிச்சையைப் பற்றி கூறிய செய்தி ஞாபகத்திற்கு வந்தது. அச் செய்திக்கு அமைய அவள் மாதம் 50,000 ரூபா செலுத்தி பெட் பேர்ன்ட் நிலையத்துக்கு செல்கிறாள்.

ஒரே மாதிரி ஒரே வடிவில்

நவீன், ரொஷான், வினோதன் மூவரும் இன்று கோல்பேஸ் வந்துள்ளனர்.

நவீன் மொன்டேரோ ஒன்றில் வந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் விந்தியா வருவதாகச் சொல்லியிருந்தாள். நவீன் அவள் வரும் வரை கடற்கரைப் பகுதிக்கு சென்றான்.

ரொஷான் மோட்டர் பைக் ஒன்றில் வந்தான். நிவேதா 'ஷோர்ட் லீவ்' எடுத்துக்கொண்டு ரொஷானைச் சந்திக்க வருவதாகக் கூறியபடியால் ரொஷான் காத்துக் கொண்டிருக்கின்றான்.

வினோதன் பேரூந்தில் வந்தான். வனிதா வரும் வரை வினோதன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மூவரும் கடற்கரையோரம் வேவ்வேறு இடங்களிலே ஒருவருக்கு ஒருவரைத் தெரியாது நின்று கொண்டிருந்தாலும், மூவரும் கோல்பேஸ் வந்த நோக்கம் ஒன்று. ஆனால் மூவரையும் தூரத்தில் இருந்து பார்க்கும் போது ஒரு ஒற்றுமை தென்பட்டது. அந்த ஒற்றுமை, அவர்கள் மூவரும் நீல நிற டெனிம் நீற்காற்சட்டையை அணிந்திருந்தார்கள்.

நவீனின் டெனிம் 'லிவைஸ்'. சென்ற வாரம் வாங்கியது. புதிதாக வந்த டிசைன். ஆதலால் நவீன் கண்டவுடன் வாங்கிவிட்டான். அதன் விலை 16,000 ரூபாய்.

ரொஷான் தன் டெனிமை நோ லிமிட்டில் வாங்கினான். தொடர்ந்து ஒரு டெனிமை 2 வருடங்கள் பாவித்து நிறம் மாறியபடியால், இம் முறைச் சம்பளத்திற்கு 2000 ரூபாய்க்கு அந்த டெனிமை வாங்கினான்.

வினோதன் டெனிம் வாங்கியது மதிவெல பாதை ஓரத்தில் திடீரெனப் போடப்பட்ட சேல் ஒன்றில். அந்த இடத்தில் குறைந்த விலைக்கு நிறைய டெனிம்கள் விற்கப்பட்டன. ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கழிக்கப்பட்ட ஆடைகளே அவ்விடத்தில் போடப்பட்டிருந்தன. வினோதன் அவற்றில் தேடித் தேடி 500 ரூபாய்க்கு ஒரு டெனிமை வாங்கினான்.

மூன்று வகையான விலைகளைக் கொண்டிருந்த போதும் மூன்று டெனிம்களினதும் நிறமும் தோற்றமும் ஒன்றுதான்.

# விளையாட்டுத் துறையும் இளைஞர்களும்

விளையாட்டுத் துறையைத் தமது ஆக்கபூர்வமான களமாகப் பயன்படுத்தவேண்டிய இளைய தலைமுறையினர் பல்வேறு காரணங்களாலும் வெவ்வேறு துறைகளுக்குள் நுழைகின்றனர். பெரும்பாலும் புதியவற்றின் ஈர்ப்பினால் தமது சக்தியை வீணடிக்கின்றனர். உண்மையில் விளையாட்டுத் துறைக்குள் இளைஞர்கள் நுழைவதைத் தவிர்ப்பதற்குப் பல்வேறு தேவைகள் காரணமாகலாம். எனினும் இளைஞர்கள் மீதான தொழிற் பளுவும், ஆதாயக் கவர்ச்சியும் அவர்களை விளையாட்டிலிருந்து மட்டுமன்றிச் சமூக விடுதலை பற்றிச் சிந்திப்பதிலிருந்தும் நீக்கிவிடுகின்றன. இலங்கையின் இன்றைய சூழலில் வெளிப்படையாகத் தெரியும் விடயமான இளைஞர்களுக்கான ஆக்கபூர்வமான வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை உண்மையும் முழுமையுமான புள்ளிவிபரமல்ல. நகர்ப்புறங்களில் விளையாட்டுத் துறைக்கெனப் பொது விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு உபகரணங்கள், பயிற்சியாளர்களின் மேற்பார்வையில் பயிற்சிகள் போன்றவை வழங்கப்படுகின்றன. எனினும் இவை போதுமானவையல்ல. நகர்ப்புறங்களில் வாழ்ந்தபோதும் கணிசமான வீதத்தினர் இவ் வாய்ப்புக்களைப் பெறுவதில் இடர்ப்படுகின்றனர். போட்டி அதிகரிப்பும் வள ஒதுக்கீட்டுக் குறைவும் இதற்குக் காரணமாகின்றன. ஆர்வமும் ஆற்றலுமுடைவர்கள் இனங்காணப்படவேண்டும். அவ்வாறானால் மட்டுமே, அவர்கள் தலைசிறந்த வீரர்களாக மிளிர்ந்து இலங்கையின் இளைய தலைமுறையின் ஆற்லைச் சர்வதேச அரங்குகளில் பறக்க விடுவார்கள்.

இன்றைய காலகட்டத்தில், உடலுழைப்பைக் குறைத்து அனைத்தையும் பெறமுடியும் என்ற சூழலுக்குள் உலகமயமாக்கம் வசதிகள் செய்து தருகின்றது. எனினும் உழைப்பின்றி எவ்வாறு விளையாட்டில் வெற்றி பெறுவதென்று இவை சொல்லித்தரவில்லை. உடலுழைப்பும் இன்னும் மதிக்கப்படுகின்றது என்பதற்கு விளையாட்டுத் துறை முக்கியமான சான்று. பயிற்சிக்கான நவீன உபகரணங்களை வழங்கினாலும் வீரனோ அல்லது வீராங்கனையோ பயிற்சி செய்ய வேண்டியுள்ளார்கள். மனித குலத்தின் மிகப் பழமையான செயற்பாடுகளில் விளையாட்டு இன்னும் தன் முக்கியத்துவத்தை இழந்துவிடாமல் இருப்பது அதன் அத்தியாவசியத்தை உறுதிசெய்கிறது. இன்று எல்லாவற்றுக்கும் "இயந்திரங்கள்" வந்த பிறகு, மனிதன் உடலை வருத்தவேண்டிய நிலையைப் பலர் மறந்துவிட்டார்கள். மறுபுறம் புதிய உணவுப் பழக்கவழக்கங்கள், வேலைப் பளு, புதிய பொழுதுபோக்கு வசதிகள், இணையத்தைச் சர்வஞான மார்க்கமாக வழிபடும் போக்கு என்பனவும் அவனை ஒரு 'புரொய்லர் கோழியாக்கி'க் கொண்டிருக்கிறது. உடலையும் மனதையும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க விளையாட்டு முக்கிய பங்காற்றுகிறது. இது உடலுழைப்புக் குறைந்த விளையாட்டுக்கும் பொருந்தும். இலங்கையின் விளையாட்டுத்துறை சர்வதேச விளையாட்டுக் களங்களில் மிக சொற்ப அளவிலேயே பிரகாசித்திருக்கிறது. எனினும் இலங்கைக்குச் சமனான குடித்தொகையை கொண்ட நாடுகள் சர்வதேச அரங்குகளில் அதிகம் பிரகாசித்திருக்கின்றன. இலங்கை வீரர்களில் மிக அரிதாகவே சாதிக்கின்றனர். இலங்கையின் விளையாட்டுத்துறை அண்மைய காலங்களில் ஓரளவு முன்னேற்றமடைந்து வருகின்றது என நாம் சொல்லலாம். எனினும் இம் முன்னேற்றத்துடன் ஒப்பிடின், இடப்பட்ட நிதியும் பயிற்சியும் மிக அதிகம் என்பதே உண்மை. மிகப் பிரமாண்டமான அரங்குகள் சர்வதேச தரத்தை மையப்படுத்திக் கட்டப்படுகின்றன.

"உடலுழைப்பைக் குறைத்து அனைத்தையும் பெறமுடியும் என்ற சூழலுக்குள் உலகமயமாக்கல் வசதிகள் செய்து தருகின்றது. எனினும் உழைப்பின்றி எவ்வாறு விளையாட்டில் வெற்றி பெறுவதென்று இவை சொல்லித்தரவில்லை."



சர்வதேசப் போட்டிகள் இலங்கையில் நடாத்தப்பட்டிருக்கின்றன. 2013ல் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இறுதி நேரத்தில் அவுஸ்திரேலியா அந்த வாய்ப்பை பெற்றுக் கொண்டது. விளையாட்டு அரங்குகளை வானளாவக் கட்டுவதைவிட, ஆர்வமுள்ள வீரர்களை உரிய பயிற்சியளித்து வளர்ப்பது மிகுந்த பயனுடையது. கிராமப்புறங்களிலிருந்து வந்த விளையாட்டு வீரர்கள் நம் தேசத்தின் பெயரை சர்வதேச அரங்குகளில் ஒலிக்கச் செய்திருக்கிறார்கள். சுகத் திலகரட்ன, சுசந்திகா, ஜயசூரிய போன்றவர்களைக் குறிப்பிடலாம். இளைஞர்களின் எண்ணிக்கை லட்சங்களாக இருக்கும் வேளை அவர்களிடையே இருந்து விளையாட்டுத் துறைக்கான வீரர்களை தேர்ந்தெடுப்பதில் இன்னும் இலங்கையின் நிலைமை இடர்ப்பாடுடையதாகவே இருக்கிறது. பிரதேசரீதியில் விளையாட்டுத் துறை அபிவிருத்திகள் கிராமப்புறங்களை இன்னும் தேடிச்செல்லாது நகரப் புறங்களையே சுற்றிக் கொண்டிருக்கின்றது. நகர்வாழ் இளைஞர் யுவதிகளுக்குக் கிடைக்கும் வாய்ப்புக் கிராமப்புற வீரர்களுக்கு இல்லை. மலையகத்திலும் விளையாட்டுத்துறை அமைச்சின் பார்வை நகரங்களையே மையப்படுத்தியிருக்கின்றது. சிறு நகரங்களில் வெறும் மைதானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளையாட்டுத் துறையின் இயக்கம் மந்த கதியிலேயே உள்ளது. கிராமப்புற, தோட்டப்புற விளையாட்டு வீரர்கள் கிரிக்கட், வொலிபோல், மரதன் என்பன போக மிகக் குறைந்த அளவிலேயே மெய்வல்லுனர் போட்டிகளிற் பங்கேற்கின்றனர். விளையாட்டுத் துறை அத்தோடு நின்றுவிடாது, அவற்றைத் தொடக்குவதோடு உள்ளக, வெளியக விளையாட்டுக்கள் பிரித்தறியப்பட்டுக், கிராம, தோட்டப்புறங்களில் விளையாடப்பட வேண்டும். குறிப்பாகப், பெண்களை விளையாட்டுத் துறையில் முன்னேற்றம் காணச் செய்தல் சமூக அசைவியக்கத்தில் பல்வேறு சாதகமான சந்தர்ப்பங்கள் தோன்றக் காரணமாக அமையும். கிராமப்புற, தோட்டப்புற யுவதிகளின் உடல், உள வலுவை மிகக் காத்திரமாக பிரயோகிக்கக் கூடிய துறையாக விளையாட்டுத் துறை காணப்படுகிறது. பெண்களின் தலைமைத்துவத்தையும் சமுதாய அந்தஸ்தையும் உயர்த்துவதில் விளையாட்டுத் துறைக்கு முக்கிய இடம் உள்ளது. வசதி படைத்தவர்களுக்கென மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் விளையாட்டுத்துறை கிராம, தோட்டப்புற கிராம தோட்டப்புற வீரர்கள் வரை விரிவடைய வேண்டும். ஈட்டி எறிதல் போட்டியில் தேசிய மட்டத்தில் திறமையை வெளிக்காட்டி முதலிடம் பெற்ற மொனராகலை வீரரங்கனை ஒருவர் தனக்குரிய சப்பாத்துச் சோடிகளை வாங்குவதற்கு உதவி கோரி இருப்பது மிக அண்மைய ஒரு உதாரணமாகும்.

கிராமங்கள் தோறும் மைதானங்களையும் பயிற்சிக் கூடங்களையும் அமைத்து பயிற்சியளிக்கும் வசதிகள் உடனடியாக சாத்தியப்படாவிடினும், பிரதேச சபைப் பிரிவுகள், குறைந்தது பத்துத் தோட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களை ஒன்றிணைத்து விளையாட்டுப் பயிற்சிகளை வழங்க முடியும். பல்வேறு துறைகளிலும் திறமையான இளைஞர் யுவதிகள் தமது திறமையையும் வலுவையும் தாமறியாமல் தொலைத்து நிற்கிறார்கள். விளையாட்டில் ஈடுபடுவோர் பல்வேறு விதமான போதைப் பொருட்களோடு மைதானங்களில் இருப்பது அருவருக்கதக்கதாய் உள்ளது. ஒரு கையில் மட்டையுடனும் மறு கையில் சிகரட்டுடனும் மைதானங்களில் காணமுடிகின்றமை விரும்பதக்கதல்ல. இருக்கும் குறைந்த வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி இளைஞர்களை ஆக்கபூர்வமான சக்தியாக மாற்றியமைக்கவும் அவர்களால் ஏனையோர் பயன் பெறவும் விளையாட்டுக் கலாசாரம் ஒன்று அவசியமாகும். இக் கலாசாரம் ஒவ்வொரு இளைஞர் யுவதியிடையேயும் வளரும் போது, இளைஞர் சமூகத்தின் வளர்ச்சி இடையூறு அற்றதாக அமையும். உடல், உளப்பலம், நல்ல உணவு, பான வகைள் நல்ல பழக்க வழக்கங்கள், விட்டுக்கொடுக்கும் பண்பு, தவிர்க்க வேண்டிய பழக்கங்கள், இளைஞர்களின் சமூக நோக்கும் தலைமைத்துவமும் வளர்ந்து வருவோருக்கு முன்னோடியாக விளங்குதல் என்பனவும் உள்ளடங்கும் போது அவர்கள் சமூக மாற்றத்திற்கான ஒழுக்கமிகு இளைஞர் சமூகமாக வளர்ந்து பல்வேறு துறைகளிலும் தமது பங்களிப்பை வழங்க முடியும்.

ஆனால் சர்வதேச அளவிலும் இலங்கையிலும் விளையாட்டுத் துறை வர்த்தகமயமாக்கப்பட்டு ஊழல் பெருச்சாளிகளின் உறைவிடமாக மாறி நிற்கின்றது. கிரிக்கட் என்ற பயனற்ற பெரும் விளையாட்டு இன்று பல்தேசியக் கம்பனிகளினால் உள்வாங்கப்பட்டு மக்களிடையே, முக்கியமாக இளைஞர்களிடையே, ஒரு வகைப் போதைப் பொருளாக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றிப் பாரம்பரிய விளையாட்டுகள் சாகடிக்கப்பட்டும் வருகின்றன. எனவே இன்றைய நவகொலனியச் சிந்தனையை விரிவாக்கும் விளையாட்டுக்களை நிராகரித்து சமூக நலன் சார்ந்த விளையாட்டுகளை ஊக்குவிக்க முழு முயற்சி எடுக்கப்படல் வேண்டும்.

வே. தினகரன்

www.padippakam.com



# கொத்து ரொட்டியும் தொழிலாளர் சட்டமும்

**செல்வா**

அண்மையில் கொழும்பு மாநகர சபை கொத்துரொட்டி தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல் தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கி அவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்குவதாக அறிவித்திருப்பதாக செய்தியில் படித்தேன். சில நாட்களுக்கு முன்னர் வெள்ளவத்தையில் ஒரு சிறிய ஹோட்டல் ஒன்றில் ஒரு கொத்துரொட்டி வாங்கி சாப்பிட்டேன். காசைக் கொடுத்துவிட்டு வருவதற்கிடையில் படித்த செய்தி ஞாபகத்திற்கு வந்தது. ஹோட்டல் உரிமையாளரிடம் அது தொடர்பாக பேசுவோம் என்று முடிவெடுத்து கொத்து ரொட்டி போடுபவர்களுக்கு பயிற்சி வழங்குவதாக மாநகரசபை அறிவித்தார்களே. தகவல்கள் எதுவும் கிடைத்தா எனக் கேட்டேன். அதற்கு, “தம்பி இதெல்லாம் நடக்கிற கதையா? நேற்று ஒருவன் வந்தான், உங்களிடம் வேலை செய்கின்றர்வர்களுக்கு நீங்கள் EPF, ETF கொடுக்கின்றீர்களா? என்று கேட்டான். தம்பி இங்க வேலைக்கு வாற பொடியனுங்க 2, 3 நாளுக்குத்தான் இருக்கிறானுங்க. அவனுங்களுக்கு நாள் சம்பளத்தை கொடுக்காம என்ன செய்யுறது. அதுவும் சொல்லாம கொல்லாமலே வீட்டுக்கு ஓடிப் போயிடுரானுங்க.” என்றார். நான் அவரிடம் பதிலுக்கு எதையும் கேட்க நினைக்கவில்லை. என்றாலும் கொத்து போட்டுத் தந்த அந்த சகோதரன் 2, 3 நாட்களில் வேலையை விட்டு போவதற்கு காரணம் என்னவென்றும் யோசிக்கனும் என்று சிரித்துக் கொண்டே நான் சொல்வது முதலாளியின் காதில் விழவேண்டும் என்ற நோக்கத்தோடு சொன்னேன். முதலாளியோ தனது காதில் எதுவும் விழாதது போல இருந்தார். நான் அங்கிருந்து விடைபெற்று வந்தேன். எனினும் அந்தச் சம்பாஷனையும் நிகழ்ச்சியும் பல கேள்விகளை என்னுள் எழுப்பின.

மக்களின் உணவுச் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே கொத்துரொட்டி தயாரிக்கும் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கொழும்பு மாநகரசபை அறிவித்திருந்தது. அதன் நடைமுறைச் சாத்தியத்தன்மை போக, எதிர்பார்க்கும் விளைவுகள் தொடர்பான கேள்விகளும் காணப்படுகின்றன. ஆனால் கொத்துரொட்டி தயாரிக்கும் தொழிலாளர்களுக்குப் பயிற்சியை வழங்கி அவர்களின் தொழிலுக்குக் கௌரவம் வழங்க இருப்பதாகச் சொல்லும் கொழும்பு மாநகரசபை உண்மையில் அவர்கள் கௌரவத்துடன் வாழும் சூழலை ஓரளவேனும் உறுதிப்படுத்த வேண்டுமாயின், முதலில் செய்யவேண்டியது, இன்றைய சமூகக் கட்டமைப்பில் தொழிலாளர்களுக்கு உள்ள ஆகக்குறைந்த உரிமைகளை வழங்கும் தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்துவதாகும்.

**மலையக இளைஞர்களே பெரும்பாலும் ஹோட்டல் தொழிலாளர்களாக கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் பணிபுரிகின்றனர். எனினும் அவர்கள் பெருந்தோட்டத் துறையில் இடம்பெறும் சுரண்டலிலும் அதிகமான சுரண்டலை ஹோட்டல் துறையில் அனுபவித்து வருகின்றனர்.**



இலங்கையில் அடிப்படைச் சட்டமாக சொல்லப்படுகின்ற அரசியலமைப்புச் சட்டமே மீறப்படும் நிலை நாம் அறிந்ததே. ஆனால், தொழிலாளர் சட்டங்கள் மீறப்படும் அளவிற்கு வேறு எந்த சட்டமும் மீறப்படுவதில்லை. குறிப்பாக முறைசாரா தொழிற் துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சட்டரீதியான எந்தத் தொழில் உரிமையும் அற்றவர்களாவே காணப்படுகின்றனர். ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கான சட்டரீதியான உரிமை இருந்தும் அவை நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. அத்தோடு வேலை நேரம், வேலை அளவு, விடுமுறை என்பன தொழில் வழங்குனரின் விருப்பு வெறுப்புகளுக்கு அமையவே வழங்கப்படுகின்றன. இவைகள் தொழிற்சட்டங்களை அப்பட்டமாக மீறும் நடவடிக்கைகளாகும். முறைசாராத் தொழிற்துறைகளில் அதிக தொழில் வழங்கும் துறைகளில் ஒன்றாக ஹோட்டல்கள் காணப்படுகிறன. பெரும்பாலும் மலையக இளைஞர்களே ஹோட்டல் தொழிலாளர்களாக கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் பணிபுரிகின்றனர். எனினும் அவர்கள் பெருந்தோட்டத் துறையில் இடம்பெறும் சுரண்டலிலும் அதிகமான சுரண்டலை ஹோட்டல் துறையில் அனுபவித்து வருகின்றனர்.

எனவே கொத்துரொட்டி போடும் தொழிலாளர்களுக்குப் பயிற்சிச் சான்றிதழுக்கும் சீருடைக்கும் முன்னர், கொழும்பு மாநகரசபை மட்டுமன்றி அரசாங்கமும் செய்ய வேண்டியது இருக்கின்ற தொழிற் சட்டங்களை முழுமையாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுப்பதாகும். ஆனால் அதனைச் செய்யும் நோக்கம் இந்த அரசாங்கத்திடமோ இதற்கு முன்னைய அரசாங்கங்களிடமோ கொழும்பு மாநகர நிர்வாகத்திடமோ இருந்ததில்லை. இது ஹோட்டல் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மட்டுமன்றி அனைத்துத் தொழிலாளர்களும் அறியவேண்டிய உண்மையாகும். நாம் நமது உரிமைகளை போராடியே பெறவேண்டும் என்பதே யதார்த்தமாகும்.

# விசுவமடுவில் பொதுவுடைமை தோழருக்கு அஞ்சலி





தோழர் செல்வராசா மறைவுக்கான நினைவு அஞ்சலி பகிர்வுக் கூட்டம் விசுவமடுவில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் அவரது பிள்ளைகள், உறவினர்கள், கட்சித் தோழர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர். மேற்படி கூட்டத்தை விசுவமடு கிளைத் தோழரான சிறீ அவர்கள் தலைமை தாங்கி முன்னெடுத்துச் சென்றார். அவர் தனது நினைவு உரையின்போது தோழர் செல்வராசா தமது வர்க்க உணர்வோடு இறுதி வரை கட்சியையும் மக்களையும் நேசித்ததைப் பற்றியும் அவரது பொதுவுடைமைச் சிந்தனைகளை தமது குடும்பத்தாருக்கு ஊட்டியதைப் பற்றியும் நினைவு கூர்ந்தார். அது மட்டுமின்றி தோழர் செல்வராசா இறுதிவரை ஒரு கம்யூனிஸ்ட் கொள்கைவாதியாக இருந்ததைப் பற்றியும் நினைவுப்படுத்தத் தவறவில்லை. குறிப்பாக முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் நடைபெற்ற இறுதிகட்ட யுத்தத்தின்போது தான் அனுபவித்த சொல்லொ னாத் துயரங்களின் பின்னரும்கூட மக்கள் மத்தியில் பொதுவுடைமை இயக்கத்தைக் கட்டி எழுப்பவேண்டும் என்ற உறுதியுடன் அவர் இருந்ததையும் தோழர் சிறீ தனது தலைமை உரையில் சுட்டிக் காட்டினார்.

அடுத்து அஞ்சலிப் பகிர்வு செய்ய வந்த புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் தனது அஞ்சலி உரையில் தோழர் செல்வராசா மாணவப் பருவத்திலேயே கட்சியின் செயற்பாடுகளுக்கு அரைக் காற்சட்டையுடன் வருகைத்தந்ததையும் மாணவ, இளைஞர் இயக்கங்கங்களில் பங்குபற்றி மக்கள் மத்தியிலான பிரச்சினைகளையும் அவலங்களையும் அம்பலப்படுத்தி முன்னின்ற இளைஞர்களில் ஒருவர் என்ற ஆரம்பகால நினைவுகளையும் பகிர்ந்தார். அத்துடன் சமூக ஏற்றத்தாழ்வு, அநீதி மற்றும் ஒடுக்குமுறை அனைத்துக்கும் எதிராக கட்சி முன்னெடுத்த இயக்கங்கள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புப் பேரணிகள் என அனைத்திலும் பங்குபற்றிய ஒருவர் தோழர் செல்வராசா என்பதையும் சமூக அநீதிகளைப் பற்றிய விஞ்ஞான ரீதியான கேள்விகளுக்கு சரியான பதிலையும் போராட்டத்தையும் அவருக்கு பொதுவுடைமை இயக்கம் தத்துவார்த்த ரீதியில் வழங்கியதால் அவர் வடபுலத்து பொதுவுடைமை இயக்கத்தில் அணிவகுத்த முக்கியமான தோழர்களில் ஒருவராய் இருந்து வந்தார் என்பதையும் குறிப்பிட்டார். அதுமட்டு மின்றி என்பதுகளில் எழுந்த தேசியவாத, இனவாத அரசியல் காரணமாக பொதுவுடைமை இயக்கம் சற்று பின்னடைவை எதிர்நோக்கிய போதும்கூட தனது கொள்கையைத் தூக்கியெறிந்துவிட்டு பதவி, பட்டம், அதிகாரம் என அவர் ஒருபோதும் ஓடியதில்லை. அத்தோடு அவர் ஒருபோதும் தமிழ்த் தேசியவாத இயக்கங்களின் கொள்கை கோட்பாடுகளுடன் செயற்பட்டவருமில்லை. வர்க்க ரீதியாக தானும் தமது மக்களும் தனது சமூகமும் அணிதிரள வேண்டிய சரியான இடம் போராடவேண்டிய தலைமை என்பவற்றில் அவர் புரட்சிகர பொதுவுடைமை இயக்கத்தை நோக்கி நின்றமை அவருக்குரிய சிறப்பாகும் என்பதையும் குறிப்பிட்டார்.

தோழர் செல்வராசா இறுதிவரை ஒரு தோழராக வாழ்ந்தே தனது வாழ்க்கையை நிறைவு செய்தார். அதுமட்டுமின்றி யுத்தத்தின்போது விடுபட்டுப்போன கட்சி உறவை யுத்த முடிவிற்குப் பின்னர் மீள ஏற்படுத்தி கட்சியுடன் தொடர்ந்து முன்செல்வதை உறுதிசெய்து நின்றார். அவர் கடந்த வருட மேதினத்தில் கலந்துகொண்டு கட்சியின் வளர்ச்சியும் அதனது மக்களுக்கான தேவைகளையும் பற்றி அக்கறையுடன் கலந்துரையாடி நின்றமை நம்பிக்கை தருவதாக இருந்தது. தோழர் செல்வராசா அவர்களின் வாழ்வில் பல கட்டங்களில் இன்னல்கள், துன்பங்கள் வந்தபோதிலும் அவர் இறுதிவரை தனது சுயநலத்துக்காக மாக்சிச லெனினிசத்தைக் கைவிடுபவராக வாழ்ந்தவரில்லை. அதன் மூலம் அவர் தன் குடுப்பத்தையும் பிள்ளைகளையும் சரியான திசையில் வழிநடத்துபவராக வாழ முடிந்தது. அதனால் அவரது வாழ்க்கை அர்த்தமுடையதாகியது எனத் தோழர் சி. கா. செந்திவேல் குறிப்பிட்டார்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தனது அஞ்சலிப் பகிர்வு ஒன்றை அவரது 31ம் நாள் நினைவு தினத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நினைவுப் பகிர்வில் கொழும்பில் இருக்கின்ற கட்சியின் தலைமையகத்தில் இருந்து கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் உட்பட யாழ்ப்பாணத் தோழர்கள் வவுனியாத் தோழர்கள், விசுவமடுத் தோழர்கள் என பலரும் கலந்து கொண்டு தமது செவ் வஞ்சலியை தோழர் செல்வராசாவிற்கு தெரிவித்தனர்.

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

## 17

வெகுஜனன்

தனது முதலாவது பதவிக் காலம் முடிய ஒரு வருடம் இருக்கக்கூடியதாகத், தான் பதவியேற்று ஐந்து வருடங்களின் பின் சந்திரிகா குமாரதுங்க 1999ல் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முன்வந்தார். அவர் யுத்தத்தையும் அரசியல் தீர்வுப் பொதியையும் ஒரே நேரத்தில் முன்னெடுத்தார். ஆனால் அவ்விரண்டில், அவரது "சமாதானத்திற்கான யுத்தமே" வேகமாக முன்சென்றது. அதனைப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இருந்த வலதுசாரிகளும் பேரினவாதிகளும் ராணுவத்தின் உயர் மட்டத்தினரும் மனதார விரும்பினர். புலிகள் முன்னெடுத்த தாக்குதல் ஒவ்வொன்றையும், தமது ராணுவ நடவடிக்கைகளுக்கும் அதன் விஸ்தரிப்பான யுத்தத்திற்கும் தமது பக்க நியாயமாகவும் காரணமாகவும் மேற்குறிப்பிட்ட சக்திகள் காட்டி நின்றனர்.

இந் நிலையில், சந்திரிகாவால் அச் சக்திகள் வகுத்த எல்லைக்கு அப்பால் செல்ல முடியாத இக்கட்டான நிலையில் இருந்து வந்தார். ஒருவர் அதிகாரத்திற்கு வருமுன்பு எவ்வளவிற்கும் பேசிக் கொள்ளலாம் அல்லது வாக்குறுதிகள் வழங்கலாம். ஆனால் பதவிக்கு வந்த பின்னர் ~~குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட தனிநபர் பதவிக்கு வந்த பின்னர்~~ அத்தகையவரது சிந்தனையும் செயற்பாடுகளும் சர்வாதிகாரப் பதையில் செல்லும் என்பதற்கு அவர் உதாரணமாக விளங்கினார். அதனால், அவர் 1995 ஆகஸ்ட் மாதம் முன்மொழிந்த தீர்வுத் திட்டமானது சாதகமான வழிகளில் முன்னெடுக்கப்படவில்லை. இதில் ஐ.தே. கட்சி, ஜே.வி.பி. என்பன மும்முரமான எதிர்ப்புச் சக்திகளாக நின்றன. பாராளுமன்ற இடதுசாரிகள், சக்தி எதுவும் அற்றவர்களாகப் பதவிகளுடன் ஒட்டியபடி இழுபட்டுச் சென்றனர்.

இந் நிலையில் ஆயுதங்களும் ராணுவ ஆட்சேர்ப்பும் இராணுவ ரீதியில் விஸ்தரிக்கப்பட்டு வந்தன. அத்துடன் தமிழர் என்று கவனமாக வலிந்து ஒட்டப்பட்ட லேபலுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உலக நாடுகளில் புலி எதிர்ப்புப் பிரசாரத்திலும் பிரதான நாடுகளில் அவ்வியக்கத்தை தடை செய்யச் செய்வதிலும் தனது ஆற்றலை நன்கு பயன்படுத்திச் சந்திரிகா அரசாங்கத்தின் நன்மதிப்புக்குரிய அமைச்சராக விளங்கினார். அவரது வெளி விவகாரப் பொறிமுறையானது நல்ல பயனைக் கொடுத்ததுடன் யுத்தம் விரிவடைந்து செல்வதற்கும் வழிவகுத்தது. அதே வேளை அவர் தமிழர் தரப்பில் புலிகள் இயக்கத்தால் துரோகிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டார் என்பதும் இரகசியமல்ல.

1996க்குப் பின் யுத்தம் வேகமடையச் தொடங்கிய காலத்தில் தெற்கிலே யுத்த எதிர்ப்பு இயக்கத்தையும் அரசியல் தீர்வை வற்புறுத்தியும் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதில் பாராளுமன்றத்திற்கு அப்பாலான இடதுசாரிக் கட்சிகளும் அமைப்புகளும் முன்னின்று செயற்பட்டு வந்தன. அவர்கள் முன்னெடுத்த இயக்கங்களில் ஒரே ஐக்கிய முன்னணியாக இணைந்து செயல்படக் கூடிய பொதுக் கொள்கைகளும் தன்மைகளும் காணப்பட்டன. அதனால் யுத்தத்திற்கு எதிராகவும் அரசியல் தீர்வை வலியுறுத்தியும் அன்றாடப் பிரச்சினைகளில் அரசாங்கத்தின் மக்கள் விரோதப் போக்குக்களை எதிர்த்தும் இவ் இடதுசாரிச் சக்திகள் ஐக்கிய இடதுசாரிக் குழு என்ற பெயரில் ஐக்கியப்பட்ட செயற்பாடுகளில் இறங்கின.

புதிய~ஜனநாயக மாக்சீச~லெலினிசக் கட்சி (அன்று புதிய ஜனநாயகக் கட்சி) நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சோசலிசக் கட்சி, முஸ்லிம் ஐக்கிய முன்னணி, தேசிய ஜனநாயக இயக்கம், தியச அமைப்பு ஆகிய ஆறு அமைப்புகள் ஒன்றிணைந்து புதிய இடதுசாரி முன்னணி என்றும் பெயரில் செயற்பட முன்வந்தன. புதிய~ஜனநாயக மாக்சீச~லெனினிசக் கட்சியின் சி.கா. செந்திவேல், இ. தம்பையா நவ சமசமாஜக் கட்சியின் விக்கிரமபாகு கருணாரத்தின, லீனஸ் ஜயதிலக, வ. திருநாவுக்கரசு, முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் முஜிபுர் ரஹ்மான், ஐக்கிய சோசலிசக் கட்சியின் சிறிதுங்க ஜயசூரிய, மகிந்த தேவகே, தேசிய ஜனநாயக இயக்கத்தின் பற்றிக் பெர்னாண்டோ, தியச அமைப்பின் வசந்த திசாநாயக்க ஆகியோர் புதிய இடதுசாரி முன்னணியின் தலைமைக் குழுவினராகச் செயற்பட்டனர். இப் புதிய இடதுசாரி முன்னணி தேர்தல் செயலகத்தில் இணைந்த முன்னணியாகவும் பதிவு பெற்றுக் கொண்டது. அதன் தேர்தல் சின்னமாக, 'மேசை' கிடைத்திருந்தது.

இப் புதிய இடதுசாரி முன்னணியில் தோற்றமும் அது முன்னெடுத்த போராட்ட நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு அப்பாலான இடதுசாரிச் சக்திகளிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தின. "யுத்தத்தை நிறுத்திச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அரசியல் தீர்வைக் கொண்டு வா" "பொருட்களின் விலை உயர்வைத் தடுத்து நிறுத்து" "வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்து" "சம்பள உயர்வை வழங்கு" என்பன போன்ற பிரதான கோரிக்கைகளை இம் முன்னணி முன்னெடுத்தது. தெற்கிலே சிங்கள மக்கள் மத்தியில் அதற்கு வரவேற்பும் வளர்ந்து வந்தது. கொழும்பு, கண்டி, குருநாகல், மாத்தறை, களுத்துறை, மலையகம் போன்ற இடங்களில் அது வெகுஜன இயக்க நடவடிக்கைகளை முன்னெடுத்தது. துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் வீதி மறியல் போராட்டங்கள் என்பன முன்னெடுக்கப்பட்டன. இவற்றில் எல்லாம் போர் நிறுத்தமும் அரசியல் தீர்வும் முக்கிய கோரிக்கைகளாக முன்னெடுக்கப்பட்டன. அவை பிரதானமாகச் சிங்கள மக்கள் மத்தியிலே இடம்பெற்றன. சாதாரண உழைக்கும் சிங்கள மக்கள் பேரினவாதிகளோ அல்லது இனவெறி கொண்டவர்களோ அல்லர் என்பதை இந்த யுத்த எதிர்ப்பின் போது நடைமுறை அனுபவமாகப் பெற முடிந்தது. இன ஒடுக்குமுறையின் அம்சங்கள் பற்றியும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நியாயமான அரசியல் தீர்வு பற்றியும் எடுத்துக் கூறப்பட்டவற்றை சிங்கள மக்கள் செவி கொடுத்துக் கேட்டதுடன் அவற்றின் நியாயப்பாடுகளை ஏற்றுங் கொண்டனர். குருநாகல் நகரில் யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வை வலியுறுத்தி 1998ல் ஒரு முழு நாள் சத்தியாக்கிரகமும் கருத்தரங்கும் போர் எதிர்ப்புக் கலை இலக்கிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர்.

> தெற்கில் இருந்த நேர்மையான இடதுசாரி சக்திகளினதும் ஜனநாயக சக்திகளினதும் தமிழர் தரப்பிற்கான நட்புக் கரமாகவே புதிய இடதுசாரி முன்னணியின் கடிதம் அமைந்திருந்தது. ஆனால் அக் கடிதம் பற்றியோ அதில் குறிப்பிட்டிருந்த விடயங்கள் பற்றியோ அல்லது கடிதம் கிடைத்தது என்றேனுமோ புலிகளிடமிருந்து பதிலே வரவில்லை.

புதிய இடதுசாரி முன்னணி அரசாங்கத்திற்கு ஒரு தலையிடியாக வளர்ந்து விட்டதுடன் மாற்று இடதுசாரி சக்தி தாமே என ஜே.வி.பி. உரிமை கொண்டாடிய சூழலில் அது கடுமையான சவாலாகவும் விளங்கியது. அதனாற், பல பக்கங்களில் இருந்தும் அதனைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளும் இடம்பெற்றன. இதன் மத்தியில் 1999ல் மேல் மாகாணம் உட்பட மத்திய, வடமேல், சப்பிரகமுவ, வடமத்திய ஆகிய மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றது. புதிய இடதுசாரி முன்னணி அதில் போட்டியிட்டது. மேல் மாகாண சபைக்குப் புதிய இடதுசாரி முன்னணி சார்பாக ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார். வடமேல் மாகாண சபையில் ஒரு உறுப்பினர் தெரிவாவது சில நூறு வாக்குகள் வித்தியாசத்தில் தவறப்பட்டது. எல்லா இடங்களிலுமாகப் புதிய இடதுசாரி முன்னணி வேட்பாளர்கள் அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றனர்.

புதிய இடதுசாரி முன்னணி யுத்தத்தை எதிர்த்து அரசியல் தீர்வை வற்புறுத்தி வந்த சூழலில் புலிகள் இயக்கத்துடன் ஒரு பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு முன்வந்து, தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுக்கு உத்தியோகபூர்வமாக ஒரு கடிதத்தை அனுப்பிவைத்தது. அக் கடிதம் அவர்களது கைகளைச் சென்றடைந்தது. புதிய இடதுசாரி சிங்கள மக்கள் மத்தியிலும் மலையகத்திலும் யுத்தத்தை நிறுத்தக் கோரியும் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை வழியுறுத்தியும் முன்னெடுத்து வரும் வெகுஜன இயக்கத்தைப் பற்றியும் அதிற் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அவை குறித்த ஒரு பேச்சு வார்த்தையைக் கோரியே கடிதத்தை எழுதியிருந்தது. அன்றைய சூழலில் தெற்கில் இருந்த நேர்மையான இடதுசாரி சக்திகளினதும் ஜனநாயக சக்திகளினதும் தமிழர் தரப்பிற்கான நட்புக் கரமாகவே புதிய இடதுசாரி முன்னணியின் கடிதம் அமைந்திருந்தது. ஆனால் அக் கடிதம் பற்றியோ அதில் குறிப்பிட்டிருந்த விடயங்கள் பற்றியோ அல்லது கடிதம் கிடைத்தது என்றேனுமோ புலிகளிடம் இருந்து பதிலே வரவில்லை.

> புதிய இடதுசாரி முன்னணியின் தோற்றமும் அது முன்னெடுத்த போராட்ட நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு அப்பாலான இடதுசாரி சக்திகளிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தின. தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அமைந்த அரசியல் தீர்வை அது வலியுறுத்திச் செயற்பட்டது.



தோழர் மணியம்



வே. பிரபாகரன்

புலிகள் இயக்கத்தின் வலதுசாரிச் சார்பையும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் சிங்கள மக்களின் மத்தியிற் செல்வதைப் புலிகள் விரும்பவில்லை என்ற நடைமுறை உண்மையையும் இது எடுத்துக்காட்டியது. புலிகள் இயக்கத்தின் தமிழீழக் கோரிக்கையும் அதன் அராஜகம் நிறைந்த இராணுவ நடவடிக்கைகளையும் புதிய~ஜனநாயக் மாக்சிய~லெனினிசக் கட்சியும் புதிய இடதுசாரி முன்னணியும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதே வேளை, புலிகள் முன்னெடுத்த போராட்டத்தின் உள்ளே இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகிய தமிழ் மக்களின் அடிப்படை அபிலாட்சைகள் உள்ளடங்கியிருப்பதை அக் கட்சி அடையாளம் கண்டது. அதனால், அது, இன ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ் மக்கள் பக்கத்தில் என்றும் இருந்து வந்தது.

புதிய~ஜனநாய மாக்சிய~லெனினிசக் கட்சியின் மேற்படி கொள்கைளை அரசாங்கச் சார்புப் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் விமர்சித்துப் புலி முத்திரை குத்தினர். ஒடுக்குமுறைகள் எவ்வடிவத்தில் வந்தாலும் அவற்றை எதிர்த்து நிற்பது மாக்சிய லெனினியவாதிகளின் அடிப்படை நிலைப்பாடாகும். எக் கட்டத்திலும் ஆளும் வர்க்கத்தின் ஒடுக்குமுறையுடனோ அதன் அரசு இயந்திரத்துடனோ சமரசம் செய்ய மாட்டாத நிலைப்பாட்டையே புதிய~ஜனநாய மாக்சிய~லெனினிசக் கட்சி அன்றும் பின்பற்றியது. எனவே அதன் நடைமுறைகளும் செயற்பாடுகளும் அது வெளியிட்ட அறிக்கைகள் யாவும் ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களுக்குச் சார்பாகவே இருந்தது. ஆளும் தரப்பினர் எவராக இருந்தபோதிலும் அவர்களுக்கு எதிராகவே அமைந்திருந்தது.

அந் நிலைப்பாட்டை வைத்து அரசாங்க சார்பு இடதுசாரிகள் புதிய~ஜனநாய மாக்சிய~லெனினிசக் கட்சிக்குப் புலிகள் சார்பினர் என முத்திரைக் குத்திப் பிரசாரம் செய்த அதே வேளை அக் கட்சிக்குப் புலிகள் பற்றிய கடுமையான விமர்சனம் இருந்து வந்ததனால் அவர்கள் அக் கட்சியின் மீது பகைமை கொண்டிருந்தனர். புலிகள் இயக்கம் முன்பிருந்தே அக் கட்சிக்கு எதிரான சில நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வந்தது. அவற்றைச் சற்று விவரிப்பது இவ்விடத்து அவசியமாகிறது. முக்கியமாக, 1989ல் கட்சியின் ஆரம்பப் பொதுச் செயலாளர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தைக் கொல்லும் முயற்சிக்கு வன்னியில் இருந்த தலைமை ஆணை பிறப்பித்ததை இங்கு குறிப்பிடலாம். அதன் பின்னணி பின்வருமாறு:

1989ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி அன்றைய எதிர்க் கட்சி வேட்பாளர் சிரிமா பண்டாரநாயக்கவை ஆதரிக்க முடிவு செய்தது. ஏனெனில், அன்று ஐக்கிய தேசிய கட்சியின் இருண்ட, ஜனநாயக விரோத மனித உரிமை விரோத ஆட்சியை அகற்றுவதும் இந்தியப் படைகளை அகற்றுவதும் தேவையாயிருந்தன. அதனடிப்படையில் புதிய~ஜனநாய மாக்சிய~லெனினிசக் கட்சி சிரிமா பண்டாரநாயக்காவை வட பகுதிக்கு வரவழைத்து தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தலைமையில் ஜனாதிபதித் தேர்தல் கூட்டத்தை நடத்தியது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரோ பாராளுமன்ற இடதுசாரிகளோ முன்வராத சூழலில் புலிகளின் அராஜகத்துக்கு மத்தியில் புதிய~ஜனநாய மாக்சிய~லெனினிசக் கட்சி மேற்படி துணிகர நடவடிக்கையை முன்னெடுத்தது. அன்றைய பண்டத்தரிப்புக் கூட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். அதன் பின்னர் யாழ்நகரில் இந்திய இராணுவத்தின் கெடுபிடிகளின் மத்தியில் அக் கட்சி 1989 மே தினத்தைத் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடத்தியது.


இவற்றினாற் சினமடைந்ததாலேயே புலிகள் இயக்கம் தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தைக் குறிவைத்தது. அவரைக் கொல்லுமாறு வன்னியில் இருந்து புலிகளின் தலைமை பிறப்பித்த ஆணை அன்றிருந்த இந்திய அமைதிப்படைப் பிரிவு ஒன்றினால் இடைமறிக்கப்பட்ட செய்தியில் அகப்பட்டதால், அவ் விடயம் கட்சித் தலைமைக்கு உடன் தெரியப்படுத்தப்பட்டது. துரித நடவடிக்கை மூலம் வட பகுதியில் இருந்து அவர் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார். அதன் மூலம் தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தைக் கொல்லப் புலிகள் இயக்கம் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது. கண்டியில் உள்ள கிராமம் ஒன்றில் தலைமறைவாகத் தங்கவைக்கப்பட்டு அவர் கட்சியினால் பாதுகாக்கப்பட்டார். எட்டு மாதங்கள் கண்டியில் தலைமறைவாக இருந்தபோதே கடுஞ் சுகயீனமுற்று அவர் 27.11.1989ல் இயற்கையெய்தினார். தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தைக் கொல்லும் முயற்சி தோற்றுச் சில நாட்களில் கட்சியின் சங்கானைத் தோழர் சி. துரைசிங்கமும் கட்சியின் நண்பரான நடேசு என்பவரும் புலிகளால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். புலிகளின் தடுப்பின் போது இருவரும் கொல்லப்பட்டனர். சங்கானையில் அக் கட்சித் தோழர்கள் நால்வர் புலிகளால் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டதுடன், அக் கட்சித் தோழர்கள் வெவ்வேறு இடங்களில் அச்சுறுத்தி மிரட்டப்பட்டு மௌனிக்கப்பட்டனர். அதன் நடுவே, அக் கட்சியின் சொந்த அச்சகமாக இருந்தவந்த யாழ்ப்பாண அச்சகம் புலிகளால்

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.padippakam.com



# உலக மக்களை மேலாதிக்கத்துக்கு உட்படுத்தும் ஏகாதிபத்தியக் கருவியாகப் பண்பாடு



தோழர் இ. தம்பையா

சர்வதேச ஏகாதிபத்திய விரோத கூட்டிணைப்புக் குழுவும் பங்ளாதேஷ் சோஷலிஸ்ட் கட்சியும் இணைந்து 2011 நவெம்பர் 27-29இல் டாக்காவில் ஒழுங்குசெய்த மூன்றாவது சர்வதேச ஏகாதிபத்திய விரோத மாநாட்டில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் சர்வதேச அமைப்பாளர் தோழர் இ. தம்பையா வழங்கிய இரண்டாவது கட்டுரை.

இலங்கை, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் எனும் தேசிய இனங்களையும் தொல்குடியினர், பறங்கியர், மலாயர் உட்பட்ட தனித்துவமான சமூகங்களையுங் கொண்ட 65,610 சதுர கிலோமீற்றர் (25,332 சதுர மைல்) பரப்புடைய தீவாகும். பிரபுத்துவப் பண்பாட்டின் எச்சங்கள் இலங்கையில் வாழ்வின் மீதான செல்வாக்கைச் செலுத்தும் போதும், பெரும் தரகு முதலாளிய வர்க்கங்களும் அதிகாரி முதலாளிய வர்க்கங்களும் ஏகப்பெருமளவும் பழமைவாத பௌத்த முதலாளிகளைக் கொண்டனவாகவே உள்ளன. இலங்கையின் நவகொலனிய அரசு, தொழிலாளர், விவசாயிகள், மற்றும் பிற உழைக்கும் வெகுசனங்களையும் சிறு வணிகர்கள், நடுத்தர வர்க்கத்தினர், பெண்கள், இளையோர், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மீதும் ஆட்சி செலுத்துகிறது. 1505 முதல் இலங்கை போர்த்துக்கல்லின் கொலனியாயிருந்தது. 1658இல் பொறுப்பேற்ற டச்சுக்கரர் பிரித்தானியரிடம் இலங்கையை ஒப்படைத்த பின்னர் அவர்கள் 1796 முதல் 1948 வரை ஆண்டனர். 1815 வரை கரையோர மாகாணங்கள் மட்டுமே நேரடியான கொலனி ஆட்சிக்குக் கீழிருந்தது. 1815இல் பிரித்தானியர் இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவந்தனர். தமது பிரித்தாளும் மூலோபாயத்துக்குப் பெயர்பெற்ற பிரித்தானியர், 1948இல் அரச அதிகாரத்தை இலங்கையின் முதலாளி வர்க்கத்திட்டம் ஒப்படைத்து பிரித்தானியர் வரைந்த அரசியல் யாப்பின் அடிப்படையிலான, வெஸ்ற்மின்ஸ்றர் வகையிலான பாராளுமன்ற ஆட்சியை இலங்கை மீது திணித்தனர். சுதந்திரம் கோரிப் பிரித்தானிய கொலனி ஆட்சிக்கு எதிராகக் குறிப்படத்தக்க எந்த மக்கள் போராட்டமும் நடக்கவில்லை என்பதும் சுதந்திரத்துக்கான கோரிக்கை பேரளவிலானதாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு இல்லாதும் இருந்தது என்பதும் குறிப்பிட வேண்டியன. அரசியல் யாப்பு, சிறுபான்மைத் தேசிய இனங்கட்குச் சில சலுகைகளை வழங்கிய போதிலும், அவை ஆக்கிரமிப்புத்த தன்மைகொண்ட ஒரு பெரும்பான்மைக்கு எதிராகப் போதுமான பாதுகாப்பை வழங்கவில்லை.

1948 முதலாக, இலங்கையை ஐக்கிய தேசியக் கட்சி (யு.என்.பி.), ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க.) ஆகிய இரு பிரதான அரசியற் கட்சிகள் ஆண்டு வருகின்றன. 1906 அளவில் பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்தெடுத்த லங்கா சமசமாஜக் கட்சி (ல.ச.ச.க.) இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி (இ.க.க.) ஆகிய மரபான இடதுசாரிக் கட்சிகள், ஸ்ரீ.ல.சு.க.வுடன் கூட்டணிகளில் இணைந்து, காலத்துக்குக் காலம் அரசாங்கத்திற் பங்காளிகளாக இருந்து வந்துள்ளன. ஸ்ரீ.ல.சு.க.வின் தலைமையில், ல.ச.ச.க.வையும் இ.க.க.வையும் பங்காளிகளாகவும் சிரிமா பண்டாரநாயக்கவைப் பிரதமராகவும் கொண்ட அரசாங்கம் குடியரசு யாப்பு எனச் சொல்லப்பட்ட ஒன்றை 1972இல் அறிமுகமாக்கியதன் மூலம் இலங்கையின் மீதான நேரடியான பிரித்தானிய ஆதிக்கம் முடிவடைந்தது. பவுத்தமும் சிங்கள மொழியும் சிறப்பான தகுதிகளைக் கொண்டிருக்குமென உறுதிப்படுத்தியதன் மூலம், அந்த யாப்பு, சிறுபான்மையினருக்கு எழுதரான பாரபட்சத்தை வெளிப்படையானதாக்கியதுடன் சிங்கள~பௌத்தப் பெரும்பான்மை ஆட்சியை நிறுவனப்படுத்துவதில் மேலும் ஒருபடி முன்சென்றது. குறிப்பிடத்தக்க விதமாக,இக் காலத்தில் இலங்கை அணி சேரா இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தது.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் நாடு முன்கண்டிராத ஒரு பெரும்பான்மையைப் பெற்று ஆடசிக்கு வந்த யூ,என்.பி. 1978இல் கொண்டுவந்த யாப்பு 1972ம் ஆண்டின் யாப்பை மேவியது. இப் புதிய யாப்பு நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை அறிமுகப்படுத்தியதுடன் இலங்கையின் இறைமையை ஏகாதிபத்தியத்திடம் சரண்புகுவிக்க வழி செய்தது. அது திறந்த பொருளாதாரக் கொள்கை மூலமும் முன்பிருந்த அணிசேராக் கொள்கைக்கு முரணாக ஏகாதிபத்தியச் சார்பான நிலைப்பாட்டை மேற்கொள்வதன் மூலமும் செயற்படுத்தப்பட்டது. இலங்கை மீது அமெரிக்காவின் செல்வாக்கின் எழுச்சியை வெறுத்த இந்திய மேலாதிக்கச் சக்திகள் இலங்கையின் கொந்தளிப்பான தேசிய இனப் பிரச்சனையைப் பயன்படுத்தி, 1987இல், அப்போது இலங்கையின் சனாதிபதியாயிருந்த ஜே.ஆர். ஜயவர்தனவைக், கட்டாயத்தின் மூலம் இலங்கையை இந்தியாவுக்குப் பணியவைத்த இந்தியாவுடனான 'சமாதான உடன்படிக்கையில்' ஒப்பமிடச் செய்தனர்.

1977க்கும் 1994க்கும் இடையிலான யு.என்.பி. ஆட்சியின் போது, பெருந்தோடடங்கள் உட்பட, அரசுக்குச் சொந்தமான

> இலங்கையின் மக்களை இனத்துவ அடிப்படையில் பிரித்து இலங்கையில் வலுவான ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுசன இயக்கம் தோன்றாமல் தடுப்பதிலும் பெரும்பான்மைத் தேசிய இனம் ஒடுக்குமுறையாளரை ஆதரிக்கும் சூழலை உருவாக்குவதிலும் ஏகாதிபத்தியம் வெற்றி கண்டுள்ளதாகவே தெரிகிறது.

பெரிய நிறுவனங்களிற் பெரும்பாலானவை பன்னாட்டுக் கம்பனிகட்கு விற்கப்பட்டன அல்லது குத்தகைக்குக் கொடுக்கப்பட்டன. 1994இல் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான கூட்டணி சந்திரிகா குமாரதுங்கவைச் சனாதிபதியாகக் கொண்டு அதிகாரத்துக்கு வந்தபோது அது "மனித முகத்துடனான திறந்த பொருளாதாரத்தை" அறிவித்து, இலங்கையை ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் பாதையிற் செலுத்தியது. மகிந்த ராஜபக்ச, 2005இன் இறுதிப் பகுதியில் நிறைவேற்றதிகார சனாதிபதித் தொடரோட்டத்தைப்

பொறுப்பேற்றார். அவர் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிரானவரல்ல. எனினும், தனது ஃபாஸிஸ ஆட்சியைப் பற்றியோ 2009இல் பிரிவினைவாத இயக்கமான விடுதலைப் புலிகட்கு எதிரான ராணுவ நடவடிக்கையின்போது தனது பாதுகாப்புப் படைகள் தமிழ் மக்கள் மீது இழைத்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களைப் பற்றியோ எந்த அயல்நாட்டிடமும் கேள்விக்குட்படுவதை அவர் விரும்பவில்லை.

1977க்குப் பின்பான அரசாங்கங்களில் ஏறத்தாழ அனைத்துமே தமிழ்ப் பிரதேசங்களில் போர் தொடுத்தும் 'அரசியல் தீர்வொன்றை' அடைவதற்கானவை எனப்படும் அமைதி முயற்சிகளில் ஈடுபட்டும் உள்ளன. அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் தமிழர் மீது கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்குமுறை, தமிழ் இளைஞர்களை

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளுடன் மோதுமாறும் ஏலவே மரபுவாதப் பிற்போக்குத் தமிழ்ப் பாராளுமன்ற அரசியல்

தலைமை "தமிழ் ஈழம்" என்ற பேரில் முன்வைத்திருந்த வடக்கு~கிழக்கின் தமிழ் மக்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை வற்புறுத்துமாறும் கட்டாயப்படுத்தியது. ஈற்றில், பாதுகாப்புப் படைகளுக்கு மாறான ஆயுதந் தாங்கிய எதிர்ப்பியக்கத்தின் மீது விடுதலைப் புலிகள் முழு அதிகாரமுடையோராயினர்.

போர்க்காலத்தின் போதும், அமைதிப் பேச்சுக்கள் எனப்பட்டவற்றின் போதும் போருக்குப் பின்பான காலத்திலும் நிகழ்ந்துவந்த நவகொலனியப் பொருளாதாரத் தாக்குதலுக்கும் அப்பால், அந்நிய சக்திகள் இலங்கையின் மீது தமது பிடியை இறுக்கியுள்ளன. 1990கட்கு முன்பு இந்திய மேலாதிக்கச் சக்திகள் இலங்கையில் அதிக ஆதிக்கஞ் செலுத்தின. 1990களிலும் பின்னரும் அமெரிக்க, மேற்குலக, ஜப்பானிய ஏகாதிபத்தியச் சக்திகள் தமது செல்வாக்கை அதிகரித்தன. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்களில் நோர்வேயின் அனுசரணையைப் பயன்படுத்தி அவை இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையில் தலையிட்டன. அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியச் சக்திகள் விடுதலைப் புலிகளின் பிரிவினைக் கோரிக்கையை இலங்கைக்கு எதிரான ஒரு மிரட்டல் தந்திரமாக பயன்படுத்தாத போதிலும், தமது செல்வாக்கை வலுப்படுத்த அமைதிப் பேச்சுக்களைப் பயன்படுத்தின. போருக்குப் பின்பு மனித உரிமைகள், போர்க் குற்றங்கள் ஆகிய பிரச்சனைகளை முன்னெடுத்துள்ளனர். எனினும் இது தமிழ் மக்களின் நலன் கருதியல்ல.

நோர்வேயின் அனுசரணையுடனான அமைதிப் பேச்சுக்கட்குக் குழிபறிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா, தொடக்கத்திலிருந்தே, எடுத்து வந்தது. பிரபுத்துவ, சிங்களப் பழமைவாத அணுகுமுறையும் அமைதி முயற்சிகளின் மீது பகைமையும் கொண்ட ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்ததும் இந்தியாவின் வாய்ப்புக்கள் முன்னேறின. விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பதும் 1987இன் இலங்கை~இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் நிறுவப்பட்டயை நடைமுறைப்படுத்துவதுமே இந்தியாவின் நோக்கங்களாயிருந்தன. தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வாக எண்ணப்பட்ட அந்த மாகாண சபைகள் முறை தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளைக் குறைந்த அளவிலேனும் —பிற ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களது அபிலாசைகளை அதினுங் குறைவாகவும்— நிறைவேற்றத் தவறியமை கவனத்துக்குரியது. மாகாண சபைகள் முறையை நடைமுறைப்படுத்தும் நோக்கமே அற்ற மஹிந்த ராஜபக்சவுக்கு விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை மட்டுமே தேவைப்பட்டது. அவர் சீனா, பாக்கிஸ்தான், வியற்நாம், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் தன் உறவுகளை வலுப்படுத்தினார். எவ்வாறாயினும், அவர் போரைத் தொடங்கியவுடன், முற்குறிப்பிட்ட நாடுகளும் இந்தியாவும் மட்டுமல்லாது —சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் பாவனை பற்றிய தமது தெளிவீனமான

கோரிக்கைகளுடன்— அமெரிக்காவும் பிரித்தானியாவும் ராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கின.

போர் முடிந்த பின்னர், இலங்கை மீது ஆதிக்கஞ்

செலுத்துவதற்கான அந்நிய நாடுகளின் போட்டி மிக வலுவாகியுள்ளது. தமது பொருளாதார ஆக்கிரமிப்பின் மூலம் இந்தியாவும் சீனாவும் இலங்கையில் தமது பங்கை மேலும் அதிகரித்துள்ளனர். அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் மனித உரிமைகளையும் போர்க் குற்றங்களையும் பற்றிய பிரச்சனைகளை முன்னிறுத்தி இலங்கை அரசை மிரட்டுகின்றன. அமெரிக்க, ஐரோப்பிய அனுசரணையுடன் ஐ.நா. மூலம் இலங்கைக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் வலுவானவையாகத் தெரிகின்றன.

இந்தியா நடுநிலைத் தோற்றங் காட்டுகையில், பாக்கிஸ்தானும் சீனாவும் ரஷ்யாவும் வியற்நாமும் ஈரான் உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகள் பலவும் கியூபாவும் வெனிசுவேலாவும் போன்ற லத்தின் அமெரிக்க நாடுகளும், மனித உரிமைகளயும் போர்க் குற்றங்களையும் பற்றிய பிரச்சனைகளின் அடிப்படையில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஐ.நா.வும் இலங்கைக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்க்கின்றன.

அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரானவையாகவும் இந்தியாவும் பாக்கிஸ்தானும் சீனாவும் ரஷ்யாவும் வியற்நாமும் ஈரான் உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளும் கியூபாவும் வெனிசுவேலாவும் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவானவையாகவும் தோன்றுகின்றன. ஆனால் ஒவ்வொரு நாடும் தனது நலன்களைப் பேணத் தனது நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியத்தினதும் பெரிய நாடுகளினதும் சவால்கட்கு முகங் கொடுப்பதற்கு இலங்கையின் ஆதரவைப் பெற வேண்டி விருத்தியடைந்துவரும் நாடுகளும் பலவீனமான அரசுகளும் இலங்கை அரசாங்கத்தை ஆதரிப்பதாகத் தெரிகிறது. ஏகாதிபத்தியமும் பெரிய நாடுகளும், அவை இலங்கையை ஆதரிக்கின்றனவா எதிர்க்கின்றனவா என்பதற்கும் அப்பால் இலங்கையில் தமது ஏகாதிபத்திய, மேலாதிக்க நலன்களைக் கொண்டுள்ளன. ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டு ஒடுக்குமுறையாளர்கட்கும் இடையிலான முரண்பாடுகள் நிரந்தரமானவையல்ல ஆனால் ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் நிரந்தரமானவை.

இலங்கை ஏகாதிபத்திய, மேலாதிக்கச் செயற்பாட்டு

> போர் தீவிரமாக நடந்தபோது இலங்கைக்குக் பெருந்தொகையான கடன் தொகைகளை வழங்கிய சர்வதேச நாணய நிதியம், கூடவே இலங்கை மீது கடும் நிபந்தனைகளையும் விதித்திருந்தது. வரிகளையும் விலைகளையும் தவிர்ப்பது இலங்கைக்கு இயலாததாகும் விதமாக, அது, இலங்கையின் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை அரைப் பங்காற் குறைக்குமாறு வற்புறுத்தியது.

அபாயத்துக்கு உட்பட்டிருப்பதைப் பொதுவாக இலங்கை மக்கள் அனைவரும் உணரக்கூடும். எனினும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒரு பொதுத் தளத்தில் இணைவதற்கோ ஒரு பொதுவான புரிதலை வந்தடைவதற்கோ தடையாக இனத்துவ, தேசிய இன வேறுபாடுகள் தடையாக உள்ளன. தமிழரிடையே அவர்களுடைய

பிற்போக்குவாதத் தலைமை பரப்பியுள்ள கருத்து ஏதெனின் தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க அவர்கள் ஏகாதிபத்தியத்தைப் பயன்படுத்த இயலும் என்பதுடன் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகப் பேசும் எவரும் தமது நண்பர்கள் என்பதுமாகும். தமிழர் தமது தனித் தமிழ் நாட்டை நிறுவ ஸியோனிச இஸ்ரேலைப் பின்பற்ற வேண்டும் எனும் அளவுக்குத் தமிழ்த் தலைமைகள் போயுள்ளன. புலம்பெயர் தமிழ் மேட்டுக்குடிகள் தமது "நாடு கடந்த தமிழீழ அரசின் மூலம் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைக் கொண்டுவர முனைகின்றனர்.

மறுபறம் சிங்களவர்களிடையே அவர்களுடைய பேரினவாதத் தலைமை பரப்பியுள்ள கருத்து ஏதெனின், தமிழர்கள் ஏகாதிபத்தியத்தின் கைகளுள்

உள்ளனர் என்பதுடன் அவர்களுடைய கோரிக்கைகள் ஏகாதிபத்தியத்தின் கைவேலைகள் என்பதாகும். அதன் மூலம், மஹிந்த ராஜபக்சவும் தமிழரை எதிர்க்கும் எல்லாரும் ஏகாதிபத்திய விரோதிகள் எனச் சிங்கள மக்கள் நம்பச்செய்யப்பட்டுள்ளனர்.

எனவே இலங்கையின் மக்களை இனத்துவ அடிப்படையில் பிரித்து இலங்கையில் வலுவான ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுசன இயக்கம் தோன்றாமல் தடுப்பதிலும் பெரும்பான்மைத் தேசிய இனம் ஒடுக்குமுறையாளரை ஆதரிக்கும் சூழலை உருவாக்குவதிலும் ஏகாதிபத்தியம் வெற்றி கண்டுள்ளதாகவே தெரிகிறது. மற்ற எந்த இடத்திலும் போன்று, இலங்கையிலும் அதன் அரசு தனது ஒடுக்குமுறைச் செயற்பாடுகளின் பயனாக ஏகாதிபத்தியத்திடம் சரணடைவதையே ஏகாதிபத்தியம்

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.padippakam.com



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

**இமயவரம்பன்** 36

## ஜே.வி.பியின் விஷப் பரீட்சை

பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது, தேசிய இனப் பிரச்சினையை மேலும் மோசமாக்குகின்ற காரியங்கள் சில நடந்தன. தமிழ்த் தேசிய இனத்தைப் பாதிக்கிற விதமான தரப்படுத்தல் 1970ம் ஆண்டின் பிற்பகுதியில் பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பாக நடந்தேறின. தவிர்த்திருக்க வேண்டியதும் தவிர்த்திருக்கக் கூடியனவுமான சில பாரிய தவறுகள் அதன் தொடர் விளைவாக நடந்தன. அவற்றை நாட்டில் நடந்த பிற முக்கியமான பிரச்சினைகளினின்றும் பிரித்துப் பார்ப்பது அவற்றை சரிவர விளங்கிக் கொள்வதற்கு உதவாது. மலையகத் தமிழருக்கு எதிராக 1965ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிரிமா~சாஸ்திரி உடன்படிக்கை, சிரிமா~இந்திரா காந்தி உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில், 1974க்குப் பின்பு துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்தச் சோகக் கதையையும் நாட்டின் பிற அரசியல் நிகழ்வுகளினின்றும் பிரிந்து நோக்க இயலாது. எனவே ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தின் முக்கியமான அரசியல் திருப்புமுனை என்று கூறத்தக்க ஜே.வி.பியின் ஏப்ரல் கிளர்ச்சியைப் பற்றிக் கவனிப்போம்.

ஜே.வி.பி. தோற்றத்தில் இடதுசாரிக் கட்சி என்பதில் ஐயமில்லை. அதன் தலைமையிருந்தோரின் அரசியல் தோற்றுவாய்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டு பிரிவுகளிலும் இருந்தன. அதன் அதி முக்கியமான தலைவர் ரோஹண விஜேவீர மாக்ஸிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தனது மாக்ஸிய விரோத பேரினவாதச் செயற்பாடுகளுக்காக 1966ல் வெளியேற்றப்பட்டவர் என்பது முக்கியமானது. விஜேவீர அக் கட்சியில் நுழைந்ததன் நோக்கமும் அதன் பின்னணியும் பற்றிய கேள்விகளும் பிற்காலத்தில் எழுந்தாலும், அவரைக் கட்சிக்குள் சேர்த்ததுடன் அவரது அரசியற் செயற்பாடுகளைப் போதியளவு அவதானிக்காமல் அவருடைய நடுத்தர வர்க்கப் பின்புலத்தையும் கணிப்பிலெடுக்காமல் கட்சிக்குள் அவருக்குச் சில முக்கியமான பொறுப்புக்களை வழங்கியமைக்கு அக் கட்சித் தலைமை பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. எனினும் விஜேவீரவின் தவறான போக்கின் சாடைகள் வெளிப்பட்ட போதே அக் கட்சி உரிய நடவடிக்கை எடுத்தமை பாராட்டத்தக்கது.

விஜேவீரவின் பேரினவாதமும் தொழிலாளி வர்க்க விரோதமும் போக, ஜே.வி.பியின் இனத்துவேஷம் பிரதான முதலாளியக் கட்சிகள் இரண்டினதையும் மீறும் விதமாக அமைந்ததை மலையகத் தமிழர் பற்றிய அதன் நிலைப்பாடு சுட்டிக் காட்டியது. ஐந்தே பாடங்களில் மாக்சியத்தையும் தேசிய அரசியலையும் புரட்சியையும் பற்றிய பாடங்களைக் கற்பித்துத் திடீர்ப் புரட்சியொன்றை நடத்தலாம் என்று ஜே.வி.பி. தலைமை நம்பியதோ என்பது ஒரு புறமிருக்க, நாட்டின் பல இளைஞர்களைக் கவரக்கூடியவாறு ஜே.வி.பியின் பிரசாரமும் வேலைமுறையும் அமைந்தமை கவனிக்கத்தக்கது.

அக் கவர்ச்சியின் அடிப்படையில் ஜே.வி.பியின் உள்ளார்ந்த பேரினவாதமும் இந்திய விஸ்தரிப்புக் கொள்கையின் கரங்கள் என அது கருதிய மலையக மக்களை நாட்டைவிட்டே விரட்ட வேண்டும் என்ற கருத்தும் இருந்தன. இது பேரினவாதத்தின் முன் பாராளுமன்ற இடதுசாரிகளது கையறு நிலையின் ஒரு விளைவு எனலாம்.

அக் காலத்தில் ஐரோப்பாவில், குறிப்பாக பிரான்சில், ஏற்பட்ட இளைஞர் எழுச்சியும் லத்தின் அமெரிக்காவின் நகரங்களின் சில பகுதிகளைக் குவிமையமாக்கிப் புரட்சியை நடத்தலாம் என்ற கருத்தும் சே குவேரா பற்றிய ஒரு கவர்ச்சிகரமான மனோரதியப் படிமமும் ஜே.வி.பியின் புரட்சி பற்றிய பார்வையைத் தீர்மானித்தன எனலாம். எனவே, சே குவேராவின் உலக நோக்குடன் எவ்வித உறவுமற்ற ஜே.வி.பி., 'சே குவேரா குழு' என்று தன்னை வர்ணித்தமை தற்செயலானதல்ல. எனவே, இளைஞர்களையே புரட்சிகர சக்தி என்றும் தொழிற்சங்கங்களையும் தொழிலாளி வர்க்கத்தையும் புரட்சிகர சக்திகளல்ல என நிராகரித்தும் ஒரு அதிரடி நடவடிக்கை மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற எண்ணம் கிராமங்களையும் சிறு நகரங்களையும் சார்ந்த சிங்கள இளையோர் பலரையும் ஜே.வி.பியிடம் ஈர்த்தது.

தெளிவான ஒரு வர்க்க நிலைப்பாடோ புரட்சியில் வெகுசனங்களின் பங்களிப்புப் பற்றிய பார்வையோ இல்லாமல் இளைஞர்கள் நடத்தக் கூடிய ஆயுதப் புரட்சி என்ற கனவு இளைஞர்களைக் கவர்ந்த போதும், ஜே.வி.பி. தலைமையில் இருந்த குழுவாதமும் சந்தர்ப்பவாதப் போக்குக்களும் ஒரு புறம் சிறு சிறு பிளவுகளுக்கு வழி கோலின. அவற்றிற் சில சாதி வேறுபாட்டின் அடிப்படையில் அமைந்தன. மறுபுறம் ஜே.வி.பி. இளைஞர்களிடையே உருவாக்கிய எதிர்பார்ப்புக்களும் துரிதமான ஆட்சேர்ப்பும் இளைஞர்கள் சிதறிப் போகாமல் தடுக்க "ஆயுதப் புரட்சிக்கான ஆயத்தங்களைத்" துரித வேகத்தில் முன்னெடுக்கத் தூண்டின. அதே வேளை, ஜே.வி.பியின் துரித வளர்ச்சி அதனுள் சி.ஐ.டி. முகவர்கள் நுழையவும் வழி செய்தது. எனவே ஜே.வி.பியின் இரகசியமான ஆயத்தங்கள் உண்மையில் பொலிஸ் படையின் தலைமைக்கு முற்றிலும் இரகசியமானவையாக இருக்கவில்லை. அதே வேளை, திட்டமிட்ட தூண்டுதல்களும் ஜே.வி.பியைத் தனது புரட்சிக்கான ஆயத்தங்களைத் துரிதப்படுத்தக் தூண்டின. ஜே.வி.பியினர் கைக்குண்டுகளையும் வெடிப்பொருட்களையும் தயாரித்து வந்தமையைப் பற்றிப் பரவலான ஐயங்கள் இருந்த போதும், 1971 மார்ச் மாதம் குண்டுத் தயாரிப்பின் போது நடைபெற்ற ஒரு குண்டுவெடிப்பு ஜே.வி.பியின் நோக்கங்களைப் பற்றிய ஒரு தெளிவான எச்சரிக்கையாகவே அமைந்தது. அதற்கிடையில் ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற தர்மசேகர குழு அமெரிக்கத் தூதரகத்திற்குக் குண்டெறிந்தது. அதனாற் பெரிய சேதம் ஏற்படாவிடினும் அதையும் பொலிசார் கவனத்திற் கொண்டனர்.


> ஐந்தே பாடங்களில் மாக்சியத்தையும் தேசிய அரசியலையும் புரட்சியையும் பந்றிய பாடங்களைக் கந்பித்துத் திடீர்ப் புரட்சியொன்றை நடத்தலாம் என்று ஜே.வி.பி. தலைமை நம்பியதோ என்பது ஒரு புறமிருக்க, நாட்டின் பல இளைஞர்களைக் கவரக்கூடியவாறு ஜே.வி.பியின் பிரசாரமும் வேலைமுறையும் அமைந்தன.




ஜே.வி.பி தனது கிளாச்சிக்கு ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்ததாகச் சொல்லப்பட்ட காலத்தில் அம்பாறையில் அரசியல் வகுப்புகளுக்காகப் போன இடத்தில் விஜேவீர சிறைப்பிடிக்கப்பட்டார். அவர், தெற்கிலன்றி, யாழ்ப்பாணத்தின் கோட்டைக்குள் சிறைவைக்கப்பட்டமை இங்கு கவனிக்க வேண்டிய விடயமாகும். இவ்வாறான பல்வேறு நிகழ்வுகளும் ஜே.வி.பியைத் துரிதமாக அதிரடியான ஒரு நடவடிக்கையை எடுக்குமாறு தூண்டின.

1971 ஏப்ரல் ஐந்தாம் திகதி ஜே.வி.பி. அடுத்தடுத்துப் பல பொலிஸ் நிலையங்களைத் தாக்கிக் கைப்பற்றியது. சிரிமா பண்டாரநாயக்கவை அவரது வீட்டிலிருந்து சிறையெடுத்துச்செல்ல எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி கண்டது. நாடளாவிய முறையில் ஒரு கிளாச்சிக்கு மக்களை ஆயத்தப்படுத்தாமல், பொலிஸ் நிலையங்களைப் பிடித்தும் பிரதமரைச் சிறையெடுத்தும் ஆட்சி மாற்றமொன்றைக் கொண்டுவர இயலும் என்ற சிந்தனை எவ்வளவு கோளாறானது என்பது சில நாட்களிலேயே தெளிவாகியது.

ஜே.வி.பிக்கு இளைஞர் ஆதரவுத் தளம் வலுவாக இருந்த சில பிரதேசங்களில், இராணுவத்திற்கு ஈடுகொடுத்து சில வாரங்களுக்கு நிலைக்க அதற்கு முடிந்தாலும், தமது கிளர்ச்சியை ஒரு மக்கள் பேராட்டமாகவும் அது வென்ற இடங்களில் அதை மக்கள் அதிகாரமுமாக மாற்றும் வல்லமையை அதன் ஐந்து வகுப்பு அரசியற் பாடத்திட்டத்தால் வழங்க இயலவில்லை.

ஜே.வி.பியில் இணைந்த இளந் தலைமுறையினர் பேரினவாதத்தின் பிடிக்குள் இருந்தனர் எனினும் சமூக மாற்றம் ஒன்று தேவை என்பதில் அவர்கள் தெளிவாகவே இருந்தனர். அவர்கள் விரும்பக்கூடிய சமூக மாற்றம் பற்றிப் பேசிய பாராளுமன்ற இடதுசாரிகள் தேசிய முதலாளியத்திடம் சரண்புகுந்துவிட்டனர். நம்பிக்கையூட்டக் கூடிய மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகள் தென்னிலங்கையில் அதைப் பலவீனப்படுத்தியது ஒரு புறமிருக்க, அது புரட்சிகர அரசியல் பாதையைப் போதித்த அளவுக்கு அதற்குரிய ஸ்தாபன வேலைகளை முன்னெடுப்பதில் தவறியமையும் நல்ல பல சக்திகளை ஜே.வி.பியின் தவறான பாதையை நோக்கித் தள்ளிவிட்டது.

ஜே.வி.பியின் கிளர்ச்சி வேகமாகவே நசுக்கப்பட்டாலும் அதன் உடனடி விளைவுகளும் அதற்கான எதிர்வினைகளும் அதன் தொடர் விளைவுகளும் இலங்கை அரசியலிலும் அரசினது தன்மையிலும் அயல் உறவுகளிலும் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தின.

ஜே.வி.பி. எழுச்சியில் கொல்லப்பட்டோரின் தொகை அரசாங்கச் சார்பானோர் கூறமுயன்ற சில ஆயிரங்களிலிருந்து அதன் எதிரிகளால் முப்பதாயிரம் வரை மதிப்பிடப்பட்டது. உண்மையான எண்ணிக்கை பதினையாயிரத்தினுஞ் சற்று அதிகமாக இருக்கலாம் என்பதே இப்போது பரவலாக ஏற்கப்பட்ட கணிப்பாகும். கொல்லப்பட்டோரில் மிகச் சிறுபாலானோரே நேரடி மோதலில் இறந்தனர். மிகப் பெரும்பாலானவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுச் சித்திரவதைக்குட்பட்டுக் கொல்லப்பட்டனர் என்பதைப் பேசப் பாராளுமன்ற அரசியல்வாதிகள் விரும்பவில்லை. எனினும் கதிர்காம அழகி என அறியப்பட்ட மன்னம்பெரி என்ற பெண் பாலியற் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட விபரங்கள் பகிரங்கமாகியதன் பயனாக அரசாங்கம் குற்றவாளிகளை விசாரணைக்குட்படுத்திக் தண்டிக்க நேர்ந்தது. ஆனால் வேறு பல கொடிய குற்றங்கள் கண்டுங்காணமலே போயின.

பிரித்தானியாவில் புதிதாக நிறுவப்பட்டிருந்த "அம்னெஸ்ற்றி இன்ற்றநாஷனல்" (சர்வதேச மன்னிப்பு) எனும் அமைப்பு இலங்கையில் அக் கிளர்ச்சியையொட்டிய மனித உரிமை மீறல்கள் பற்றி விரிவான ஒரு அறிக்கையை விடுத்தது. எவ்வாறாயினும் கைதான ஜே.வி.பியினர் முறையான வழக்கு விசாரணைக்குட்பட்டனர் என்பதும் மிகப் பெரும்பான்மையோர் விடுவிக்கப்பட்டனர் என்பதும் வெகு சிலரே நீண்டகால சிறைத் தண்டனைக்குட்பட்டனர் என்பதும், விடுவிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன என்பதும், முக்கியமாக 1977க்குப் பின்பான அரசியலுடன் ஒப்பிடும் போது, அரசாங்கத்தின் செயற்பாடுகளின் சாதகமான ஒரு பக்கமெனலாம்.

அதே வேளை, ஆயுதக் கிளர்ச்சிக்குச் சாதகமான கருத்தைத் தெரிவித்ததற்காகவோ கிளர்ச்சியாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதற்காகவோ ஏப்ரல் கிளர்ச்சியுடன் தொடர்பேயற்ற சண்முகதாசன், வாசுதேவ நாணாயக்கார போன்றோரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். அவசர காலச்சட்டத்தின் கீழ் வழக்கு எதையும் தொடராமல் ஒரு வருடத்திற்கும் மேலாகச் சிறைவைக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இதிற் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் ஏதெனில் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த வாசுதேவ நாணயக்காரவை விடுவிக்குமாறு அரசைக் கட்டாயப்படுத்துவதற்கு ஆளுங் கூட்டணியிலிருந்த அவருடைய கட்சியான சமசமாஜக் கட்சியின் தலைவர்களுக்கு இயலவில்லை என்பதாகும். அதைவிட, 1971 கிளர்ச்சிக்குப் பின்பான அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி வடக்கில் அதுவரை சாதியத்திற்கெதிரான மக்கள் போராட்டத்தை வழிநடத்தி வந்த மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சியினரும் பொலிசாரின் தேடுதல் வேட்டைக்குட்பட்டனர். அந்த அரச மிரட்டல் மன உறுதி குறைந்த சிலரது அரசியல் நிலைப்பாட்டை ஆட்டங்காணச் செய்தது. மாக்ஸிய லெனினியச் செயற்பாட்டாளர்கள் பலர் தலைமறைவாகி இயங்கினர். இதில் கவனிக்க வேண்டியது ஏதெனின், ஏப்ரல் கிளர்ச்சியுடன் தொடர்பற்றோர் என நன்கறிந்தும் நேர்மையான இடதுசாரிகள் மீது பாய அரச இயந்திரம் ஏப்ரல் கிளர்ச்சிக்குப் பின்பான சூழலைப் பயன்படுத்தியமையாகும்.

இன்னொரு முக்கிய விடயம், கிளர்ச்சி பற்றிய செய்தி வெளிவந்த உடனேயே இந்தியக் கடற்படை இலங்கையின் கடலெல்லைக்குள் வந்து சேர்ந்தமையாகும். கிளர்ச்சியை நசுக்குவதில் இந்தியப் படைகள் நேரடியாகப் பங்கு பற்றாவிடினும் இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியாவின் இராணுவ உதவி வழங்கப்பட்டமையும் அமெரிக்காவும் மேற்குலகும் ஆதரவு தெரிவித்தமையும் முக்கியமானவை. சீனாவும் வட கொரியாவும் கிளர்ச்சியாளர்கட்கு ஆதரவு வழங்கின என்ற விதமான பொய்கள் முக்கியமாக யூ.என்.பியாலும் தமிழரசுக் கட்சியாலும் பாராளுமன்றத்தினுள்ளும் வெளியிலும் பரப்பப்பட்டன. வட கொரியத் தூதரகம் 1969க்குப் பின்பு சோவியத் தூண்டுதலுடன் மாஓ சேதுங் சிந்தனைக்குப் போட்டியாகக் கிம் இல் சுங் சிந்தனைகளைச் சர்வதேச மட்டத்தில் பிரசாரப்படுத்துவதில் முனைப்பாயிருந்தது. மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டுப் பணிகளில் பிரேம்லால் குமாரசிரி உட்பட்ட பலரும் பொறுப்பேற்றிருந்தனர். நூல் வெளியீடு விநியோகம் முதலான அலுவல்களின் மூலம் ஜே.வி.பியினர் சிலர் வருமானம் பெற்றனர். ஆனால் ஜே.வி.பிக்கு வட கொரியாவுடன் எவ்வித அரசியற் கொடுக்கல் வாங்கலும் இருக்கவில்லை.

(11ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# லண்டனில் கார்த்திகை நினைவெழுச்சி, 2011 ஒரு பார்வை

வழமை போல் இம்முறையும் பெரும் ஆரவாரத்துடன் லண்டனில் கார்த்திகை நினைவெழுச்சி 27.11.11 அன்று இடம்பெற்றது. இம்முறை வந்திருந்தவர்களின் தொகை வழமையை விடக் குறைவு என்று நூற்றுக்கணக்கான வெற்று ஆசனங்கள் எடுத்துக்கூறின. தமிழர்களின் வாக்குக்களை எதிர்பார்த்து உள்ளூராட்சி அங்கத்தவர்களும் பாராளுமன்ற அங்கத்தவர்களும் வந்திருந்து உரைகளையும் ஆற்றினர். சர்மா என்ற நாடாளுமன்ற உறுப்பினர் "எதிரிக்கு எதிராகப் போராட நீங்கள் ஒற்றுமைப்பட வேண்டும்" என்றார். வேறு ஒருவர் லிபியாவில் 'சர்வதேச சமூகம்' கோடிக்கணக்காகச் செலவிட்டுச் சர்வாதிகார ஆட்சியை வீழ்தியது. கெய்ரோவில் ஆட்சிமாற்றம், பங்களாதேஷ் உருவானமை என்பனவற்றை மட்டுமல்லாது சோவியத் யூனியனில் 'ஜனநாயகம்' மலர்ந்துள்ளமை பற்றியும் எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் கடல் கடந்த தமிழீழப் பிரதமர் எனக் கூறிக்கொள்ளும் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் பங்கு கொள்ளவில்லை. அவரது வெளிவிவகார அமைச்சர் செய்தியொன்றை அவர் சார்பில் வாசித்தார். நிகழ்ச்சியை யார் எங்கே ஒழுங்குபடுத்துவது என்ற சர்ச்சையினால் அவர் பங்குபற்றவில்லையெனக் கூறப்படுகிறது. நிகழ்ச்சியின்போது நினைவுச் சொற்பொழிவு என எதுவும் இடம்பெறவில்லை. 30 வருடகால யுத்தம் தோல்வியில் முடிந்ததற்கான காரணம் ஏதும் பேசப்படவில்லை. எதிர்காலத்தில் என்ன செய்யவேண்டுமென்றும் கூறப்படவில்லை.

உற்றார் உறவினர்களை இழைந்தவர்கள் பலர் கண்ணீர் மல்கிய வண்ணம் இருந்ததைக் காணக்கூடியதாயிருந்தது. சுமார் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்ற நிகழ்ச்சியில் ஈகைச் சுடர் ஏற்றியதும், மலர் அஞ்சலி செலுத்தியதும் தான் இடம்பெற்றது. சிறியவர்கள் தமது சிறு கவிதைகளைத் தாமே வாசித்தனர். கவிஞர்களை அழைத்து ஒரு கவிதா நிகழ்வைத்தானும் நடத்த முடியாத ஏற்பாட்டாளர்கள் ஏனோ தானோ என்று ஏற்பாட்டைச் செய்திருந்தனர். அண்மையில் ஜீ.ரீ.வி. தொலைக்காட்சியில் இம்மானுவேல் அடிகளாரைப் பேட்டி கண்டனர். ஒரு இலட்சம் ஈ-மெயில் அனுப்பி தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தேடப்படுவதாகக் பேட்டி கண்டவர் கூறியபோது இம்மானுவேல் அடிகள் ஆக்கபூர்வமான ஒரு நல்ல கருத்தை வெளியிட்டார். சிங்கள மக்கள் மத்தியிலும் நல்ல சக்திகளுண்டு. தமிழர்களின் உரிமை தொடர்பாக விளக்கம் உடையவர்கள் உண்டு. அவர்களையும் தொடர்புகொண்டு அவர்களின் கைளைப் பலப்படுத்துவதன் மூலம் எமது உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சி வெற்றி பெறும் அல்லவா என்றார். பேட்டிகண்டவர் இம்மானுவேல் அடிகளாரின் கருத்தைப் முழுமையாக உள்வாங்கிக் கொண்டதாக எனக்குத் தோன்றவில்லை.

> **இம்மானுவேல் அடிகள், "சிங்கள மக்கள் மத்தியிலும் நல்ல சக்திகளுண்டு. தமிழர்களின் உரிமை தொடர்பாக விளக்கம் உடையவர்கள் உண்டு. அவர்களையும் தொடர்பு கொண்டு அவர்களின் கைளைப் பலப்படுத்துவ தன் மூலம் எமது உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சி வெற்றி பெறும் அல்லவா" என்றார்.**

மேற்கூறப்பட்ட பேட்டிக்கு சில நாட்கள் முன்பு இளையதம்பி தயானந்தா தமிழர்களின் மனித உரிமைச் செயற்பாட்டாளருடனான பேட்டியொன்றின்போது, ஒரு கட்டத்தில், சர்வதேச அரசியலை புலிகள் இயக்கத்தினர் சரிவரப் புரிந்து கொள்ளத் தவறியதும் அவர்களின் தோல்விக்கு ஒரு காரணமென்று கொள்ளலாமா என்று கேட்டபோது மனித உரிமைச் செயற்பாட்டாளர் நேரடியாகப் பதில் கூறுவதைத் தவிர்த்து, அமெரிக்கா தமிழரின் மனித உரிமை விடயத்தில் இப்போது முனைப்புடன் செயற்படுவதாகக் கூறினார். நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதைச் சரிவரக் கணிப்பிடாவிட்டால் போராட்ட வழிமுறைகள் தவறானவையாகவே இருக்கும்.

10ம் பக்கத் தொடர்ச்சி (இலங்கையின்...).

சீனா இலங்கை அரசாங்கத்துடனான தனது நட்பையும் ஜே.வி.பி. கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்டதைத் தான் வரவேற்பதையும் அறிவித்த போதும், அச் செய்தி வேண்டுமென்றே ஊடகங்களில் மறைக்கப்பட்டதன் நோக்கங்களை விளங்கிக் கொள்வது சிரமமானதல்ல. சீனா வெகு விரைவிலேயே இலங்கை அரசாங்கத்துடன், குறிப்பாக சிரிமா பண்டாரநாயக்கவுடன், தனது நல்லுறவை வலுப்படுத்திக் கொண்டாலும், அரசாங்கத்தினுள் இருந்து வந்த இடதுசாரிகளின் செல்வாக்குக்கு ஏப்ரல் கிளர்ச்சி பாதகமான விளைவையே ஏற்படுத்தியது. ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன்பு 2000 பேரைச் கொண்டிருந்த பொலிஸ் படையின் எண்ணிக்கை விரைவிலேயே 15,000 ஆகியது. இராணுவமும் மேலும் வலிமைப்படுத்தப்பட்டது. எனினும் 1962 சதிப் புரட்சி பற்றிய அச்சங்கள் இருந்ததால் ~ பிற்காலத்திற் போல~ இராணுவத்தை மிகுதியாக வலுப்படுத்துவதில் ஊக்கம் காட்டப்படவில்லை. எவ்வாறாயினும் இராணுவத்தை உள்நாட்டுப் பிரச்சினைகளில் பயன்படுத்தும் போக்கு உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

இந்தியா தனது செல்வாக்கை வலுப்படுத்துவதற்கு இவ் வாய்ப்பை நன்கு பயன்படுத்தியது. அப்போது சோவியத் அமெரிக்கப் போட்டி இருந்த உலகச் சூழல் இலங்கையை சோவியத் மேலாதிக்கப் போட்டிக்கான களமாக்கிற்று. இலங்கை~சீனா உறவு மேலும் வலுப்படுகிற விதமாகவே சீனா நடந்து கொண்டதால் இலங்கையால் தனது சர்வதேச நடுநிலைமைக் கொள்கையை, அதாவது அணிசேராமையை, உறுதியாகக் கடைப்பிடிக்க முடிந்தது. அதனாலேயே இந்தியா சில மாதங்கள் பின்னர் பங்களாதேஷ் பிரிவினையில் குறுக்கிட்ட போது, இலங்கை அதைப் பாக்கிஸ்தானின் உள் அலுவல் என்ற விதமாக நோக்கிப் பாக்கிஸ்தான் விமானங்கள் மேற்கிலிருந்து கிழக்குப் பாக்கிஸ்தான் போகையில் தரித்துச் செல்ல அனுமதித்தது. இது இந்திய அதிருப்தியைச் சம்பாதித்தாலும் இந்திய அரசாங்கம் இலங்கை பற்றிய ஒரு சமரசப் போக்கையே கடைப்பிடித்து வந்தது.

ஜே.வி.பி. கிளாச்சி தென்னிலங்கையில் பொருளாதாரக் காரணங்களால் ஏற்பட்ட அதிருப்தியைத் தெளிவாகவே உணர்த்திய நிலையில் அரசாங்கம் சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்தது. அவற்றிள் சில ஏலவே திட்டமிட்டவை எனினும் அவற்றின் பின் விளைவுகள் எவ்வாறு அமைந்தன என்பது கூர்ந்து நோக்க வேண்டியதாகும். (தொடரும்..)

9ம் பக்க தொடர்சி உலக மக்களை...

வேண்டுகிறது. அது உறுதிப்படுமாயின், இலங்கைக்கு எதிரான மனித உரிமைகளும் போர்க் குற்றங்களும் பற்றிய பிரச்சனைகளை மட்டுமன்றித், தேசிய இனப் பிரச்சனைக்குரிய தீர்வுக்கான அழைப்பையும் ஏகாதிபத்தியம் மறந்துவிடக்கூடும். ஏகாதிபத்தியமும் அந்நிய மேலாதிக்கமும் தேசிய இனப் பிரச்சினையைப் பயன்படுத்துவதும் ராணுவ உடன்படிக்கைகளும் போன்ற சர்வதேச அரசியல் வழிமுறைகளினூடு இலங்கையை ஆதிக்கத்துக்கு உட்படுத்துவதற்கும் மேலாக, இலங்கையில் உள்ள தமது பூதாகரமான பொருளாதார நலன்களினூடாகவும் ஆதிக்கத்துக்கு உட்படுத்துகின்றன. அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தமது ஜி.எஸ்.பி. சலுகைகள் மூலம் இலங்கையில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் இலங்கையின் ஏற்றுமதி வணிகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. எப்பாவெல பொஸ்பேற் அகழ்வை அமெரிக்கா பொறுப்பேற்றுள்ளது. இந்தியா இலங்கையுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றையும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றையும் செய்துள்ளதுடன், இலங்கையின் இறக்குமதி வணிகத்தில் அதி ஆதிக்க நிலையில் உள்ளது. 1987இன் சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய எண்ணெய்ச் சேமிப்பு வசதிகளுக்குப் பொறுப்பேற்றதற்கும் மேலாக, இலங்கையின் எண்ணெய் இறக்குமதியையும் தன் கட்டுப்பாட்டினுட் கொண்டுள்ளது. பலவாறான சேவைத் துறைகளையும் உள்ளடக்கும் 'சீபா' எனும் பொருளாதார உடன்படிக்கையைப் பற்றியும் மன்னார்க் குடாவில் எண்ணெய்க்கான அகழ்வைப் பற்றியும் இந்தியா அதி தீவிரத்துடன் நிற்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையை ஏற்கெனவே பொறுப்பேற்றுள்ளதுடன் அது புகையிரதப் பாதைகளையும் நெடுஞ்சாலைகளையும் அமைத்து வருகிறது. கிழக்கு மாகாணத்தில் அனல் மின் நிலையத்திற்காகப் பெருமளவிலான நிலத்தைத் தன்வயமாக்கியுள்ளதுடன் புல்மோட்டையிலும் திருக்கோவிலிலும் கனிவள மணல் அகழ்வைப் பொறுப்பேற்கவும் அது பேராசைப்படுகிறது. இலங்கையில் தேயிலை உற்பத்தியும் வணிகமும் வேறு பயிர்ச்செய்கைத் திட்டங்களும் இந்தியக் கம்பனிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. கூட்டு முயற்சிகளாகவும் தனியாகவும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளையும் அவை மேற்கொண்டுள்ளன.

இலங்கைக்கான சீன உதவி இந்தியாவினதைப் பன்மடங்கு மேவிவிட்டது. அது சர்வதேசத் துறைமுகமொன்றை அம்பாந்தோட்டையில் நிர்மாணிப்பதுடன் பல நெடுஞ்சாலைகளையும் அமைத்துவருகிறது. நுரைச்சோலையில் அது அனல் மின் நிலையமென்றையும் நிறுவியுள்ளது. சீனாவின் முதலாளியப் பொருளாதார வளர்ச்சியின் விளைவாகச், சீனா இலங்கையில் ஒரு பெரும் சந்தை விரிவாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கை இப்போது இப் பிராந்தியத்தில் சீனாவின் கடல் வலிமையின் விரிவாக்கத்தில் முக்கிய மூலோபாய இடமாகியுள்ளது.

தொழில்நுட்ப இடமாற்றம், மோட்டார் வாகன வணிகம், மேல் கொத்மலை நீர் மின் திட்டத்தைப் பொறுப்பேற்றமை என்பன மூலம் ஜப்பான் இலங்கை மீதான ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது. உலகமயமாக்கப்பட்ட ஏகாதிபத்தியப் பண்பாடு பல்வேறு பேர்களிலும் வடிவங்களிலும் இலங்கையை ஊடுருவியுள்ளது. ஹொலிவுட், பொலிவுட், கோலிவுட் வகையிலான நச்சுச் சினிமாப் பண்பாடு இலங்கையின் அனைத்துத் தேசிய இனங்களுக்குள்ளும் வீரியமாக ஊடுருவியுள்ளது.

போர் தீவிரமாக நடந்தபோது இலங்கைக்குக் பெருந்தொகையான கடன் தொகைகளை வழங்கிய சர்வதேச நாணய நிதியம், கூடவே இலங்கை மீது கடும் நிபந்தனைகளையும் விதித்திருந்தது. வரிகளையும் விலை உயர்வுகளையும் தவிர்ப்பது இலங்கைக்கு இயலாததாகும் விதமாக, அது, இலங்கையின் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை அரைப் பங்காற் குறைக்குமாறு வற்புறுத்தியது. இலவசக் கல்விக்கும் மருத்துவத்துக்குமான அரச நிதி வழங்கலைக் குறைக்குமாறும் அரச ஓய்வூதியத்தை நிறுத்த இயலாவிடின் குறைக்கவும் அழுத்தங்கள் உள்ளன. இலங்கை ஒரு சுற்றுலாத் தளமாக முற்றுமுழுதாக மாற்றப்பட வேண்டும் எனும் நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியமும் அந்நிய மேலாதிக்கமும் இலங்கையிற் கொண்டுள்ள பிடிக்கான முக்கிய சான்றுகளில் முற்கூறியவை அடங்கும்.

பிரித்தானிய கொலனித்துவத்துக்கு எதிரான இயக்கங்கள் வலுவுடனோ ஒற்றுமையுடனோ இல்லாமை ஒருபுறமிருக்க, குறிப்பான பிரச்சனைகளில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான எழுந்தமான போராட்டங்களை விட்டால், வலுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுசன இயக்கம் எதுவுமே 1948க்குப் பின்பு உருவாகவில்லை. இலங்கையின் பெரிய இடதுசாரிக் கட்சிகள் எனச் சொல்லப்படுவனவற்றின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடுகள் அனைத்தும், வழமைபோல், இலங்கையின் ஒடுக்குமுறை அரசாங்கத்தைப் பாதுகாப்பதுடன் இணங்கிப் போகக்கூடிய மே தினச் சுலோகங்களுள் பெருமளவும் முடங்கிக் கிடக்கின்றன.

மாறாகப் புதிய~ஜனநாயக மாக்சிச~லெனினிசக் கட்சி தனது ஏகாதிபத்திய எதிர்ப்புச் செய்நிரல்களைத் தொடர்ச்சியாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் முன்னெடுத்து வருகிறது. சிறிய குழுக்களுக்கும் அப்பால், சர்வதேச ஒத்துழைப்பு மக்கள் அமையம், இலங்கையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கொள்கையிலும் நடைமுறையிலும் வலுவான ஐக்கிய வெகுசன இயக்கமாகக் முன்னோக்கிச் செல்லுகிறது. ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டு ஒடுக்குமுறையாளனுக்கும் இடையிலான முரண்பாட்டையும் ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டையும் கையாளுவதற்கான தெளிவான பார்வை அதனிடம் உண்டு. அது வருடாந்தம் ஜனவரி 1ம் நாளை ஏகாதிபத்திய எதிர்ப்பு நாளாகக் கொண்டாடி வருகிறது. இந்த அமைப்பும், இலங்கையில் வலுவானதொரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்த்தைக் கட்டியெழுப்புவதற்கு மேலும் வலிமையையும் விரிவான செயற்பாட்டுத்தளத்தையும் வேண்டியுள்ளது.

8ம் பக்க தொடர்சி வட்டுக்கோட்டையில்....

எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் இறுதிவரை மீளத்தரப்படவில்லை. கட்சித் தலைமை எவ்வளவோ வாதாடி முயன்றும் அந்த அச்சு இயந்திரம் வன்னிக் காட்டிற்குட் தேவைப்பட்டதால் அங்கு கொண்டு செல்லப்பட்டதாகவே இறுதியான பதில் கிடைத்தது.

1990~95 காலப்பகுதியில் அக் கட்சியின் பத்திரிகையான "புதிய பூமி"யை வெளியிடுவதைப் புலிகள் தடுத்தனர். அதனால் புதிய பூமியின் வெளியீட்டை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மாற்ற நேரிட்டது. அதே வேளை, கலை இலக்கிய இதழான தாயகத்தைப் புலிகள் தடுக்காதபோதிலும் அதைச் சுய தணிக்கையுடனேயே வெளிக்கொணர முடிந்தது. பல்வேறு நெருக்கடிககளையும் கொலைகளையும் கொலை முயற்சிகளையும் சித்திரவதைகளையும் மிரட்டல்களையும் எதிர்கொண்ட போதிலும் அக் கட்சி கொள்கை ரீதியாகவும் நடைமுறைச் செயற்பாட்டிலும் தெளிவாகவே இருந்து வந்தது, அது எச் சந்தர்ப்பத்திலும் ஆளும் அரசாங்கச் சார்பாகவோ அரசு யந்திரப்படைகளுடன் ஒத்துழைத்தோ இருக்கவில்லை. இந்திய அமைதிப்படைக் காலத்திலும் அது தெளிவாகவும் உறுதியாகவும் இருந்து இந்தியப் படை நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என வற்புறுத்தி வந்தது. அதேவேளை, மக்கள் மத்தியில், குறிப்பாகப் பின்தங்கிய, உழைக்கும் மக்கள் மத்தியில் வெகுஜன வேலைகளை செய்து வந்தமையினால் அக் கட்சியைப் புலிகளால் எதுவும் செய்ய முடியவில்லை.

தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தினது போராட்ட வாழ்வு புரட்சிகரமாக முடிவுற்ற போதிலும், அவர் வழிகாட்டிச் சென்ற பாதையில் கட்சி தொடர்ந்து தனது புரட்சிகரப் பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளது. அத்தகைய கட்சியையும் அதன் தோழர்களையும் புலி முத்திரையிட்டுக் காட்ட இன்றும் அரசாங்க அரவணைப்பில் இருந்துவரும் சில இடதுசாரி வேடதாரிப் போலிகள், இங்கும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உதிரிகளக இருந்துகொண்டு எதிர்ப்பிரசாரம் செய்து வருகின்றனர். இது மிகக் கேவலமான சீரழிவின் வெளிப்பாடாகும். எனவே நேர்மையான மாக்சிச லெனினியத் தளத்தில் நிற்கும் புதிய~ஜனநாயக மாக்சிய~லெனினியக் கட்சியானது புலிகளின் ஆட்சிக் காலத்தில் தனது அராஜக ஜனநாயக மறுப்பின் மத்தியிலும் எந்தவொரு தமிழ்த் தேசியவாத ஆயுத இயக்கத்தின் பின்னாலும் செல்லாது தனித்துவத்தைப் பேணிய கட்சியாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். புதிய~ஜனநாயக மாக்சிய~லெனினியக் கட்சியினது இவ் வரலாற்றுப் பின்னணியில், 1999ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா இரண்டாவது தடவையாகப் போட்டியிட்ட போது அக் கட்சி எடுத்த நிலைப்பாட்டைப் பற்றி அடுத்த பகுதியில் நோக்குவோம்.

(தொடரும்..)

www.padippakam.com



# மக்களுக்கு எதிராக அன்று வடக்கு கிழக்கில் நீட்டப்பட்ட துப்பாக்கிகள் இன்று தெற்கில் நீட்டப்படுகிறது

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் பூதாகாரமாகி வருகின்றன. அவற்றின் வெளிப்பாடாகவே அண்மையில் டீசல், பெற்றோல், மண்ணெண்னணை விலைகளும் மின்சாரக் கட்டணமும் உயர்த்தப்பட்டன. அதன் மூலம் சகல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் போக்குவரத்துக் கட்டணங்களும் தாங்கமுடியாத அளவுக்கு உயர்ந்துள்ளன. தொடர்ந்து விலை அதிகரிப்புக்களும் கட்டண உயர்வுகளும் இடம்பெறப்போகின்றன. அவை, இன மொழி மத பேதமின்றி, அனைத்து உழைக்கும் மக்களுக்கும் எதிரானவையாகும். தமது ஆட்சி அதிகாரத் தேவைக்காக மக்களை இனப் பகை மூலம் பிரித்து வைத்துள்ள ஆளுந் தரப்பினர், பொருளாதார நெருக்கடிகளை எல்லா மக்களின் மீதும் சுமத்தியிருக்கின்றனர். அதனால் தெற்கிலே உழைக்கும் சிங்கள மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர். பறிக்கப்படும் வாழ்வாதாரங்கட்காகவும் உரிமைகட்காகவும் போராட வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு எதிராக நீட்டப்பட்டுவந்த துப்பாக்கிகள் இப்போது தெற்கின் மக்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டுள்ளன. அதன் மூலம் மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கொடூர அடக்குமுறை முகம் சிங்கள மக்கள் மத்தியில் அம்பலமாக ஆரம்பித்துள்ளது.

கடந்த வருட நடுப்பகுதியில் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் ஒரு இளம் ஊழியர் போலீஸ் துப்பாக்கிக்கு பலியானார். அதே துப்பாக்கிகள் அண்மையில் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பை எதிர்த்த சிலாபம் மீனவர்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டன. ஒரு நடுத்தர வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான மீனவர் துப்பாக்கிக் குண்டினால் கொல்லப்பட்டிருக்கின்றார். மூன்று வருடங்களுக்கு முன்பு இறுதி யுத்தத்தின் போது பல ஆயிரம் தமிழ் மக்கள் இதே துப்பாக்கிகள் மூலமே வகைதொகையின்றிக் கொல்லப்பட்டனர். அதன் வலிகளும் வேதனைகளும் எத்தகையவை என்பதை இன்று சிங்கள உழைக்கும் மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். இவ் வேளை, பேரினவாதத்தின் ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்து நிற்கும் சிங்கள உழைக்கும் மக்கள் முன்னெடுத்து வரும் வெகுஜெனப் போராட்டங்களுக்கு தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் தமது ஆதரவைத் தெரிவித்து ஒன்றிணைந்து போராட முன்வரல் வேண்டும். சிங்கள உழைக்கும் மக்களுக்குத் தமிழர் தரப்பில் இருந்து நீட்டப்படும் நேசக்கரங்கள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைச் சிங்கள மக்கள் மதிக்கும் நிலைக்கு கொண்டு சேர்க்கக் கூடிய புதிய அரசியல் சூழலைத் தோற்றுவிக்கும் அதனால் இதுவரை காலமும் இரு புறத்திலும் முன்னெடுக்கப்பட்டு வந்த இனப் பகை அரசியலுக்குப் பதிலாக உழைக்கும் வர்க்க மக்களின் ஐக்கியத்தின் ஊடாக மாற்று வெகுஜன அரசியல் பாதையும் பயணமும் திறக்கப்படமுடியும்.

இவ்வாறு, புதிய-ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் யாழ்நகரில் புதிய-ஜனநாயக இளைஞர் முன்னணியின் வடபிராந்தியக் குழு ஏற்பாடு செய்த அரசியற் கலந்துரையாடலிற் கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறினர்.

> “இதுவரை காலமும் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு எதிராக நீட்டப்பட்டுவந்த துப்பாக்கிகள் இப்போது தெற்கின் மக்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டுள்ளன. அதன் மூலம் மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கொடூர அடக்குமுறை முகம் சிங்கள மக்கள் மத்தியில் அம்பலமாக ஆரம்பித்துள்ளது.”

அவர் மேலும் கூறுகையில், இதுவரை காலமும் தமிழ் மக்களின் நீதியான கோரிக்கைகளுக்கு நியமான அரசியல் தீர்வை வழங்க மறுத்துப் பேரினவாத ஒடுக்குமுறையை யுத்தமாக தெற்கின் ஆட்சியாளர்கள் முன்னெடுத்து வந்தனர். சிங்கள உழைக்கும் மக்களுக்கு அந்த யுத்தத்தைக் காட்டி அவர்களது பொருளாதார வாழ்வாதாரக் கோரிக்கைகளை மறுத்து வந்த சிங்கள மேட்டுக்குடி முதலாளித்துவ ஆளும் வர்க்கம் இப்போது அம் மக்களுக்குப் பதில் கூற முடியாதுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பின்பற்றப்பட்டு வந்த தாராளமயம் தனியார்மயம் உலகமயமாதல் என்பனவற்றின் தவறான பொருளாதார அரசியற் கொள்கைகளின் மொத்த விளைவுகளே இன்றைய பொருளாதார நெருக்கடிகளும் விலை உயர்வுகளும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்களுமாகும்.

வலுப்பெற்று வந்த நெருக்கடிகளைத் திரையிட்டு மறைத்துச் சிங்கள உழைக்கும் மக்களைத் திசை திருப்பி வைத்திருக்கவே அரசியல் தீர்வை மறுத்து கொடூர யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. பயங்கரவாதம் என்பதை வளர்த்தவர்கள் பேரினவாத ஆட்சியாளர்களே. அதனை அழித்ததாக கூறிப் பெருமை பேசி கொண்டவர்களும் அவர்களே. யுத்தம் முடிவுற்று மூன்று வருடங்கள் ஆகவுள்ள இவ் வேளையில் பொருளாதார நெருக்கடிகள் மக்களின் தலைகள் மீது மேன்மேலும் சுமத்தப்படுகின்றன. இது ஏன் என்பதற்கு ஆளும் தரப்பால் உரிய பதில் கூற முடியாத நிலையிலேயே மக்கள் மீது துப்பாக்கி ரவைகளை ஏவி வருகின்றனர். ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல்கள் போன்ற அடக்குமுறைகள் மக்கள் மீது மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு புறத்தில் தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வொன்றை முன்வைக்கக்க முடியாத பேரினவாத நிலைப்பாட்டில் ஜனாதிபதியும் அரசாங்கமும் உள்ளனர். அத்தகைய நிலையிலே தற்போது ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் முழுப்பூசனிக்காயை இலைச்சோற்றில் மறைக்க அரசாங்கம் பெருமெடுப்பில் முயற்சி செய்து வருகிறது. புத்த பெருமானின் போதனைகளையும் பௌத்த தர்மத்தையும் தலைமேல் தூக்கி வைத்து ஆட்சி நடத்தும் ஜனாதிபதி தலைமையிலான இன்றைய அரசாங்கம் போர்க் குற்றம் மனித உரிமை மீறல்கள் இடம் பெறவே இல்லையென வாதிட்டு நிற்பதானது எத்தகைய தர்மம் என்று புரியாது உள்ளது. இது நீதி நியாயம் ஜனநாயகம் மனித உரிமைகள் என்பனவற்றை மதிக்கும் சாதாரண சிங்கள உழைக்கும் மக்களை உலக அரங்கில் அவமானப்படுத்தித் தலைகுனிய வைக்கும் நடைமுறையேயாகும்.

மறுபுறத்தில் நிறைவேற்று அதிகாரம், குடும்ப-சகோதரர் ஆட்சி, ஊழல், ஆடம்பரம், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவற்றால் நாட்டு மக்களே சூறையாடப்படுகின்றனர். இவற்றையிட்டுக் கேள்வி எழுப்பி வீதிக்கு வரும் மக்களுக்கு எதிராகத் துப்பாக்கிகள் நீட்டப்படுகின்றன கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்படுகின்றன இந் நிலையில் மக்களுக்கு தெளிவானதும் தூரநோக்குடனானதும் கனதியானதுமான மக்கள் சார்பு மாற்று அரசியல் பாதை தேவைப்படுகிறது. அதனை விடுத்துத் தெற்கிலே மற்றுமொரு பேரினவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் வடக்கு கிழக்கிலே பழைமைவாதக் கொள்கை மாறாத தமிழ்த் தேசியவாதத் தலைமைகளையும் மீண்டும் ஆட்சிக்கும் பதவிகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் கொண்டு வருவதால் எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை. இது நாறிப்போன பழைய சோற்றைக் கொதிப்பித்து அல்லது அரைத்த மாவை மீண்டும் அரைப்பது போன்ற பிற்போக்கு வாக்கு வங்கி அரசியலின் நீடிப்பாகவே அமையும்.

எனவே தெற்கின் உழைக்கும் சிங்கள மக்களும் வடக்கு-கிழக்கு, மலையகத்தின் உழைக்கும் மக்களும் ஒருவரது அரசியல் கோரிக்கையை மற்றவர் ஆதரித்து நிற்கும் மாற்றுக் கொள்கையின் ஊடான வெகுஜன எழுச்சியும் போராட்டங்கள் இன்றைய சூழலில் அவசியமானவை என்று தோழர் செந்திவேல் தனது உரையில் குறிப்பிட்டார்.

<u>24.02.2012 அன்று தோழர் சி.கா. செந்திவேல் யாழ்நகரில் ஆற்றிய உரையிலிருந்து</u>

# பட்டதாரிகளுக்கான “நியமனங்களும்”

## வேகமாக அரசியல்மயமாகும் பொதுத் துறையும்.

<u>சு.விஜயகுமார்</u>

> “பட்டதாரிகள் ஒன்றை மட்டும் கற்பனை செய்து கொள்வது நன்று. “எமக்கே இந்த நிலை எனின் எமது நாட்டின் பொருளாதார போக்கில் எமது பிள்ளையை ஒரு பட்டதாரியாக ஆக்கிப் பார்க்க முடியுமா””

அண்மை காலங்களில் பட்டதாரிகள் போல் அரசியல் வாதிகளினால் அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. உற்பத்தி பொருளாதாரத்தை மையப்படுத்தாது, சேவையை முதன்மையாகக் கொண்ட பொருளாதார சமூகக் கட்டமைப்பும் அதற்கான கல்வி முறையையும் கொண்ட நிலையில் இலங்கையில் பட்டதாரிகள் தொழில் பெறுவதற்காக, குறிப்பாக தேர்தல் காலங்களில், தமது சுயகௌரவத்தை இழந்து அரசியல்வாதிகளினால் பயன்படுத்தப்படுவதை தவிர்ப்பது சாத்தியமற்றதே. பட்டதாரிகளுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அரசியல் வடிவமெடுத்த ஒரு பேராட்டமாக வரும் போது அதனை தற்காலிகமாகத் தடுப்பதற்காகப் பல உபாயங்களை முன்னைய அரசாங்கங்கள் போலவே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கமும் முன்னெடுத்தது. 2009 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ‘‘ஜனசபா லேகம்’’ (கிராமசபை செயலாளர்) என்ற பதவிக்கு பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. எனினும் அது இன்று கைவிடப்பட்டுள்ளதாக தவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பதவியை அரசியல் நியமனமாக வழங்க ஏற்பாடாகி இருந்த நிலையில் கடந்த உள்ளூராட்சி பாராளுமன்ற ஜனாதிபதி தேர்தல் என அனைத்து தேர்தலிலும் ஆளும் தரப்பிற்கு சார்பாக பெரும்பாலான விண்ணப்பதாரிகள் அரசியல் பிரசாரத்திலும் பிற தேர்தல் அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். 2012 ஆரம்பித்தவுடன் 15000 பட்டதாரிகளுக்கு வேலை வழங்க உள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. சில மாவட்டங்களில் நியமனங்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில் அவைகள் பல கேள்விகளையும் பிரச்சினைகளையும் நம்முன் நிறுத்தியுள்ளன.

நியமனங்கள் என்று சொல்லி இதற்கு முன்னர் இருந்திராத 06 பயிற்சி காலம் உட்படுத்தப்பட்டமைக்கான காரணம் என்ன? 06 பயிற்சியின் பின்னர் அரச துறையில் நிரந்தர பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான உத்தரவாதம் என்ன? மிக முக்கியமாக அரசியல் தீர்மானங்களாக வழங்கப்படும் இந்நியமனங்கள் தகுதி வாய்ந்த ஆனால் மாற்று அரசியல் சார்பு கொண்டவர்களின் நிலை மற்றும் அரசதுறை வேகமாக அரசியல் மயமாதல் போக்கு ஆகிய கேள்விகளுக்கும் நிலைமைகளுக்கும் பதில் காணப்பட வேண்டியதும் விளங்கி கொள்ள வேண்டியதுமாகும்.

பல பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியில் தமது பிள்ளைகளைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிய பெற்றோர்கள் தாங்கள் இதுவரை அடைந்த கஷ்டத்திற்கு விமோசனமாக தமது பிள்ளையின் தொழிலையே எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர். அந்த எதிர்பார்ப்பு பல வருடங்களாக நிறைவேறாத நிலையில் தற்போது 06 பயிற்சி அதன் பின்னர் நிரந்தர தொழில் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. 06 மாத பயிற்சி காலத்திற்கு ரூபா 10,000 மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ‘‘நியமன’’ கடிதத்தின் தலைப்பு ‘‘மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட முகாமை செயற்திட்டம்’’ என அமைந்திருந்ததுடன், 2012ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பல அபிவிருத்தி பிரேரனைகள் தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்காக குறித்த அலுவலகத்திற்கு நியமிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த பதவிக்கான பயிற்சிக்கு தாங்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பாக எந்த குறிப்பும் அந்நியமன கடித்திலே இல்லை. எனவே 6 மாத பயிற்சியின் பின்னர் என்ன நிலை ஏற்படும் என்பது தொடர்பாக தெளிவற்றவர்களாவே நியமனம் பெற்ற பட்டதாரிகள் உள்ளனர்.

இந்த குளறுபடிகளுக்கு அப்பால் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில் அரசியல் தலைமைகள் பொதுத் துறையில் தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் நிலை வலுத்துள்ளமைதான். அரசியலமைப்பிற்கான 18ம் திருத்தத்தினூடாக பகிரங்க சேவை ஆணைக்குழு கொண்டிருந்த அதிகாரங்களில், குறிப்பாக பொது துறைக்கு ஆட்சேர்ப்பு தொடர்பாக கொண்டிருந்த அதிகாரமானது அமைச்சரவைக்கு வழங்கப்பட்டமையானது பொது துறையை ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் தனது விருப்பு வெறுப்பிற்கு ஏற்ப ஆட்டிவைக்கும் நிலைக்கு வித்திட்டுள்ளது. அதன் அறுவடையே பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட ‘‘நியமனமாகும்’’. அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாட்டிற்கு மாறான அரசியல் நிலைப்பாட்டடை கொண்டவர்கள் இலகுவாக பழிவாங்கப்படுவதற்கான அனைத்து கதவுகளும் இன்று சட்டரீதியாகவே திறந்துவிடப்பட்டுள்ளன.

எனினும் இவற்றுக்கெள்ளாம் அடிப்படையான பிரச்சினை இதுதான். இவைகள் எல்லாம் எடுத்த மாத்திரத்தில் அநீதிகாளாக தோற்றினாலும் நாம் அவற்றை எதிர்க்க துணிவதில்லை. எதிர்க்க நினைப்பவனையும் தனிமைப்படுத்துவது மட்டுமல்லாது அவர்களை பலவீனப்படுத்தும் சிந்தனை போக்கே இன்று பட்டதாரிகளிடமும் நிலவி வருகிறது. பட்டதாரிகள் ஒன்றை மட்டும் கற்பனை செய்து கொள்வது நன்று. ‘‘எமக்கே இந்த நிலை எனின் எமது நாட்டின் பொருளாதார போக்கில் எமது பிள்ளையை ஒரு பட்டதாரியாக ஆக்கிப் பார்க்க முடியுமா’’ என்பதுதான்.

www.padippakam.com



# கொலனிய ஆட்சிக்கு பின்னரான இலங்கையில் நிலவுடைமை உற்பத்தி உறவுகள்

கொலனியத்தின் வருகை இலங்கையில் நிலப்பிரபு வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கு ஒரு வலுவான அடியை வழங்கிய போதும் அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு கொலனி ஆட்சியும் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசங்களில் ஈடுபட்டு வந்தன. இலங்கையில் நிலவுடைமை முறை இந்தியாவிற் பரவலாக அறியப்பட்ட முறையினின்றும் ஐரோப்பிய நிலவுடைமை முறையினின்றும் பல வகைகளிலும் வேறுபட்டு நின்றதை நியூட்டன் குணசிங்க போன்றோரின் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. நிலம் என்பது அரசனுக்கு உரியதாக இருந்தது என்பதை மனதில் இருத்தியே, கண்டி இராச்சியத்தின் பல கிராமங்களில் நிலம் பகிரப்பட்டு பயிர் செய்யப்பட்டமை போன்றவற்றை நாம் விளங்கிக் கொள்கிறோம். எனினும், பெரும் நிலப்பிரபுக்கள் இருந்து வந்தமையையும் அறிவோம். யாழ்பாணத்திலும் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலும் நில பிரபுத்துவக் குடும்பங்கள் தமது அதிகாரத்தை இழந்தாலும் நிலப்பிரபு– பண்ணை அடிமை என்ற அடிப்படையிலான உற்பத்தி உறவும் பெரும் நிலவுடைமையாளர்கள், குத்தகைக்காரர்கள், கூலி விவசாயிகள் என்ற அடிப்படையிலான உற்பத்தி உறவும் இருந்து வந்தன. வணிக முதலாளியத்தின் வளர்ச்சியை ஒட்டி விவசாய நிலங்களைத் தமதாக்கிக் கொண்ட நிலவுடைமைக்காரர்களும் இருந்து வந்தனர்.


தென்னிலங்கையில் இருந்தது போல பெருமளவில் விவசாய நிலங்களைக் கொண்டிருக்கக் கூடிய நிலவுடைமையாளர்கள் யாழ் குடாநாட்டில் இல்லாவிடினும், சாதி அடிப்படையிலான உற்பத்தி உறவுகள் விவசாயத்தில் ஆதிக்கஞ் செலுத்தின. தென்னிலங்கையின் பெருங் காணிச் சொந்தக்காரர்கள் எனப்பட்டோரில் தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டச் சொந்தக்காரர்கள் முதன்மையானவர்களாய் இருந்தனர். சென்ற நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியின் போது தான் வட மத்திய மாகாணத்தில் பழைய குளங்கள் மீட்டெடுக்கப்பட்டு குடியேற்றமும் நெற் செய்கையும் தொடக்கப்பட்டன. கிழக்கு மாகாணம் நெற் செய்கையில் முதன்மையில் நின்றது. மலையகத்திலும் தென்னிலங்கையிலும் விவசாய உற்பத்தி உறவுகளில் பிரபுத்துவப் பாங்கான சாதிய அடிப்படையிலான உழைப்புச் சுரண்டலும் இருந்தது. அங்கு நிலமின்மை என்பது வறுமைக்கு காரணமான ஒரு பிரச்சினையாயும் பெரும் நிலவுடைமையாளர்களுக்கு ஒரு மிரட்டலாயும் அமையக் கூடிய ஒரு சூழலில் அப் பிரச்சனைக்கான தீர்வாக நீர்ப்பாசன விருத்தி சார்ந்த குடியேற்றத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இம் முயற்சிகள் 1947ல் நேரடிக் கொலனியாட்சி நீங்க முன்னரே தொடக்கப்பட்டு அதன் பின்பும் தொடர்ந்து வந்தன. அவற்றிற்கு, ஒரே நேரத்தில், வர்க்க நலன்களும் பேரினவாத நோக்கங்களும் இருந்து வந்தன என்பது மறுக்க இயலாததாகும். எவ்வாறாயினும் பெரும் நிலவுடமையாளர்கள், குத்தகை விவசாயிகள், கூலி விவசாயிகள், சிறு காணிச் சொந்தக்காரர்கள் என்கின்ற வர்க்கங்களே தென்னிலங்கையிற் பொதுவாகக் காணப்பட்ட விவசாய வர்க்கங்களாகும்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட நெற்காணிச் சட்டம், பிலிப் குணவர்த்தன மனதிற் கொண்டிருந்த காணிச் சீர்திருத்தம் அல்ல. அது பெருந் தோட்டங்களுக்கு விலக்களித்தது. நெற்காணி உடமையாளர்கட்கு சில கட்டுபாடுகளை விதித்தது. மேலும், கோயில்கட்குச் சொந்தமான காணிகட்கு பல சலுகைகள் வழங்கப்பட்டன. எனவே பிரபுத்துவ அடிப்படையிலான உற்பத்தி உறவுகள் நாட்டில் சில பகுதிகளிலேனும் தொடர்ந்து பேணப்பட்டன எனலாம். ஆயினும் விவசாயத்தில் பெரும் நிலவுடைமையாளர்களின் பங்கு குறைந்து கொண்டு போனதற்குக் காரணம், புதிய விவசாய அபிவிருத்தி, குடியேற்றத் திட்டங்கள் மூலம் நிகழத் தொடங்கியமையாகும்.

நிலமின்மை, விவசாயிகளின் வறுமை, வேலை இன்மை போன்றனவற்றைக் கவனத்திலெடுக்குமாறு 1971 ஏப்பிரல் கிளர்ச்சி அரசாங்கத்தை வற்புறுத்தியது. அப் பின்னணியிலேயே தனியார் நிலவுடைமைக்கு 50 ஏக்கர் உச்ச வரம்பு விதிக்கப்பட்டது. எனினும் பல நிலவுடைமையாளர்கள் தம்மைக் கம்பனியாக அறிவித்துத் தமது நிலத்தின் பெரும் பகுதியைத் தக்கவைத்துக் கொண்டதுடன் 1977க்குப் பின்னர் தேசியமயமாக்கப்பட்ட காணிகள் பல திருப்பிக் கொடுக்கப்பட்ட போதிலும் விவசாய உற்பத்தி உறவுகளில் முதலாளியப் பாங்கான பண்புகள் தொடர்ந்தும் மேலோங்கி வந்ததை மறுக்க இயலாது. விவசாயத்தில் சிறு நிலவுடைமையார்களின் உற்பத்தியே ஏகப் பெரும்பாலானதாகியது. மகாவலித் திட்டம் அப் பண்பை மேலும் வலுப்படுத்தியது. பெருங்காணிச் சொந்தக்காரர்களால் நிலவுடைமை அடிப்படையில் குத்தகை விவசாயிகளையும் கூலி விவசாயிகளையும் கட்டுப்படுத்த இயலாது போய்விட்டது. சொந்த நிலத்தில் உழைப்பில்லாத போது கூலி உழைப்பு என்கிற முறையை இன்று விவசாயத் துறையில் காணலாம். நிலவுடமை உற்பத்தி உறவின் காணப்பட்ட கட்டாயக் கூலி அடிமை முறை அற்றுப் போயுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதி அடிப்படையிலான பிரபுத்துவ உற்பத்தி உறவுகளும் உழைப்பின் பங்கீடும் இருந்து வந்தன. அதுவும் நவீனமயமாதலுடன் தேய்வடைந்து சாதியத்திற்கு எதிரான போராட்டத்துடன் ஏறத்தாழப் பூரணமான முடிவை எய்திவிட்டன.

எனவே சமூகத்தில் நிலவுடைமை அடிப்படையிலான உற்பத்தியோ உற்பத்தி உறவுகளோ இல்லை என்பது தெளிவு. அதனாலேயே 1970கள் வரை பயன்படுத்தி வந்த அரைக் கொலனிய அரை நிலப்பிரபுத்துவ என்ற அடையாளப்படுத்தலை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. இன்று கொலனியம் நவகொலனியமாகத் தன்னை முற்றாக மீள வடிவமைத்துள்ளது. பழைய வகையான கொலனியாட்சி முறையை ஏகாதிபத்தியத்தால் தொடர இயலாது. எனவே உலக மயமாதல் மூலம் நவகொலனியத்தை அது வலுப்படுத்தியுள்ளது. 1978ல் இலங்கையில் அறிமுகமான புதிய திறந்த பொருளாதார கொள்கை நவ கொலனியத்தை வேகப்படுத்திக் கொண்டது. அதன் தொடர்ச்சியாக அந்நியக் கம்பனிகள் முதலில் பெருந்தோட்டங்களைத் தமதாக்கின. இப்போது நாட்டின் பல்வேறு இடங்களில் அந்நியக் கம்பனிகள் பிற விவசாய ஏற்றுமதிகட்காகப் பயிர்ச்செய்கை நிலங்களைத் தமதாக்கி வருகின்றன. உதாரணமாக,

(14ம் பக்கம் பார்க்க)



(இது மே 4 இயக்கத்தின் 20வது ஆண்டு நினைவு நாளை ஒட்டி 1939 மே 4ம் திகதி தோழர் மாஓ சேதுங் வாலிபர் இயக்கத்தின் திசைமாரக்கம் என்ற தலைப்பில் யெனான் பிரதேசத்தில் ஆற்றிய உரையில் இருந்து தொகுக்கப்பட்டது.)

# வாலிபர் இயக்கத்தின் திசைமார்க்கம்

தோழர் மாஓ சேதுங்

எதிரியின் சக்திகள் மிகப் பலமானவை, நமது சக்திகள் மிகப் பலவீனமானவை, ஒன்று பலமுள்ளதாகவும் மற்றது பலவீனமாகவும் இருந்ததால் புரட்சி வெல்லவில்லை. எதிரியின் சக்திகள் மிகப் பலமானவை என்று நாம் சொல்லும் போது, ஏகாதிபத்தியத்தினதும் (இது பிரதானமானது) பிரபுத்துவத்தினதும் சக்திகள் மிகப் பலமானவை என்று நாம் கருதுகிறோம். ஆனால் எமது பலவீனத்திற்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலபிரபுத்துவ எதிர்ப்புக் கடமையை நாம் நிறைவேற்றத் தவறியதற்கும் பிரதான காரணம் நாட்டின் சனத்தொகையில் 90 சதவீதத்தினரான பாடுபட்டு உழைக்கும் தொழிலாளி, விவசாயிப் பொது மக்கள் அணிதிரட்டப்படாததே, கடந்த சில தசாப்தங்களில் நிகழ்ந்த புரட்சிகளின் அனுபவங்களைத் தொகுத்துக் கூறினால், நாட்டு மக்கள் எல்லோரையும் நாம் பூரணமாக அணிதிரட்டாததுடன், அவ்வாறு அணிதிரட்டுவதைப் பிற்போக்குவாதிகள் எப்போதும் எதிர்த்தும் சீர்குலைத்தும் வந்தார்கள் என்றும் நாம் கூற முடியும். நாட்டின் சனத்தொகையில் 90 சதவீதமாக உள்ள தொழிலாள விவசாயப் பெருமக்களை எழுச்சி பெறச் செய்து ஸ்தாபன ரீதியில் அணிதிரட்டுவதால் மாத்திரமே ஏகாதிபத்தியத்தையும் பிரபுத்துவத்தையும் தூக்கியெறிவது சாத்தியமாகும். ''மே 4 இயக்கம்'' தொட்டுச் சீன வாலிபர்கள் வகித்துவந்த பாத்திரம் யாது? ஒரு வழியில் அவர்கள் ஒரு முன்னணிப் படையின் பாத்திரத்தை வகித்து வந்தார்கள். சில பிடிவாதக்காரர்களைத் தவிர நாட்டின் ஏனைய அனைவராலும் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**நாட்டின் சனத்தொகையில் 90 சதவீதமாக உள்ள தொழிலாள விவசாயப் பெருமக்களை எழுச்சி பெறச் செய்து ஸ்தாபன ரீதியில் அணிதிரட்டுவதால் மாத்திரமே ஏகாதிபத்தியத்தையும் பிரபுத்துவத்தையும் தூக்கியெறிவது சாத்தியமாகும்.**

ஆகவே நாடு முழுவதிலுள்ள இளம் புத்திஜீவிகளும் மாணவர்களும் பரந்துப்பட்ட தொழிலாளர் விவசாயிகளோடு ஒன்றிணைய வேண்டும். அவர்களுடன் இரண்டறக் கலப்பதன் மூலமே பலமிக்க படையொன்றை உருவாக்க முடியும். ஆம்! இது பல கோடி மக்களின் படை! இந்தப் பிரமாண்டமான படையுடன் மட்டுமே எதிரியின் வலுவிடங்களைச் சுக்குநூறாக்க முடியும். அவனுடைய இறுதிக் கோட்டையும் உடைத்தெறிய முடியும். சில நாட்களுக்கு முன் எழுதிய சிறு கட்டுரையில் ''புரட்சிகர புத்திஜீவிகளுக்கும் புரட்சியற்ற எதிர்ப்புரட்சிப் புத்திஜீவிகளுக்குமிடையான எல்லைக் கோடு பரந்துப்பட்ட தொழிலாளர் விவசாயிகளுடன் அவர்கள் ஒன்றுப்பட, உண்மையில் ஒன்றுபட்டு அவர்களுடன் இரண்டறக் கலந்த விட, விரும்புகிறார்களா இல்லையா என்பதிற் புதைத்துகிடக்கின்றது'' என்று குறிப்பிட்டிருந்தேன். ஒரேயொரு எல்லைக்கோடு என்று நான் கருதும் வரையறையை அங்கு முன்வைத்தேன். ஒரு இளைஞன் ஒரு புரட்சிவாதியாக இருக்கின்றானா எனக் கணிப்பது எப்படி? அவன் ஒரு புரட்சிவாதி என நாம் கணிப்பது எப்படி? அதற்கு ஓரேயொரு அளவுகோல் மாத்திரமே உண்டு. அதாவது பரந்துப்பட்ட விவசாயிகளோடு தானும் ஒருவனாக விரும்புகிறானா இல்லையா, நடைமுறையில் அப்படிச் செய்கிறானா என்று பார்ப்பதாகும். அவன் அப்படிச் செய்ய விரும்பினால், உண்மையில் அவன் அப்படிச் செய்தால், அவன் ஒரு புரட்சிவாதியாவான், அப்படி செய்யாவிட்டால், அவன் புரட்சியற்றவன் அல்லது எதிர்ப்புரட்சிவாதி ஆவான். இன்று ஒருவன் பரந்துபட்ட விவசாயிகளுடன் தன்னை தானே இணைத்துக் கொண்டால் அவன் ஒரு புரட்சிவாதியாவான் நாளை அவன் அப்படிச் செய்யத் தவறினால் அல்லது பொது மக்களை அடக்கி ஒடுக்குமாறான ஒரு திருப்பத்தை எடுத்தால், அவன் புரட்சியல்லாதவனாக அல்லது ஒரு எதிர்ப்புரட்சிவாதியாக மாறிவிடுவான். இளைஞர்கள் சிலர் ~ சீனாவில் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்கு சுன் யாட் சென் முன்வைத்த தேசியம், ஜனநாயகம், மக்கள் ஜீவனோபாயம் ஆகிய மூன்று பிரச்சினைகளைப் பற்றிய கோட்பாடுகளும் வேலைத்திட்டங்களுமான~மூன்று மக்கட் கோட்பாடுகளில் அல்லது மாக்ஸியத்தில் தாம் நம்பிக்கையுடையவர்கள் என்று வாயளவில் மாத்திரம் அதிகம் கதைக்கின்றனர். ஆனால் அதற்கு எந்த மதிப்பும் கிடையாது.

தானும் சோஷலிஸத்தில் நம்பிக்கையுடையவன் என்று ஹிட்லர் கூடச் சொல்லவில்லையா? 20 ஆண்டுகளுக்கு முன் முசோலினியும் ஒரு ''சோஷலிஸ்டாக'' இருந்தார். அவர்களுடைய ''சோஷலிஸத்தின்'' அர்த்தம் என்ன? ஃபாஸிஸம் அன்றி வேறல்ல. பெய்ஜிங் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தவரும் ''புதிய வாலிபர்'' இதழின் ஆசிரியரானதால் பேர் போனவரும், பிற்காலத்தில் ட்ரொஸ்க்கிவாதப் பிற்போக்கு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவருமான சென் தூஷியூவும் ஒரு காலத்தில் மாக்ஸியத்தில் நம்பிக்கை கொள்ளவில்லையா? பின்னர் அவர் செய்ததென்ன? எதிர்ப்புரட்சித் தரப்பிற் சேர்ந்து கொண்டார், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தாபகர்களில் ஒருவராயிருந்து பின்னர் வலதுசாரிச் சிந்தனை சரனாகதிவாத மார்க்கத்தை வளர்த்த சாங் கோ தௌவும் மாக்ஸியத்தை நம்பவில்லையா? இப்போது அவர் எங்கு சென்றுவிட்டார்? நேராக ஓடிச்சென்று சேற்றில் மூழ்கிவிட்டார். சிலர், தாம் ''மூன்று மக்கட் கோட்பாடுகளின் சிஷ்யர்கள்'' என்றும் அவற்றின் பழைய தூண்களென்றும் தம்மை தாமே கூறிக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்களுடைய தேசியக் கோட்பாடு உண்மையில் ஏகாதிபத்தியத்துடன் சதியாலோசனை செய்வது எனும் அர்த்தமுடையது. அவர்களுடைய ஜனநாயகக் கோட்பாடு மக்களை அடக்கியொடுக்குவது எனும் அர்த்தமுடையது. அவர்களுடைய மக்களின் ஜீவனோபாயம் என்பது பொது மக்களின் இரத்தத்தை எவ்வளவுக்கு உறுஞ்சமுடியுமோ அவ்வளவுக்கு உறுஞ்சுவதாகும். அவர்கள் மூன்று மக்கட் கோட்பாடுகளை அனுஷ்டிப்பவர்கள் என்று உதட்டளவில் உறுதிகூறி உள்ளத்தில் அவற்றை மறுப்பவர்களாவர்.

**''புரட்சிகர புத்திஜீவிகளுக்கும் புரட்சியற்ற எதிர்ப்புரட்சிப் புத்திஜீவிகளுக்கும் இடையான எல்லைக் கோடு பரந்துப்பட்ட தொழிலாளர் விவசாயிகளுடன் அவர்கள் ஒன்றுப்பட, உண்மையில் ஒன்றுபட்டு அவர்களுடன் இரண்டறக் கலந்துவிட, விரும்புகிறார்களா இல்லையா என்பதிற் புதைத்துகிடக்கின்றது''**

எனவே மூன்று மக்கட் கோட்பாடுகளை ஒருவர் உண்மையாகப் பின்பற்றுகிறாரா அல்லது வேஷம் போடுகிறாரா, அவர் உண்மையான மார்க்ஸியவாதியா, அல்லது போலியானவரா என்று அளவிட விரும்பினால் அவர் பரந்த தொழிலாள விவசாயிகளுடன் கொள்ளும் உறவு பற்றி அறிந்தால், அது மட்டும் போதுமானது. பின்னர் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும். அது தான் ஒரேயொரு வரையறை. அதை விட வேறு இல்லை. அனைத்து நாட்டு இளைஞர்களும் இருண்ட எதிரோட்டத்தால் இழுத்துச் செல்லப்படாமல், பதிலுக்குத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது சொந்த நண்பர்கள் என்பதை நன்கு உணர்ந்து, பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவார்கள் என நம்புகின்றோம்.


www.padippakam.com



# போரும் பொய்க் காரணங்களும்

ஆஃப்கானில் ஆட்சியில் இருந்த தலிபான்களுக்கும் அல்கைதாவுக்கும் தொடர்பு இருப்பதாக கூறி அமெரிக்கா 2002இல் ஆஃப்கானிஸ்தானில் ஆக்கிரமைப்பை நியாயப்படுத்தியது. ஆனால் அக் குற்றச்சாட்டில் ஓர் உண்மையும் இருக்கவில்லை. அமெரிக்காவில் இருந்த உலக வர்த்தக மையக் கட்டிடத்தின் இரட்டைக் கோபுரங்களின் தகர்ப்புக்கும் தலிபான்களுக்கும் எவ்வித உறவும் இருக்கவில்லை. இன்று வரை, எவ்விதமான உறவும் இருந்ததாகவும் நிறுவ அமெரிக்காவுக்கு இயலவில்லை. ஆதன் பின்பு ஈராக் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாகக் கூறிப் பொய்யான தகவல்களை ஆதாரமாக்கி ஈராக் மீது போர் தொடுத்தது. ஈராக் அரசாங்கத்திற்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாகவும் கூறி ஈராக் மீது போர் தொடுத்தது.

அமெரிக்கா இஸ்ரேலைக் கண்டிப்பது போலவும் மறிப்பது போலவும் காட்டிக் கொண்டு இஸ்ரேல் மூலம் ஒரு போரைத் தொடங்கி அதை பின்னர் முன்னெடுத்துச் செல்ல முடியும். என்றுமே போர் தொடுக்க அது வசதியானதுங் கூட. விளைவுகள் பற்றி ஏகாதிபத்தியம் அதிகம் சிந்திப்பதில்லை.




போர்கள் மூலம் அமெரிக்கா எதையும் தனக்காக வெல்ல முடியவில்லை. மாறாக இரண்டு நாடுகளிலும் பேரழிவை உண்டாக்கியதுடன் அவற்றில் நிலையான ஒரு ஆட்சி ஏற்பட இயலாத ஒரு சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. இப்போர்கள் அமெரிக்காவின் பொருளாதாரச் சூழ்நிலையை மேலும் மோசமாக்கியுள்ளன. பாலஸ்தீனப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் "விசால இஸ்ரேல்" எனும் ஸியோனிசக் கனவை நனவாக்க வேண்டுமானால் ஈராக் மீதானப் போர் சற்று உதவியிருக்கலாம். ஆனால் அதற்கு பாலஸ்தீனப் போராட்டத்தை முறியடிக்க இயலாத காரியமாகியுள்ளது. பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு பிரதான வெளிநாட்டு ஆதரவாக இருந்து வருவன லெபனானின் ஹிஸ்புல்லாவின் செல்வாக்கும் சிரியாவின் மதச்சார்பற்ற அரசும் ஈரானின் ஷியா இஸ்லாமிய ஆட்சியுமே. இது அமரிக்காவுக்கு மட்டுமல்ல மதவாதப் பிரபுத்துவக் குடும்ப முடியாட்சிகளான சவூதி அரேபியாவுக்கும் அரேபிய வளைகுடா அரசுகள் எனப்படும் அமெரிக்க எடுபிடிகளுக்கும் உறுத்தலாகவே உள்ளன.

ஈரானில் இருந்து வந்த ஆட்சி ஷா ரெஸா பஹ்லவியின் கீழ் அமெரிக்க ஆதரவில் நடந்த ஒரு அரச பயங்கரவாத ஆட்சியாகும். அதன் வீழ்ச்சி ஈரானுக்கு உண்மையான சனநாயகத்தைக் கொண்டுவராத போதும் மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிரான வலிய சவாலாக உள்ளது. ஈரானின் ஆட்சி மதவாதத்திற்கு உட்பட்ட ஆட்சியாயினும் அதில் பல குறைபாடுகள் இருந்த போதிலும் அது பெரும்பாலான மக்களினால் நிராகரிக்கப்பட்ட அல்லது அறவே வெறுக்கப்படும் சர்வாதிகாரமல்ல. அந்த அளவில் அது மத்திய கிழக்கின் எந்த அமெரிக்க சார்பு ஆட்சியையும் விடச் சனநாயகமானது. ஈரானில் ஆட்சியை கவிழ்க்க அமெரிக்க பலவாறு முயன்று தோற்றுள்ளது. அமெரிக்க எடுத்த எந்தவொரு முயற்சியும் ஈரானில் மதவாத தலைமையின் கைகளையே வலுப்படுத்தியுள்ளது. முக்கியமாக ஈரானுக்கு எதிராக பத்து வருட போரைத் தொடுக்குமாறு ஈராக்கைத் தூண்டிப் போருக்கு முழு உதவியையும் வழங்கிய நாடுகள் அமெரிக்கவும் சவூதி அரேபியாவுமே. அந்தப் போர் ஈராக்கின் தோல்வியின் பயனாக முடிவுக்கு வந்தது.

அதன் பின்பு அமெரிக்கா எடுத்த குழிபறிப்பு முயற்சிகள் தோல்வி கண்டன. இறுதியாக கடந்த ஜனாதிபதித் தேர்தல் குழறுபடியானது என்று கூறிக் கலவரங்களைத் தூண்டிவிட எடுத்த முயற்சியும் இரண்டு ஆண்டுகட்கு முன்னர் கேவலமான ஒரு படுதோல்வியில் முடிவடைந்தது. இவற்றின் பின்னணியிலேயே ஈரானுக்கு எதிரான புதிய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. அணுசக்தி ஆற்றலை விருத்தி செய்வதற்கான முயற்சிகள் ஈரானில் இஸ்லாமியப் புரட்சிக்கு முன்னரே தொடங்கிவிட்டன. அது அணு ஆயுத உற்பத்தி நோக்கமுடையதல்ல என்பது அமெரிக்காவும் மேற்குலகும் நன்கு அறிந்த உண்மை. ஆனாலும் ஈரானைப் பணிய வைப்பது என்ற நோக்குடன் சர்வதேச அணுசக்தி ஆணையம் (**IAEA**) என்ற ஐ.நா. சபைக்குட்பட்ட அமைப்பிற்குக் கண்காணிப்பு அதிகாரங்களை வழங்கி ஈரானின் அணுசக்தி ஆராய்வுகளை முடக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அவற்றின் தொடர் விளைவாக இன்னமும் எந்தவிதமான நேரடி ஆதாரமுமின்றி ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் வல்லமையைப் பெற்றுள்ளது, உற்பத்தி செய்யும் வாய்ப்பு உண்டு எனுமாறான விஞ்ஞான விரோதமான அறிக்கைகளை **IAEA** வழங்கி வருகிறது. ஆனால் அமெரிக்க உளவு நிறுவனங்கள் அப்படியான வாய்ப்பு இல்லை என்கின்றன.

**IAEA** யின் சான்றுகள் யாவும் ஈரானுக்கு எதிரான நாடுகளின் ஊடகங்கள் மட்டுமே. எனினும் அவற்றைப் பயன்படுத்தி அமெரிக்கா ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஈரானுக்கு எதிரான தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற இயலாதுள்ளது. அதைவிட ஈரான் சர்வதேச ஒத்துழைப்பு ஆயத்தம் என்பதைப் பலவாறு வெளிப்படுத்திய போதிலும் அமெரிக்கா ஈரானின் நோக்கங்களை திட்டமிட்டே திரித்து வந்துள்ளது. அமெரிக்கா ஈரானில் ஒரு ஆட்சி மாற்றத்தை வேண்டுகிறது. ஆனால் அதனைக் கொண்டுவருவதற்குத் தேவையான மக்கள் ஆதரவை அதனால் திரட்ட இயலாதுள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானுக்கு எதிரான பல குழிபறிப்பு வேலைகளை நடத்துகின்றன. அடுத்தடுத்து ஈரானிய அணு விஞ்ஞானிகள் பலர் ஈரானுக்கு வெளியிலும் கடத்தப்பட்டும் கொல்லப்பட்டுமுள்ளனர். அவையாவும் இஸ்ரேலின் கைங்கரியம் என்பது நிரூபணமாகியுள்ளது. அதேவேளை தனது முகவர்கள் மூலம் பயங்கரவாதச் செயல்களை நடத்திப் பழியை ஈரான் மீது சுமத்தும் முயற்சியும் தொடருகிறது.

இவற்றின் நடுவே தான் ஈரானின் ஆட்சியைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் அமெரிக்கா ஈரான் மீதான பலவாறான தடைகளை விதித்து வந்துள்ளது. அண்மைய வணிகத் தடை ஈரானின் ஏற்றுமதி வருமானத்தில் 80 சதவீதத்தைப் பெற்றுத்தரும் எண்ணெய் மீதானது. அமெரிக்க வற்புறுத்தலால் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்க மீது தங்கியுள்ள பொருளாதாரத்தை உடைய நாடுகளும் அமெரிக்காவின் தடையுடன் ஒத்துப்போவதற்கான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே ஈரான் இரண்டு அதிரடி நடவடிககைகளை அறிவித்தது. ஒன்று தனது எண்ணெய் ஏற்றுமதிக்கு இடையூறு ஏற்பட்டால் பாரசீக வளைகுடாவில் வாயிலில் உள்ள ஹொர்முஸ் நீரிணை ஒடுங்கிய பகுதியில் கடற் போக்குவரத்தை தவிர்ப்பதாக எச்சரித்துள்ளது. இது வெறும் மிரட்டலல்ல என்பதை அமெரிக்க பாதுகாப்பு நிறுவனம் உணருகிறது. ஆபத்தாக ஐரோப்பிய ஒன்றியம் வணிகத் தடையை அறிவித்து அது யூலை 2012இல் நடைமுறைக்கு வரும் என்று தெரிந்தவுடன், ஈரான் உடனடியாக நிறுத்துவதாகவும் அறிவித்தவுடன், பிற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு எதிராக எண்ணெய் வணிகம் பற்றிய கடுமையான விதிளையும் அறிவித்துள்ளது. இது கடும் பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் ஐரோப்பிய நாடுகள் மீது கடுமையான சுமையை ஏற்றுவதாகவே அமையும்.

இது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் ஆண்டு. எனவே அமெரிக்கா புதிய ஒரு போரில் இறங்காது என்பது பெரும்பாலான எதிர்பார்ப்பு. ஆனாலும் இஸ்ரேல் தாக்குதல்களைத் தொடுக்க வாய்ப்புண்டு. அமெரிக்கா இஸ்ரேலைக் கண்டிப்பது போலவும் மறிப்பது போலவும் காட்டிக் கொண்டு இஸ்ரேல் மூலம் ஒரு போரைத் தொடங்கி அதை பின்னர் முன்னெடுத்துச் செல்ல முடியும். என்றுமே போர் தொடுக்க அது வசதியானதுங் கூட. விளைவுகள் பற்றி ஏகாதிபத்தியம் அதிகம் சிந்திப்பதில்லை.

---

13ம் பக்கத் தொடர்ச்சி – கொலனிய...

டோல் (Dole) எனும் அமெரிக்கக் கம்பனி நாட்டின் பல்வேறு பகுதிகளில் 62 500 ஹெக்டேயர் நிலங்களைப் பழ உற்பத்திக்காக அரசாங்கத்திடம் இருந்து பெற்றுள்ளது. அங்கு உழைப்பில் ஈடுபடுத்தப்படவுள்ள விவசாயிகளுக்குச் சம்பளம், நேரம், மேலதிக நேர வேலை போன்றவற்றைக் கடும் சுரண்டல் அடிப்படையில் நிர்ணயித்தும் வருகிறது. அவர்களுக்குச் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன வழங்கப்பட மாட்டாது எனவும் அறிவித்துள்ளது. இது கூலி விவசாயிகளையும் சிறு நிலவுடைமையாளர்களையும் நவீன பண்ணைகளில் கூலி உழைப்பாளர்களாக மாற்ற உதவுகிறது. இன்று கூலி விவசாயிகள் தமது நாளாந்தச் சம்பளத்திற்காகப் பேரம் பேசும் நிலை ஏற்பட்டுள்ளது. சம்பளம், நேரம், உணவு, தேனீர் எனப் பெறுவதுடன் விவசாய வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் நான்கைந்து பேர் சேர்ந்து உழைப்பில் ஈடுபடுக்கின்றனர். எனவே அரை நிலப்பிரபுத்துவம் என்பது உற்பத்தி உறவுகளைப் பொறுத்தவரையில் காலம் கடந்தவொன்றாகக் காணப்படுகின்றது.

**அப்படியானால் நாட்டில் பிரபுத்துவமே இல்லை எனக் கூற முடியுமா?**

பழைய சமுதாய அமைப்பின் பொருளாதாரக் கட்டுமானம் முற்றாகத் தகர்ந்த பின்பும் அந்த அமைப்பின் அரச அதிகார முறைமை மாற்றியமைக்கப்பட்ட பின்பும் பழைய சமுதாயத்தின் கருத்தியலும் சிந்தனை முறையும் மரபுகள், சடங்குகள், மதம், மொழி என்பவற்றினூடு பண்பாட்டுத் தளத்தில் சமூக உறவுகளிற் பொதுப்படப் பேணப்படுகின்றன. இதை நாம் ஜப்பானியச் சமூகத்தில் மிகவுங் காணலாம். சடங்காசாரமாகவெனினும் மன்னர் ஆட்சியையும் அதையொட்டிய மரபுகளையும் பேணுவது போன்ற சில வகைகளில் முன்னேறிய ஐரோப்பிய நாடுகள் சிலவும் ஜப்பானும் நிலவுடைமையின் மிச்சொச்சங்களைப் பேணுகின்றன. ஜப்பானிய கம்பனிகளில் அண்மைவரை —குறிப்பிடத்தக்க அளவில் இன்றும்— சமூக அடிப்படையிலான ஸ்தாபன அமைப்பும் பொதுப்பட ஜப்பானிய சமூக வழக்கங்களிலும் பிரபுத்தவத்தின் மிச்சங்கள் வலுவாகவே இருந்துள்ளன.

எனவே பிரபுத்துவச் சிந்தனை எளிதில் உதறி எறியக் கூடியது அல்ல என்பதனையும் அதை இல்லாமலாக்க முதலாளிய மாற்றத்தை விட வலுவான அடிப்படை மாற்றம் தேவைப்படுகிறது என்பதனையும் உணருகிறோம். புலம்பெயர்ந்த ஆசிய சமூகங்களை எடுத்துக் கொண்டாற், பல தேசிய இனத்தவர்கள் ஒரு தலைமுறை கடந்தும் தமது நிலவுடைமைச் சிந்தனைகளில் இருந்து விடுபடாமல் உள்ளனர். மேற்கே புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் சமூகத்தோரிடையே சாதியம், ஆணாதிக்கம் பழமைவாதம், சடங்கு சம்பிரதாயம் பேணல் என்பன இலங்கையில் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் உள்ளதை விட வலுவாக உள்ளமை, அதையே கூறுவகிறது. அவர்களது சமுதாய இருப்பை நிலவுடைமைச் சமுதாய இருப்பு என்று கூற இயலாது. இருந்தும், பழமை சார்ந்த நிலவுடைமைக் கருத்தியல் நீடிப்பதைக் காணமுடிகிறது.

விபத்தில் அல்லது சத்திர சிகிச்சை மூலம் கைகால்களை இழந்தவர்களின் மூளையில் அந்த உறுப்பு இல்லாது போனமை முற்றாகப் பதிவாகாமல் இழந்த பகுதிகளில் அரிப்பது போலவும் பிறவாறும் உணர்வுகளை அனுபவிப்பதை 'phantom limbs' (மாயக் கைகால்கள்) என்று சொல்வார்கள். அவ்வாறே முதலாளியத்திற்கு வந்த பின்னும் நிலவுடமைச் சமூக உணர்வுகள் சில சமூகங்களில் நீடிக்கின்றன. நிலவுடைமையின் எச்சங்கள் சமுதாய மேற்கட்டுமானத்தில் நிலவுவதன் பயனாகச், சமூக மாற்றத்திற்கு எதிரான சக்திகள் வலுவடைகின்றன. ஐக்கியப்படக் கூடியனவும் ஐக்கியப்பட வேண்டியனவுமான வர்க்கச் சக்திகள் பிரிந்து நிற்கவும் அவை காரணமாகின்றன. எனவே நிலவுடைமையின் எச்சங்களைப் பண்பாட்டுத் தளத்திலும் சிந்தனைத் தளத்திலும் எதிர்த்துப் போராடுவது கலை இலக்கியப் பண்பாட்டுத் துறைகளிலும் மட்டுமன்றி சமூக அரசியல் தளத்திலும் தேவையாகிறது.

---

## ஏகாதிபத்தியம்

வளங்களை சூறையாடுகிறாய்
களவு நிறுவனங்களை
கட்டியணைத்தப்படி

இலவசக் கல்வி மருத்துவம்
உனக்கு
கசக்கும் சொற்கள்

மானியம் வழங்காதே என்பாய்
மறுத்தால்
நிதியுதவி நிறுத்துவாய்

எம்மை கடனாளியாக்கி உன்
காலில் விழவைப்பாய்

தடுப்பவர்களை தூக்கியெறிய
நீ பாவிப்பது மதம்

பொம்மைகள் அரசு பெற
போதிப்பது ஜனநாயகம்

உலக மயமாக்கல் உன்
உற்பத்திகளை விற்றுத்தள்ளும்
சதித் திட்டம்

துப்பாக்கி முனையில்
வர்த்தகம் செய்வதுதானே
உன் வழக்கம்

அ. தனஞ்சயன்

# பெண் ஆளுமைகளின் சமகால சவால்கள்

*சந்திரலேகா*

பெண் ஆளுமைகள் பற்றிய விழிப்புணர்வுகள் பரிமாணங்கள், தெரிவுகள், சுயங்கள், நிலைப்பாடுகள் என்பன சமகாலத்தில் பெண் உயர்ச்சிக்கும் பெண் பற்றிய பதிவுகளுக்கும் மிகவும் அவசியமானவைகளாக கருதப்படுகின்றன. பெண் ஆளுமைகள் மேலோங்கியிருப்பதும் பெண்களின் உயர்வும் சமத்துவமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டதாகக் காணப்படுகின்றன. ஆண்டாண்டு காலமாகப் பெண் ஆளுமைகள் விழிப்புறும் தோரணையிலும் சமூகத்தில் பெண்ணின் வகிபாகம் ஸ்திரப்படுவதன் தேவையும் அவற்றை தூண்டி விடக்கூடிய கூர்மையும் அழுத்தமாகப் பேசப்படுவதற்கும் செயற்படுத்துவற்குமே மார்ச் 8ம் திகதியில் பெண்கள் தினம் கொண்டாடப்பட வேண்டுமென்பதும் நாம் சிந்திக்கப்பட வேண்டிய விடயமாக காணப்படுகின்றன.

ஆளுமை என்பது பற்றிப் பேச முற்படும் அநேகர் ஆண் மையப்படுத்தப்பட்ட ஆளுமைகளையே உலகுக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருப்பது சாதாரணாமாகி விட்டிருக்கின்றது. ஆளுமைகள் ஆண்களை மையப்படுத்தி தொழுது கொண்டிருப்பதும் பெண் ஆளுமைகளைக் குறைபாடு உள்ளவையாகக் கருதுவதும் கணக்கிலெடுக்காமலிருப்பதும் மலிவாக எண்ணுவதும் அவற்றின் கூர்மையை மறைக்க நினைப்பதும் ஒழுக்கம் என்ற உள்ளுருவத்திலும் “கற்பு” என்கின்ற மாயைக்குள் அமுக்கி அவற்றை எழ விடாமல் செய்வதும் ஆளுமையை மனித வர்க்கத்தின் ஒரு சாராருக்கெதிராக்கிப் பார்ப்பது அறிவியலின் சிறுமையாகவே காணப்படுகின்றது.

> **பெண் ஆளுமைகளை ஸ்திரப்படுத்துவது என்பது ஆண் சார்ந்த ஆளுமைகள் வீழ்த்துவது அல்ல. அல்லது ஆணுக்கெதிரான ஆளுமைப் பரிமாணங்களை ஸ்திரப்படுத்துவதுமல்ல. பெண் விடுதலை என்பது தன்முன்னால் உள்ளத் தடைகளை "அறிவு பூர்வமாக" உடைத்தெறிந்து தனக்குள் சரியான முற்போக்கு தனமான அறிவு சார்ந்த கூர்மையான ஆளுமைகளை ஆக்கிக்கொள்ள வேண்டும்.**

ஆண் ஆளுமைகள் எடுத்துக்காட்டுகளாகவும் எடுகோள்களாகவும் உயர்ந்த உதாரணங்களாகவும் சரித்திரங்களாகவும் பதியப்பட்டிருப்பதும் அதே விதமான பெண் ஆளுமைகள் காணாமல் போயிருப்பதும் அவற்றை தரிசிக்க நூல்களைத் தேடித் தேடி வசனங்களில் வாழ்க்கையை தேடுவதும் வழக்கமாகிவிட்டிருக்கின்றது. அதற்கான காரணம் என்ன? பெண் ஆளுமைகள் உலக வளர்ச்சியிலும் வரலாற்றிலும் மனித வர்க்கத்தை கூர்மைப்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்யவில்லையா? சரித்திரங்களும் சமயங்களும் விஸ்தரித்துக் காட்டியது போல் பெண் பலவீனமான பண்டம் என்பதாலா? ஆண்மீக திடம் அமைக்கப்பட்டதும் ராட்சியங்கள் கவிழ்க்கப்பட்டதும் பெண் என்கின்ற பிரமையினாலா? இது சிந்திக்கவேண்டிய அறிவியலாக காணப்படுகின்றது

அறிவியல் சிந்தனைக்கும் உயிரியல் ஒருமைப்பாட்டிலும் இரு வேறு உயிர்களின் உள்ளார்ந்த திறன்கள் ஆளுமைகள் ஆற்றல்கள் அறிவு நுண்மதி மேலும் உயிரியல் ரீதியான கட்டமைவுகள் என்பன எவ்விதத்திலும் பிரித்துப் போட்டு உயர்வு தாழ்வு வலிமை பலவீனம் காண்பதற்காக கட்டமைப்பக்கப்பட்டிருக்க முடியாது. சமூகத் தேவைப்பாட்டுக்கேற்ப உடலின் உறுப்புக்கள் இயல்பூக்கங்கள் என்பன வித்தியாசப்பட்டிருக்க வேண்டியது தேவை கருதியே. அத்தேவைகளும் உயிரியல் அம்சங்களும் ஆண்களைவிட அசாதாரணமான பிறப்பாக அவளை காட்டுவதை மறுதலித்தும் எதிர்த்தும் அது சார்ந்த விடயங்களை சமயம், கலாசாரம், பண்பாடு என்ற கருவிகளின் துணைக்கொண்டு பெண் குறைவாக மதிக்கப்படுவதனையும் ஆண் ஆளுமைகளே உயர்வாகப் பேசப்படுவதையும் காணலாம்.

எனவே பெண் வளர்ச்சி பற்றிய வரலாறுகள் சிந்திக்கப்படுமிடத்து அதன் எதிரியாக தனித்து ஆண் என்ற எதிர்ப்பாலுக்கு உரியதாக மட்டும் மட்டுப்படுத்ததாது சமூகம் சார்ந்த பெண் ஆளுமைகளை வெகுவாகக் குறைக்கும் எல்லா காரணிகளையும் கண்டுகொள்ளவேண்டியத் தேவைப்பாடும் ஒரு மாக்சியப் பார்வைக்கே உண்டு.

இன்று மனித குலத்தின் வர்க்க விடுதலைப் பற்றியத் தேவை உணரப்பட்டு வருகின்ற நிலையில் “பெண் விடுதலை” என்பது ஆழமாகப் பேசப்படவேண்டிய ஒன்றாகும். ஏனெனில் சமூகத்தின் விடுதலைக்கும் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் இருபாலாரினதும் இணையற்ற உழைப்பும் அறிவுப் பரிமாணங்களும் அவசியமானவைகளாக கருதப்படுகின்றது. பெண் ஆளுமைகள் உயர்வாக கருதப்படாத சமூகத்தில் உயரிய அந்தஸ்த்து ஆண் சார்ந்ததகவும் ஆணை மையப்படுத்தியதாகவும் தொடர்ச்சியாக இருப்பதுடன் அங்குள்ள நடைமுறைகள் அனைத்தும் ஆண் ஆளுமைக்குரியனவாக மேலும் மேலும் கட்டமைக்கப்படுவது இயல்பானதாகும். எனவே உயரிய சமூக விடுதலை அல்லது மனிதகுல விடுதலை பற்றிப் பேசும் போது பெண் விடுதலை சார்ந்த யதார்த்தவாதத்தினை பேசவேண்டிய தேவைப்பாட்டுக்குள் ஆட்பட்டிருக்கின்றோம். தீட்சணயமான பார்வைகளும் தூர நோக்குகளுமே சமூக அமைப்பியலை மாற்றக்கூடியனவாகவும் மறுமலர்ச்சி கொண்டதாகவும் ஜனநாயக பண்புகளை ஒரு முகப்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன.

எனவே தூர நோக்கை பெற்றிருப்பதும் தீட்சன்யத்தை தரிசிப்பதும் பெண் ஆளுமை விஸ்தரிப்பில் அவசியமானவைகளாகும். அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக மதங்கள் கூறுவதுபோலவும் மறுமைகளை நம்பி கருத்து முதல்வாதக் கருவிகளுக்கு முதன்மை கொடுப்பது அறிவுபூர்வமானதுமல்ல, ஆக்கப்பூர்வமானதுமல்ல. அவற்றுக்காக போராட வேண்டும் என்றத் தேவைப்பாடு உலகை வென்று தரப் புறப்பட்டுள்ள பலரின் நம்பிக்கையாகவும் நடைமுறையாகவும் காணப்படுகின்றது. பெண் ஆளுமைகள் வெல்லப்படுவதற்கும் பேசப்படுவதற்கும் அவற்றின் எழுச்சிகள் கூர்மைப்படல் வேண்டும். அவை ஆணுக்கு எதிரானதாக மட்டும் மட்டுப்படுத்தாமல் இருப்பதுடன் உண்மையான பெண் விடுதலையை மையப்படுத்தியதாக அமைதல் வேண்டும். செயற்பாட்டுத் திறனுடைய பெண் ஆளுமைகள் எழுச்சியுற முடியாமைக்கும் வெளிப்படுத்தப்பட இயலாமைக்கும் சமூக அரசியல் பொருளாதார காரணிகளின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றமை வெளிப்படையானதாகும்.

சமூகக் கட்டமைப்புகளின் மாற்றம் என்பது பெண் ஆளுமைகள் எழுச்சியுறுவதிலும் தங்கியுள்ளது. சமூகக் கட்டமைப்பில் பெண் சம்பந்தமான பதிவுகள் உயர்வாக இல்லாத ஒவ்வொரு அம்சத்திலும் ஊடுருவிப் பார்க்க வேண்டிய தேவைப்பாடு அதிகமாக காணப்படுகின்றது. கலை, கலாச்சாரம், பண்பாடு, உணவு முறைகள், குடும்ப அமைப்புக்கள், திருமணம், பாலியல், பொறுப்புக்கள், உடை சார்ந்த தெரிவுச் சுதந்திரம், உளம் சார்ந்த தெளிவு, ஒழுக்கம், தான் என்கின்ற சுயம், இயலும் என்கின்ற திடம் என்பவற்றின் வெளிப்பாடுகள் பெண் ஆளுமைகளை உயர்த்தும் அடிப்படையானக் காரணிகளாகும். அதனை பெண்கள் கையிலெடுக்கும் போது அதற்கு ஆண்கள் பக்கபலமாக இருப்பது அவசியமானதாகும்.

பெண் அரசியலில் தன் ஆளுமைகளை விஸ்தரிப்பதற்கு அவளின் அரசியல் ஞானமும் அனுபவமும் அறிவும் ஆழ்ந்த சிந்தனையும் அவசியமா கின்றது. அரசியல் கொள்கை கோட்பாடுகள் யாவும் மனிதகுல விருத்திக்கு மேம்படுத்தக் கூடியனவாகவும் அவற்றை சரியான அறிவு சார்ந்த சமூக அமைப்புகளுக்குள் தத்துவார்த்த ரீதியான சிந்தனைக்குள் சரியான தூர நோக்கு கொண்டதாக அமைத்துக் கொள்வது அவசியமாகும். அரசியல் என்பது அனுதினம் பேசப்படும் மிக முக்கியமான பொருள் என்பதனை எளிமையோடு உணர்ந்துகொள்வதும் அவசியமாகின்றது. அது சார்ந்து பேசப்படும் பொழுது பழமைவாதப் போக்கை வெறுப்பதும் எதிர்ப்பதும் அவசியமாகின்றது. புதுமைச் சிந்தனைகள் புரட்சிகரமான கருத்துக்கள் மாற்றம் என்பவற்றை தனக்குள்ள ஆளுமைகளால் அசைக்கச் செய்தல் அவசியமாகும். எதிர்த்தல் என்பதனையும் வெளிப்படுத்தல் என்பதனையும் துணிவோடு செயற்படுத்தும் ஆளுமைத்திறன் அவசியமாதாகும்.

பெண் தன் ஆளுமைகளைக் கூர்மைப்படுத்துவதிலும் வெளிப்படுத்துவதும் நிலைக்கச் செய்வதும் அது சம்பந்தமாக உலகைப் பேச வைப்பதும் பெண்சார்ந்த முதற்செயற்பாடாக கருத்திற்க் கொள்ளவேண்டும். ஆனாலும் அது பெண்சார்ந்தது மட்டுமல்ல என்பதனையும் சமூகம் - ஆண்கள் சார்ந்த தேவையாகவும் கருதுதிச் செயற்படுவது தேர்ச்சியான வெற்றிக்கும் விடுதலைக்கும் வித்திடச் செய்யும். ஒரு பெண் சமூக அரசியல் பொருளாதார அந்தஸ்த்து கடந்து தனக்கேற்பட்ட தன் சார்ந்தவர்களும் ஏற்பட்ட கொடுமைகளை அச்சமின்றி பயமின்றி கூறத்தொடங்கும் பொழுது அச்சமூகத்தின் விருத்திக்கு முதலாவது வெற்றி கேடயம் கொடுக்கப்படுகின்றது. ஒரு சமூக பார்வையில் பொறுக்க முடியாத தனிமனித சுதந்திரத்தினையும் தன்மானத்தினையும் பாதிக்கக் கூடிய எச்செயலானாலும் அது வெகுவாக பேசப்படவேண்டிய பொருளாகின்றது. எனவே அது உலகம் விழித்துக் கொள்ளும் வரையும் உரத்துக் கூறப்படவேண்டிய இலக்குள்ள செயலாக கருதப்படவேண்டும்.

பெண் ஆளுமைகளை ஸ்திரப்படுத்துவது என்பது ஆண் சார்ந்த ஆளுமைகள் வீழ்த்துவது அல்ல அல்லது ஆணுக்கெதிரான ஆளுமைப் பரிமாணங்களை ஸ்திரப்படுத்துவதல்ல. பெண் தனக்குள்ள உச்சிமுதல் உள்ளங்கால் வரையான அனைத்து அம்சங்களும் வாழ்வியலிலும் பெற்றிருக்கும் தடைகளை அறிவு பூர்வமாக பிய்த்து எறிந்து தனக்குள் சரியான முற்போக்கு தனமான அறிவு சார்ந்த கூர்மையான ஆளுமைகளை ஆக்கிக்கொள்ள வேண்டும். தனக்கிருக்கும் இயல்பான சூழலுக்கும் தான் சார்ந்த சமூக நிலைக்கேற்ப பெண் தன் ஆளுமையை நெறிப்படுத்தி கொள்வதென்பது முக்கியமாகின்றது. மிக சீக்கிரமாக ஆக்கப்படும் பெண் ஆளுமைக்காரணிகள் மிக சீக்கிரமாக காணாமல் போவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது.

தனக்குப் பொருத்தமில்லாத ஆளுமை உணர்வுகளை உணர்ச்சிபூர்வமாக தனக்குள் அப்பிக்கொள்வதும் ஆபத்தானது. எனவே பெண் ஆளுமைகள் தம்மை மிக சிறந்த முறையில் வடிவமைத்துக்கொள்வதற்கான அறிவுபூர்மான சிந்தனைகளும் உயிரியல் வலிமையும், கட்டமைப்புக்களை துண்டாடும் உடைப்புக்கள் தான் தான் என்பதனை தனியாக உணரும் தற்துணிவு, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத உறுதி நேர்மை ஒழுக்கம் முடிவெடுக்கும் திறன் போராடும் நம்பிக்கை திடம் என்பன எல்லாப் பெண்களுக்கும் எப்போது மிகச் சரியாக வடிவமைக்கப்பட்டு முழுமைபெறுகின்றதோ அது பெண் ஆளுமைகளை வென்றெடுக்கும் காலமாகின்றது.

புரட்சிகரமான பெண்கள் தினம் என்பது இவற்றை அறிவு பூர்வமாய் கட்டி எழுப்பும் பணியில் காத்திரமான பங்களிப்பை வழங்கும் நாளாகும். இதனை வென்றெடுக்க தேவ தூதர்களும் தேவதைகளும் இறை அரசர்களும் அவதாரங்களும் வரமாட்டார்கள். பெண்கள் தம் குரலை உயர்த்தி உயிரில் வலிமை உள்ளவரை போராடிப் வெற்றிக்கொள்வதே உலகத்தின் வர்க்க கட்டமைப்பின் வரலாற்றுப் பதிவாகப் காணப்படுகின்றது. எனவே பெண் ஆளுமைகள் ஸ்திரம்பெற ஐக்கியப்பட்டு போராடுவோம்.

## ஒபாமாவும் ஒசாமாவும்

ஒசாமாவை
வீழ்த்தியதாக ஒபாமா கூற
அமெரிக்கர்கள் மாத்திரம் அல்ல
இலங்கையரும்
ஓபாமாவிற்கு வாக்குப்
போடுவார்கள்
நாட்டின் மீட்பன் என்பார்கள்
மாவீரன் ஓபாமா என்பார்கள்
தலையில் கிரீடம் வைப்பார்கள்
ஓபாமாவின் காட்டில் மழை
கொட்டோ கொட்டென்று
கொட்டும்

ஓபாமாவின்
கூட்டம் பதவியில் அமர
இவர்களால்
குவிக்கப் போகும்
சொத்துக்களுக்கு
மக்களின் வாக்குகள்
உத்தியோகப் பூர்வ
அங்கீகாரமாகும்

ஓபாமாவின் பேச்சு
வேதமாகும்
மக்கள் ஆர்ப்பரிப்பர்
ஓபாமாவின் பாட்டு
ஓசாமாவின் மரணம்
பற்றியிருக்கும்
மக்கள் ரசிப்பர்
ஓபாமாவின்
நடனம்
மனித மண்டையோடுகளுக்கு மேல்
அரங்கேற்றப்படும்
மண்டையோடுகள் தங்களின் உடன் பிறப்புகள்
என்றறியாத பொதுமக்கள்
ஆர்ப்பரிப்பர்

நாட்டில்
எதிர்க்கட்சி இல்லாமல் போகும்
அனைத்துக் கட்சிகளும்
ஒபாமாவின் காலடியில் மண்டியிட
ஒசாமாவின் உற்றார் உறவினரும்
ஓபாமா வீட்டுக் குழாயில் சொட்டும்
நீர்த் துளியை நக்கி ருசிக்க
மரண ஓலங்கள் புதிய இசையாகிட
மக்கள் குதூகலிப்பர்

யாரோ சிலர் போர்க் குற்றம் என்பர்
வேறு சிலர் மனித உரிமை மீறல் என்பர்
இவர்களின் வார்த்தைகள்
ஓசாமாவைக் கொல்வதற்கு முன்,
கொல்லப்பட்ட கோடான கோடி மக்களின்
மரண ஓலங்கள்
போர்க் குற்றம் மனித உரிமை மீறல்
எனும் வார்த்தைகளினால்
மூடி மறைக்கப்படும்

வாக்குகள் தேவைப்படும்போது
மீண்டும் ஒசாமாவின் தலைப்பாகை
காட்சிப் படுத்தப்படும்
உணர்ச்சி வசப்பட்டு
மக்கள் வாக்களிப்பார்கள்
மரித்தவர்களின்
மரணச் சான்றிதழ் கரம் கிட்டாத போதும்
மக்கள் வாக்களிப்பார்கள்
ஓபாமாவின் குரல் கேட்டு
ஒசாமாவின் பிணம் பார்த்து
மக்கள் வாக்களிப்பார்கள்
அமெரிக்கர்கள் மட்டுமல்ல
இலங்கையரும்
ஓபாமாவிற்கே வாக்களிப்பார்கள்

ஓபாமாவின் வார்த்தைகள் வேத
வாக்குகளாகும்
பைபிள்களில் முதல் வாசகம்
குர் ஆனின் நற்செய்தி
கீதையின் சாரம்
550 ஜாதகக் கதைகள்
என
எல்லா எழுத்துக்களும் புதுப்பிக்கப்பட்டு
ஓபாமாவுக்கு தேவையான வார்த்தைகளும்
சில இடங்களில் ஓபாமாவின் சிந்தனைகளும்
பதியப்படும்
அமெரிக்காவில் மட்டுமல்ல
இலங்கையிலும்
ஓபாமாவின் வார்த்தைகள் பின்பற்றப்படும்

**சை. கிங்ஸ்லி கோமஸ்**

வெகுஜன அரசியல் மாத இதழ் மார்ச் 2012 இணையத் தளம் : Website: www.ndpsl.org



2011ல் கட்டுநாயக் கவில் ரொசான்...



2012ல் சிலாபத்தில் அந்தனி பேர்னாண்டோ





"ஆளுவோருக்கு கொண்டாட்டம் மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம்"





சிலாபத்தில் மக்கள் போராட்டத்தை ஒடுக்க குவிக்கப்பட்ட படையினர் மற்றும் பொலிஸார்



## சிலாபத்தில் இடம்பெற்ற போராட்டம் ...



எரிபொருள் விலையேற்றத்தை எதிர்த்து மீனவர்கள் நடாத்திய போராட்டத்தில் பொலிஸாரால் படுகொலை செய்யப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையும், கதறியழும் பிள்ளைகளும்...



கொழும்பில் இடம் பெற்ற போராட்டம்

# எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிரான மக்கள் போராட்டம்



"உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்"

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின்

## புரட்சிகர மேதினம்

01.05.2012

அட்டன், யாழ்ப்பாணம், கொழும்பு, வவுனியா

ஆகிய இடங்களில் நடைபெறும்



மே 01

வெளியிடுபவர் இ. தம்பையா, மேல்மாடி இலக்கம் 06, 571/15, காலிவீதி, கொழும்பு 06. கொம் பிரின்ட் சிஸ்ரம், ½ டயஸ் பிலேஸ், கொழும்பு-12.